அரங்கநாதபுரம் கயாரணியம்

# ஆனந்தக் கூத்தன் உலா



ஆக்கியோன்

திராவிட கவிபூஷணம் கவிராஜ பண்டித

**நா. கனகராஜையர்** M.A., M.E.S., Retd.

மதுரை

ஆக்குவித்தோர்

**அரங்கநாதபுரம். வே. முத்துசாமி ஐயர்**

**புதல்வர்கள்**

உ

சிவமயம்

ஆடவல்லான் திருவடிமலர் துணை

திருக்காட்டுப்பள்ளி

அரங்கநாதபுரம்

கயாரணிய மாடக்கோயில்

# ஆனந்தக் கூத்தன் உலா


ஆக்கியோன்

*திராவிட கவிபூஷணம் கவிராஜ பண்டித*

**நா. கனகராஜையர்** M.A., M.E.S., Retd.



ஆக்குவித்தோர்

அரங்கநாதபுரம். வே. முத்துசாமி ஐயர்

புதல்வர்கள்

அச்சிட்டோர்

ராயன் அச்சகம், சென்னை-1.

1958.

# உரிமையுரை

இனிய தமிழைப் பயில்வதையே
        எடுத்த பிறப்பின் பயனென்று
மனித ருணர நாளெல்லாம்
        வழங்கி வாழ்ந்த நாவலவன்
புனித விமலன் கயாரணியன்
        பொற்பூம் பதத்துக் காட்பட்ட
முனிவன் முத்து சாமியையன்
        முறையே யுரிமை யேற்றிடுமே

**நா. கனகராஜன்**



## ஆனந்தக் கூத்தன்

ஐந்தொழிலும் காட்டும் அருமை நடம்புரியும்
சந்தமொடு பாடுமறை தான்றெளிய—எந்தை
அருளே பொழிவிழியன் ஆனந்தக் கூத்தன்
இருளே யொழிக வென.

நா. கனகராஜன்

## ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகள் அனுக்கிரகப் பத்திரம்

॥ श्रीः ॥

श्रीमत्परमहंस परिव्राजकाचार्यवर्य
श्रीमच्छंकरभगवत्पाद प्रतिष्ठित
श्रीकाञ्ची कामकोटिपीठाधिप जगद्गुरु
श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वती श्रीपादैः

लक्ष्मीनारायणार्यतनूजाय श्री. कनक-
राजार्याय क्रियते नारायणस्मृतिः ।

தாங்கள் திருக்காட்டுப்பள்ளிக் கடுத்த கஜாரண்ய க்ஷேத்திரமென்னும் ரங்கநாதபுரத்தில் கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீ சித்ஸபேசர் விஷயமாக இயற்றியுள்ள "ஆனந்தக் கூத்தனுலா" என்னும் பிரபந்தம் பழைய சம்பிரதாயம் தவறாமல் பக்திரஸம் மிக அமைந்திருப்பது தெரிந்து ஸந்தோஷிக்கிறோம்.

விஜயயாத்ராஸ்தானம்
மாம்பலம்—சென்னபட்டினம்
விளம்பி கார்த்திக சுத்த சதுர்தசி

நாராயணஸ்ம்ருதி:

ஆடவல்லான் திருவடி துணை

# முகவுரை

## தேவாரம்

*நின்னுவார் பிறரன்றி நீயே யானாய்*
*நினைப்பார்கள் மனத்துக்கோர் வித்து மானாய்*
*மன்னானாய் மன்னவர்க்கோ ரமுத மானாய்*
*மறைநான்கு மானா யாறங்க மானாய்*
*பொன்னானாய் மணியானாய் போக மானாய்*
*பூமிமேற் புகழ்தக்க பொருளே உன்னை*
*என்னானாய் என்னானாய் என்னி னல்லால்*
*ஏழையேன் என்சொல்லி ஏத்துகேனே*

**திருநாவுக்கரசர்.**

இறைவன் கோயில்கொண்ட தலங்கள் தமிழகத்திற் பல நூற்றுக் கணக்காக உள்ளன. அவற்றுள் மூவர் முதலிகள் திருவருட்பாட்டமுதம் ஆகிய தேவாரமும் மணிவாசகப் பெருமான் திருவாசகமும் பெற்றவை சில. இங்ஙனம் பாடல் பெறாத தலங்கள் பல. சிவனடியாருள் ஒருவர் எனத் தொண்டத் தொகையிலே சேர்க்கப் பெற்ற கோச் செங்கட் சோழ மன்னர் திருப்பணி புரிந்த* எழுபது மாடக் கோயில்கள் சோழ நாட்டின்கண் காவிரிக் கரையை ஒட்டியே இருக்கின்றன. திருமால் அன்பரான நாற்கவிப் பெருமான் திருமங்கை மன்னரே இச்சோழ மன்னர் திருப்பணிச் சிறப்பைப் பெரிய திருமொழியிலே பாராட்டி யுரைக்கின்றார். இம்மன்னர் திருப்பணி பெற்ற மாடக் கோயில்களுள் ஒன்று கயாரணியம் என்ற பெயர் பூண்டிருப்பதாகும். இத்திருத்தலம் தேவாரம் பெற்ற திருக்காட்டுப் பள்ளிக்கும் வைப்புத்தலமாக உள்ள நியமத்துக்கும் இடையில் இருப்பதாம். இத்திருக்கோயில் இன்று அரங்கநாதபுரம் என்ற கிராமத்துக்கு உரிய பெருஞ் செல்வமாக விளங்குகின்றது.

---

* "பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும் பெருங்கோயில் எழுபதினோடெட்டும்" என்று மாடக்கோயில் எழுபத்தெட்டு என அப்பர் அருளிச் செய்கிறார்.

கோச் செங்கட் சோழ நாயனார் என்ற சிவனடித் தொண்டர் சங்க காலத்தில் வாழ்ந்தவரும், சேரமான் கணைக்கால் இரும் பொறையைத் திருப்போர்ப் புறத்து வென்று சிறை செய்தவரும், பொய்கையார் என்ற நிறைமொழிப் புலவரால் களவழி நாற்பது பாடிப் புகழப்பெற்றவரும் தென்னவனாய் உலகாண்டவரும் ஆகிய சோழ மன்னரே ஆவர். சயங்கொண்டார் இம் மன்னரையே "களவழிக் கவிதை பொய்கையுரை செய்ய வுதியன், கால்வழித்தளையை வெட்டி யரசிட்ட பரிசும்" என்று கலிங்கத்துப் பரணியிற் புகழ்ந்துரைக்கின்றார். இம்மன்னர் பெருமானே கோச் செங்கட் சோழநாயனார் என்பது கல்வெட்டெழுத்தாராய்ச்சியிற் புகழ்பெற்ற திருவாளர் வெங்கையர் கருத்தாகும். இவ்வரலாற்றால் இன்று அரங்கநாத புரத்தில் இருக்கும் சிவாலயம் கி. பி. மூன்றாம் நூற்றாண்டிலே தோன்றி யிருக்க வேண்டும் என்று உணரலாம்.

இச் சோழ மன்னர் திருப்பணி இயன்ற பிறகு பல பெரு மக்கள் இத்தலத்துக்கு வேண்டிய திருப்பணிகளை இயற்றி யிருக்கலாம். சில பெருந்தலங்களுக்குத் திருப்பணிமாலை இருப் பதுபோல, இப்புண்ணிய தலத்துக்குத் திருப்பணிமாலை இல் லாமையால் முன்னாளில் வேறு எவரெவர் இக்கயாரணியப் பெரு மானுக்கு அடிமை பூண்டு திருப்பணி புரிந்திருந்தார் என்பது விளங்கவில்லை. அண்மைக் காலத்திலே அரங்கநாத புரத்திற் பெருஞ்செல்வராக வாழ்ந்து சிவபதம் சேர்ந்த கஜாரண்ய திராவிட கவிமணி வே. முத்துசாமி ஐயர் M. A. L. T. இக் கோயிலின் சீரணோத்தாரணத் திருப்பணியிலே தம் ஓய்வுக் காலத்தைப் பயன்படுத்தினார். அரங்கநாதபுர வாசிகளாகிய அந்தணர் பலரும் இவர் மேற்கொண்ட சிவ கைங்கரியத்துக்கு உரிய உதவிகள் எல்லாம் புரிந்தனர். திருக்கோயிலைச் சுற்றி யுள்ள திருமதிலை நன்றாக அமைத்துத் தளியின் மேற்கிலும் வடக்கிலும் வாயில் அமைத்துச் சிவாலயத்தின் புண்ணிய தீர்த்தம் ஆன குளத்தையும் நன்கு செப்பனிட்டுக், கோயில் அகத்தே வேண்டிய திருப்பணிகளையும் புரிந்து, கும்பாபிஷேகமும் செய்விக்கப் பெற்றது.

1945-ஆம் ஆண்டில் நிகழ்ந்த இக் கும்பாபிஷேக காலத்தில், அரசினர் பணியில் இருந்த திரு. R. V. சுப்பிரமணிய ஐயர் B. A.

தம் திருப்பணியாக இக்கோயிற்கண் முன்னாளில் அமையாதிருந்த திருமகள் திருத்தளியை அமைத்து உதவினர். திரு. நடேசய்யர் சகோதரர்கள் நவக்கிரக மண்டபம் அமைத்துக் கொடுத்தனர். வலம்புரி விநாயகனும் முருகப் பெருமானும் தட்சிணு மூர்த்தியும் சண்டேசுர மூர்த்தியும் இத்திருக் கோயிலுக்குச் சோழர் கால முதலே உண்டு. தக்ஷிணு மூர்த்தியின் திருக்கோலச் சிறப்பையும் அம்மூர்த்தி திருமுன்பு வில்வதரு அமைந்திருக்கும் அழகையும் காஞ்சி காம கோடி பீடாதிபதிகள் இத்தலத்துக்கு எழுந்தருளி யிருந்த காலத்தில் மிகவும் மனம் உருகிப் பாராட்டி யிருக்கிறார்கள். திரு முருகன் திருப்பணியாக ஸ்ரீ N. C. ரங்கசாமி ஐயரால் வள்ளி தேவ சேனு சமேத சுப்பிரமணிய மூர்த்தியின் உத்ஸவ விக்கிர கங்கள் செய்விக்கப் பெற்றன.

இங்ஙனமே ஒவ்வொரு திருப்பணியாக நடந்து இத்திருக் கோயில் வளம் பெற்று வருவது கண்ட அன்பின் செல்வர் முதுமீ தமிழ்ப் புலவர் வே. முத்துசாமி ஐயர் கூத்தப் பிரானையும் இங்கு எழுந்தருள்விக்க மனம் கொண்டார். நெடுநாள் அவர் உள்ளத் தில் ஊறிய இக் குறிப்பு நிறைவேறும் காலம் குறுகியது.

முன்னாள் போலவே இந்நாளிலும் ஐம்பொன் சிலைகளை வார்த்து அமைக்கும் திருப்பணி புரியவல்ல சிற்பக்கலை வளர வேண்டும் என்ற நோக்கத்தால் சென்னை அரசியலார் நிறுவி யுள்ள விக்கிரக வார்ப்புக் கலா நிலையத்திலே, சுவாமி மலையில் தலைமைப் பணியை யேற்றிருக்கும் கும்பகோணம் சிற்பியர் குலச் செல்வர் திருவாளர் இராமசாமித்தபதியார், சிவகாமி தழுவும் கூத்தப்பிரான் திருப்படிவத்தையும் அன்பின் பெருஞ் செல்வர் மணிவாசகப் பெருமான் திருப்படிவத்தையும் நன்கு அமைத்து, இத்திருக்கோயிலுக்கு உதவும் நற்பொறுப்பை மிக்க அன்போடு ஏற்றுக்கொண்டார். ஏறக்குறைய இரண்டாயிரம் ரூபாய் செலவில் இப்பணி நிகழ்வதாயிற்று. துன்முகி ஆண்டு கார்த்திகைத் திங்கள் 21–ஆம் நாள் தேவியோடு கூத்தப்பிரான் இக்கோயில் அம்பலத்துக்கு எழுந்தருளத் திருவுள்ளம் உவந்தான். ஏவிளம்பி சித்திரை ஆறும் நாள் மணிவாசகப் பெருமான் தம்மை ஆட் கொண்ட பரம்பொருளின் அணுக்கத்தே திருப்படிவமாக நிற்கும் பேறு பெற்றார். கூத்தப்பிரானுக்கு ஏவிளம்பி ஆதிரைத் திருநாள் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

கூத்தப்பிரானுக்குச் சித்திரைத் திருவோணம் ஆனி உத்தரம் மார்கழித் திருவாதிரைத் திருவபிஷேக வைபவங்களும் மாசி ஆவணி புரட்டாசி சுக்லபக்ஷ சதுர்த்தசிகளில் முறைப்படி அமையும் திருவபிஷேகங்களும் நிகழ்வன ஆயின. இத்திருப்பணிகள் எல்லாம் நன்கு நிறைவேறும் வண்ணம் திருத்தொண்டர் இனத்தில் இன்று சேர்ந்திருக்கும் திரு. முத்துசாமி ஐயர் ஐயாயிரம் ரூபாய் மதிப்புள்ள இரண்டு ஏக்கர் நன்செய் நிலங்களை இக்கோயிலுக்கு உரிமையாக்கினர். நியமம் கோயிலுக்கு முன்பே இங்ஙனம் சில நிபந்தங்களை அமைத்திருக்கும் இப்புண்ணிய சீலர் மார்கழித் திங்களில் தனுர்மாத பூசனை நிகழும் வண்ணம் இக்கோயிலுக்குச் சில நிபந்தங்களை அமைத்திருக்கின்றார்.

நெடுங்காலம் கல்வித்துறைப் பணி பூண்டிருந்து முது பருவத்தே ஓய்வு பெற்ற இப்புண்ணிய சீலர் தாக்ஷிணாத்ய கலாநிதி, திராவிட வித்யா பூஷணம், மஹாமஹோபாத்தியாய, டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் மாணவர் இனத்திலே மிக்க சிறப்புற்ற ஒருவர் ஆதலால், தமிழ் மொழியில் ஆழ்ந்த பற்றும் அகன்றாழ்ந்த கல்வியும் சிறந்த புலமையும் எழுத்து வன்மையும் சொல்வன்மையும் படைத்தவராய் இருந்தார். இவர் இயற்றிய பத்மினி என்ற நவீன கதையும் தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சியும் தமிழ்ச் சங்கப் பெருங்குழுவிலே இவர் கல்வித் திறத்தை நன்கு விளக்க உதவின. இவர் இயற்றிய செய்யுட்கள் ஆயிரக் கணக்கில் கையெழுத்துருவத்தில் உள்ளன. மிகச் சிலவே வெளிவந்துள்ளன.

1912-ஆம் ஆண்டு முதலே இக்குணமணியின் நட்புறவுக்கு உரிமை பூண்டிருக்கும் அளியேன், அன்பின் பிணிப்பானே, இன்று இக் குடும்பத்தின் உறவினன் போலவே நெருக்கமுறப் பயின்று வருகின்றேன். இப்பெரியோர் பல தலங்களுக்கு என்னையும் அழைத்துச் சென்றது உண்டு. ஓரே நாளில் காலைக் கடம்பர் நண்பகற் சொக்கர் அந்தி திருவீங்கோய்மலை நாதர்தளி என்று மூன்று தலத்தின் மூர்த்திகளையும் தரிசித்து வந்த வரலாறும் உளது. இங்ஙனம் சென்ற தலங்களில் இருவேமும் ஒருமை மனம் கொண்டு இரட்டையர் போலவே பாடிய பிரபந்தங்களும் உண்டு. அவையும் கையெழுத்துருவில் இவர் குடும்பச் செல்வமாக இன்றளவும் இருக்கின்றன.

புரவலர்க்கே உரிய வள்ளன்மையும் புலவர்க்கே உரிய நுண்மாணுழைபுலமும் ஒருங்கு பொருந்தியிருந்த இவரும் யானும் நெருங்கிப் பயின்ற அன்புத் தொடர்பை உலகம் உணர வேண்டும் என்ற நோக்காலும், அரங்கநாதபுரத்துக் கயாரணி யேச்சுரத்தே ஆனந்தக் கூத்தன் திருமன்றத் திருப்பணி இரு பெருஞ் செல்வமும் பொருவறப் பொருந்திய இவரால் நிகழ்ந்தது என்பதை உலகம் அறிந்து இன்புற வேண்டும் என்ற கருத் தாலும், நினைவுமலர் உருவத்தோடு இவ்வுலாப் பிரபந்தம் தமிழ் உலகத்தே புகுகின்றது.

தமிழ்ப் பற்றிலே தந்தையார் பண்பை நன்கு பின்பற்றி யிருக்கும் மைந்தர் மூவரும் இப்பிரபந்தம் இயற்றும் திருப் பணியை அன்புரிமைத் தொடர்பு பூண்ட அளியேனுக்கு அளித் தனர். இறைவன் அருளாலும் தந்தையார் முயற்சித் திறத் தாலும் இன்று நல்ல நிலையில் இருக்கும் மு. வைத்தியநாதன், மு. காசி விசுவநாதன், மு. கோதண்டராமன் என்னும் இம் மூவரும் என்பாற் கொண்டிருக்கும் உள்ளன்புக்கு எவ்வாற் றானும் கைம்மாறு இயற்றவல்லேன் அல்லேனாயினும் இவ்வுலாச் செய்யுளை யான் தரும் சிறு நினைவுக் குறிப்பாக அளித்துளேன்.

உலாப் பிரபந்தம் அமையும் முறை இருவகை என்று கூறத் தகும். திருவாரூர் உலா திருவெங்கை உலா திருவிடை மருதூர் உலா முதலியவை போல ஊரொடு சார்த்தி இவை உரைக்கப் படுவது பெரும்பான்மை என்றே தோன்றுகின்றது. மூவருலா தஞ்சைப் பெருவுடையார் உலா திருப்பூவணநாதருலா முதலியவை பாட்டுடைத் தலைவன் பெயரொடு இயைந்து வழங்கக் காண்கிறோம். திருக்கயிலாய ஞானவுலா என்பது இத்துறையில் வழிகாட்டி ஆகும். ஆதியுலா என்ற பெயர் அதற்கு உரியது ஆகும்.

சேரமான் பெருமாள் நாயனார் அருளிச் செய்த ஆதியுலா இறைவன் இருக்கையான கயிலாயத்தோடு பொருந்தி ஞானம் என்ற அடைமொழியும் பொருந்த வந்திருப்பது அதற்குள்ள தனிச்சிறப்பை விளக்குவதாம். திருக்கோவையார் அகப்பொருட் சுவை தழுவியிருந்தும் சிவனருள் விளக்கம் உரைக்க வந்த பெருநூலாக மதிக்கப்படுவது போலவே ஆதியுலாவும் ஞான சாரத்தை விளக்க எழுந்ததே.

உலாப் பிரபந்தங்களில் வரும் பேதை முதலாகப் பேரிளம் பெண் ஈறுக உள்ள ஏழுபருவ மகளிரும் உலாவரும் தலேவன் பால் உண்மைக் காதல் கொள்வதாக உரைக்கும் நெறி உண்டு. பாகவத புராணத்திலே இளஞ்சிறு குழவியான கண்ணனைக் கண்டு உள்ளத்தைப் பறிகொடுத்த பெண்டிர் காதலும் உலாக் காதலும் ஒன்றென்று நினேக்கத் தக்கது. தெய்வந் தொழா அள் கொழுநற் றெழுதெழுவாள்' என்ற வள்ளுவர் வாக்குக்கும் இக்கருத்துக்கும் முரண்பாடு உண்டாகுமே யென்று உணர்ந்த புலவர் சிலர், உலாக்களில் உரைக்கப்படும் ஏழுபருவ மகளிர் திருக்கோயிலேச் சார்ந்த மடவார் வளாகத்தில் வாழும் இறை யடிமைப் பணிபூணும் மகளிர் இனத்தவராம் என்று கூறுவது உண்டு. அங்ஙனம் கூருது, இவ்வுலா மகளிரை உயர்த்திக் கூற வேறெரு வழி உள்ளது. இறைவன் ஒருவனே ஆண்மகன். மற்ற எவரும் பெண்மக்களே. அவனிடம் அன்பு பூணும் முறை யிலே ஏழுபடிகளில் உள்ள அன்பர் இனத்தையே ஏழுபருவ மகளி ராக உலாக்களில் உரைத்தனர் சான்ருேர் என்று கருதுவது மிகவும் பொருத்தமாகத் தோன்றுகிறது. தேவாரப் பாடல்களிலும் திருவாய் மொழியிலும் அகப்பொருட் சுவை பற்றிவரும் திருப் பாசுரம் எல்லாம் அன்பர் அன்பின் சுவையை வடித்துணர்த்த வந்தனவே என்பது சான்ருேர் கருத்தாம். உலாக்கள் இறைவனேயே தலேவனுகக் கொண்டு பாடப் பெறும்போது இக்கருத்துப் பொருத்தமாகும். சோழர் முதலிய மனிதர் பெரு மக்கள் மேற் பாடப்பட்டபோது "திருவுடை மன்னரைக் காணிற் றிருமாலேக் கண்டேன்" என்று நம்மாழ்வார் அருளிய திருவுள்ளக் கிடக்கையைத் தழுவிப் பொருத்திக் கொள்ள வேண்டும். கலிங்கத்துப் பரணியிற் சோழனேத் திருமால் என்றே சயங் கொண்டார் உரைப்பது இங்கு நினேக்கத்தக்கது.

ஆனந்தக் கூத்தனுலா என்ற பெயர் புனேந்து தமிழ் மகள் மடியில் தவழ வரும் இவ்வுலாக் குழவி முன்னேர் கொண்ட யாப்பணி முறைகளேயே பெரிதும் தழுவி இக்கால மக்கள் மனப் போக்குக்கு ஏற்ற சில புதுமைப் பணிகளேயும் புனேந்து வருகின்றது. குழாங்கள் என்ற பகுதி தோன்று முன்னே கயாரணியத் திருக் கோயிலின் வரலாற்றுப் பகுதிகள் இயன்ற வளவு தெளிவாக உரைக்கப் பட்டுள்ளன. திருப்பணித்திறமும் குருவருளும் இவ்வுலாவிற்குச் சிறப்பாக அமைந்த பகுதிகளாம்.

இவ்வுலாப் பிரபந்தத்தை விளம்பி ஆண்டு மார்கழித் திங்கள் ஆதிரைத் திருநாளிலே ஆனந்தக் கூத்தன் திருமுன்பு பெரும் புலவர் பலர் கூடும் நல்லவையிலே அரங்கேற்றும் பொறுப்பையேற்றுக் கொண்ட அரங்கநாதபுரம் வே. முத்துசாமி ஐயர் குடும்பத்தார் அனைவர்க்கும் இறைவன் திருப்பணியில் ஈடுபட்ட அன்பர் பிறர்க்கும் இறைவன் எம்பெருமான் அவரவர் மனம் விழையும் நலம் எல்லாம் அருள்வானாக. சிறப்புப் பாயிரம் அளித்த புலவர் பெருமக்களுக்கு என் வணக்கம் உரியதாகுக. இந்நூலை மிகவும் விரைவில் மிகத் திருத்தமாக அன்புப் பணியென்றே அச்சிட்டுக்கொடுத்த ராயன் அச்சகத்தார்க்கு எனது மனநிறைந்த நன்றி உரியதாகும்.

சிவபரம்பொருள் ஆயிரத்தெட்டுத் திருப்பெயர் பூண்டவன். ஆயிரத் தெட்டுத் திருத்தலங்களை உவந்தவன். அவன் திருவருட்கு உரிமை பூண்ட அன்பர் திருக்கூட்டத்தின் முன்பு தவழ்ந்து வரும் இப் பிரபந்தக் குழவி ஆயிரத் தெட்டுக் கண்ணிகளாகவே தொடுக்கப் பெற்ற ஒரு தமிழ்மணிக் கோவையாம். இறைவன் திருக்கோவை திருவாசகங்களைத் தானே ஏட்டில் எழுதி யேற்றுக் கொண்டருளினான். கமலம் மல்லிகை முல்லை மலர்மாலை சூடும் அண்ணல் எருக்கமாலையும் ஊமத்த மாலையும் உவப்போடு புனைந்தருள்வது போலவே இதனையும் ஏற்றருள்வானாக. அவனருளுடன் இப்பிரபந்த உருவம் பெற்றது என்பதை அவன் திருவுள்ளம் அறியும்.

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே<br>
　　அடக்குவித்தால் ஆரொருவர் அடங்காதாரே<br>
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடாதாரே<br>
　　உருகுவித்தால் ஆரொருவர் உருகாதாரே<br>
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடாதாரே<br>
　　பணிவித்தால் ஆரொருவர் பணியாதாரே<br>
காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே<br>
　　காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே

—திருநாவுக்கரசர்.

மதுரை,<br>
25—12—58

ஆக்கியோன்

# சிறப்புப் பாயிரங்கள்

## சேதுநாட்டு முதுபெரும் புலவர்
## ஸ்ரீ உ. வே. மு. இராகவ ஐயங்கார்
## அவர்கள் அருளியவை

பூந்தண் பொன்னி சூழ்நாட்டுட் பொலியு மரங்க நாதபுரம்
தீந்தண் சோலைத் திருவானைக் காவே போலக் கோச்செங்கண்
வேந்தன் எடுத்த கோயில்களுள் வேழக் காடு விளங்குவதால்
மாந்தர் அன்றிக் களிறுபுகா மாடக் கோயி லின்னவையே. 1

பாடற் கோதற் குரியபழம் பதியாய் விளங்கும் கயாரணியம்
மாடக் கோயில் மற்றிதனுள் மன்றம் பொலிய வுமையோடும்
ஆடற் கோவின் மூர்த்திதனை அமைத்தான் கல்வி யதிகாரி
தேடற் கோட வேண்டாத செல்வன் முத்துச் சாமியம்மா. 2

ஆருந் தமிழோ டாங்கிலத்தும் ஆற்றல் படைத்த அந்தணனற்
பேரும் புகழும் பெறுங்கவிஞன் பெற்ற மைந்தர் பெருமானுக்(கு)
ஊரும் விழாவும் பூசனையும் ஓங்க அமைத்த வாறெல்லாம்
சீரும் தளையும் பெற்றஉலாச் சிறப்பப் பாடித் திகழ்வித்தான் 3

கனக ராஜ கவிராஜன் கலைஞன் காசியபன் கல்வி
தினக ரன்சீர்க் குலபதியாந் திருநாரணன்தாள் பணிந்து [கற்றோன்
அனகன் திருமுன் ஆனந்தக் கூத்த னுலாப்பே ரமைத்ததனை
மனநன் கமைய வரங்கேற்றி வைத்தா னறிஞர் மகிழ்வுறவே. 4

ஆதியுலாக் கேட்டுவந்த ஆடலர னின்றுந்தன்
கோதிலுலாக் கேட்டுக் குனித்திடுக—தீதிலா
தாக்கியோன் ஆக்குவித்தோர் ஆனஅவை யோர் வாழ்க
பாக்கியராய் ஊழி பல. 5

## கலைமகள் ஆசிரியர் வாகீச கலாநிதி

## கி. வா. ஜகந்நாதையர் M.A.,

வளம்பயில் வயலும் மலர்பயில் குளமும்
மறைபயில் தருதிருத் தெருவும்
களம்பயில் நெல்லும் குலம்பயில் பொன்னும்
கலைபயில் உளத்தினர் குழுவும்
விளம்பிய புகழோ டொன்றிய நல்லூர்
விளைமதக் கரியிவ ராத
தளம்பயில் கோயிற் கயாரணி யப்பேர்
சார்ந்துயர் வுடைச்சிவ தலமே. 1

அத்தகு தலத்தில் அந்தணர் மரபில்
அரன்திரு வடிமற வாத
வித்தகக் குடியில் தந்தைதாய் செய்த
மேன்மைசால் விழுத்தவப் பயனாய்
முத்துசா மிப்பேர்க் குரிசில்வந் துதித்தான் ;
முயன்றுகற் றுயர்பட்டம் பெற்றான் ;
முத்தமிழ் அறிவின் முந்திய ஊக்கம்
மூளுறப் புலமைபெற் றுயர்ந்தான். 2

ஆங்கிலம் வல்ல அறிஞனென் றமைந்த
தன்றியும் அருந்தமிழ்ப் பொழிலில்
பாங்குறப் புகுந்து வண்டெனச் சுவையைப்
பண்ணுற நுகர்ந்தனன் ; எளிதில்
தீங்கவி பலவும் பாடும்நா வீறு
சிறப்புறப் பெற்றனன் ; இறைவன்
பூங்கழல் பரவிப் புதுக்கவி மாலை
புனைந்தனன் ; உருகினன் ; வாழ்ந்தான் 3

சங்கரா சார்யன் திருவடித் தொண்டில்
தனியின்பம் கண்டனன் ; அவனால்
எங்கணும் பரசத் திராவிடக் கவிமா
மணியெனும் எழிற்சிறப் புற்றான் ;
கங்கையஞ் சடையான் உறைதரு தூய
தலமெலாம் கண்டுகண் டிறைஞ்சித்

துங்கஅன பினிலே தொண்டரைப் போற்றித்
தொழுதவர்க் காவன செய்தான். 4

புலவர்தம் குழுவிற் புலவனுய் நின்ருன் ;
புரவல ஞகியும் புரந்தான் ;
தலவர லாற்றில் நால்வர்தம் சைவத்
தமிழினில் ஆழ்ந்தின்பம் பெற்ருன் ;
குலவிய தமிழில் அகத்திய னெனச்செங்
கோல்நடாத் தியஐய ரவர்கள்
மலரடி வணங்கி மாணவ ஞகி
மதிப்பினிற் பணிவினிற் சிறந்தான். 5

தன்னுடை யூரில் ஆலயத் தொண்டு
சாலவே புரிந்தனன் ; ஆங்கே
பொன்னினம் பலத்துக் கூத்தனர் உருவைப்
பொற்புறக் குயிற்றியே நிறுவித்
துன்னிய மெய்ந்நூல் விதிப்படி விழவும்
துலங்குற நிகழ்த்தினன் ; பின்னர்
அன்னவன் அடியே புகலெனப் புக்கான்
அகலிடம் புகழினை நிறுத்தி. 6

அன்னவன் மைந்தர், முத்தமிழ் போல
அழகிய மும்மணி போலப்
பின்னிய அன்பும் அறிவும்நற் சால்பும்
பெற்றவர், வைத்திய நாதன்
நன்னயக் காசி விசுவநா தன்சீர்க்
கோதண்ட ராமனும் நாமம்
பன்னுறப் பெற்ருர், தந்தையைப் போற்றிப்
பலபணி பணிந்துசெய் கின்ருர். 7

தந்தையார் நிறுவி வழிபட்ட இன்பத்
தாண்டவ மூர்த்தியின் சீரைச்
சந்தமார் தமிழிற் பாவினுற் பாடத்
தக்கவர் யாரென்று தேர்ந்தார் ;
பைந்தமிழ்ப் புலவன் சுவைக்கவி ராச
பண்டிதன் வித்துவான், தங்கள்
தந்தைபால் அன்பன் கனகரா சையன்
தாண்மலர் வணங்கினர், இரந்தார். 8

அவர்விழை வதனைத் திருவுளத் தேற்றி
அரும்புக ழுடம்பொடு விளங்கும்
சிவனருள் முத்து சாமியந் தணன்பால்
செறிவுறப் பயின்றநண் பெண்ணிச்
சுவையுறு தமிழில் திருவுலாப் பனுவல்
சொற்றனன், கயாரணி யத்தே
நவநடம் புரியும் ஆனந்தக் கூத்தன்
நளினமா மலரடி யிணைக்கே. 9

சொல்லினில் அழகும் பொருளினில் அழகும்
தொடையினில் அணியினில் அழகும்
மல்லலுற் றமைய வகுத்தஇவ் வுலாவில்
மலிசுவை அளந்துரைப் பவர்யார் ?
தொல்லையி னெழுந்த பல்லுலாக் களிலும்
துதைந்தன வாஞ்சுவை பொருந்தி
வல்லமெய்ப் புலவர் உளமெலாஞ் சிக்க
வாய்த்தபல் கண்ணிகொண் டதுவே. 10

முத்துசா மிப்பேர் அந்தணன் பெருமை
மொழிந்தவத் திறத்தினைப் புகழ்கோ ?
வித்தக நித்த சுத்தமா நடத்தோன்
மேன்மைசொல் பான்மையைப் புகழ்கோ ?
அத்தனைக் கண்ட மகளிர்ஏழ் பருவ
அமைதிகூ றியதிறல் புகழ்கோ ?
வைத்தபன் னூலின் பொருளினை யிடையே
வகுத்தவச் சதுரினைப் புகழ்கோ ? 11

எவ்வகை யானும் மிகச்சிறந் தோங்கும்
இத்தமிழ்த் திருவுலாப் பனுவல்
பவ்வமே யாடை யெனவணி பாரில்
பருணிதர் அவையிடை ஓங்கிச்
செவ்விசே ரன்பர் திருவுளத் தணியாச்
சேர்ந்துதற் படைத்தநா வலனைத்
திவ்விய அருளான் எனப்பலர் ஏத்தித்
தினந்தினம் தொழும்வணம் செயுமே. 12

## திருப்புகழ் உரையாசிரியர் தணிகைமணி

## வ. சு. செங்கல்வராய பிள்ளை M. A. அவர்கள்

தயாகுணத்து வே.முத்து சாமிஐயர்க் கான
கயாரணியத் தேவிருக்கை கண்ட—வியாளப்
பனகமணி கூத்தற்குப் பாவுலாச் சொன்னர்
கனகரா ஜையர் கனிந்து. 1

தந்தையார் பக்தி தனயரிடம் காண்மினெனச்
சிந்தை மகிழ்ந்து சிறப்பொடுலா—இந்த
உலகம் அறிய உலவவைத்தார் பொன்மன்
நலகவிதம் பாவால் நயந்து. 2

பொருளழகும் சொல்லழகும் போற்றும் தகைசேர்
அருளழகும் பக்தி அழகும்—தெருளகத்துச்
சீரும் பிறங்கிச் சிறக்குமுலா இஃதென்றே
ஆரும் உரைப்பர் அறிந்து. 3

கலாநிதியாம் எங்கள் கனகரா ஜையர்
உலாப்பாடல் கேட்டங் குவந்தே—நிலாச்சடையோன்
கூத்தாடல் கொண்டுலாக் கொண்டா னெனச்சொல்வேன்
ஆத்தர்க் கெளிய னவன். 4

ஸ்ரீ

## மதுரை ஆசிரியர்

## திரு. நா. அப்பனையங்கார் அவர்கள் அளித்தவை

திருவரங்க நாதபுரம் செப்பு பெரும்பேர்
மருவு கயாரணிய மன்னிப்—பொருவிலா
ஆனந்தக் கூத்தன்றுள் அன்பர்க் கருள்புரியும்
வானுந்தன் னேரில்லா வாழ்வு. 1

அன்ன பெருமான்மேல் ஆனந்தக் கூத்தனுலா
என்னும் பனுவ லினிதிசைத்தான்—மன்னு
கனகராஜன் சொற் கவிராஜ ராஜன்
அனகனையே பாடும் அவன். 2

முத்துசாமிப் பெரியோன் மூவர் திருக்குமரர்
ஒத்தவன்செய் நற்பணிகள் ஓம்புவார்—புத்தமுதாம்
இந்த உலா நூல் இயற்றுவித்தச் சிட்டரங்கில்
தந்து புகழ்புனைந்தார் தாம். 3

**கலைக்கோயில் பண்டித நா. லக்ஷ்மிநரசிம்ம ஐயர் இயற்றியது.**

உலகி னகமும் உயிரி னகமும்
மலருள் மணமும் வணமும் போன்றே
நிலவிய பரம்பொருள் நிலைபெறும் உண்மை
அறிவின் பாகிச் செறியு மியல்பைக்
காட்டி யகலிரு ளோட்டி யுயிர்கள்
நாடிய பொருட்பேறு நீடிய வருள்செயும்
சிவபரஞ் சுடர்க்கே செங்கட் சோழன்
பவபரங் கெடத்திருப் பணிமிகப் புரிந்த
அரங்க நாத புரங்கெழு கோயிற்
றிருக்கயா ரணியத் துருக்கிளர் திருக்கூத்
துவந்தருள் கூத்தன் தவந்தருங் கூத்தன்
எழுந்தருள் விளங்கிய தொழுந்தொறு முருகும்
சிறப்பினைச் சிவற்கே சித்த மமைத்த
நாமலி தமிழ்முத்து சாமி யையன்
இயற்றத் துணிந்தே இனிதுசெய் தமைத்தனன்
நித்திய நிமித்த நிபந்தமு நிறுவினன்
அவன்மகார் மூவரும் ஆண்டருள் கூத்தன்
புகழினை யுளத்தே பொருத்தும் கருத்தொடு
விழாவெலா முறைமுறை விழைவுற நிகழ்த்தி
ஆன்றவர் வாழ்த்துரைக் கமைவா ராயினர்
அன்னவர் விருப்பால் ஆனந்த மூர்த்தி
நடன மூர்த்தி ஞான சபாபதி
உலாவரும் சிறப்பை உலாப் பிரபந்தம்
நெறிபிழையாதே நிலைபெற யாத்தே
தந்தவன் என்னருந் தமையன்
அந்தணன் கனகராச ஆரியனே.

## மதுரை மேலூர்

### பண்டித வித்துவான். S. நாராயணன் இயற்றியது.

மன்ற வாணன் மலர்திரு வருளால்
தென்றமிழ் மகிமை சிவணிய செய்த
அடியவர் கூட்டமும் ஆதிச் சங்கமும்
சைவமா தவரும் தழைத்தினி திருந்த
மையறு சோழ வளநாட் டின்கண்
அறம்புரி கொள்கை ஆன்றோர் பலர்நிறை
அரங்க நாத அணிபுரம் என்றும்
சம்பு கேச்சுரத் தலத்தைத் தமிழில்
ஆனைக் காவென் றழைத்திடல் போலத்
தகுகஜா ரணியச் சால்புநற் பெயரால்
வடமொழி தன்னில் வழங்கவும் பெறூஉம்
நற்றலம் உண்டதில் உற்ற அன்பொடு
கங்கை அணிசடைக் கடவுள் தங்கு
கோயிலொன் றுளதது கோதறு குணத்தோன்
செந்தமிழ் உணர்கோச் செங்கட் சோழன்
விழுமுற ஆக்கிய எழுபது கோயிலுள்
முதற்பணி யென்றே மொழிவதற் குரிய
பேறு பெற்றது பேணும் வலம்புரி
விநாயகர் சண்முகன் விளங்கு தக்கிண
மூர்த்திசண் டேசுவரர் முதலாப் பலவாம்
திருவுரு வங்கள் சீர்பெற இருந்தும்
ஆனந்தக் கூத்தன் அணிசிவ காமி
மணிவா சகர்எனும் மாண்புறு மூவர்
உருவங்க ளில்லா ஒருபெருங் குறையை
எண்ணி அன்பினால் எழிலுற அந்த
முத்திரு வுருவமும் எத்திக் குளோரும்
போற்றுமா றமைத்த புண்ணியன் யாரெனின்
அந்தத் தலத்துள் அந்தணர் குலத்தில்
வந்தவ தரித்த மறையவர் மாமணி
ஆங்கில மொழியில் அறிஞர்மீக் கூறும்

**எம் ஏ** என்னும் எய்தற் கரிய
திண்டிறற் பட்டம் கொண்டினி திருந்தோன்
அமிழ்தினு மினிய அருந்தமிழ் கற்கும்
அவாமிக உந்தவே **சுவாமிநா தையராம்**
தமிழ்க்கட லிடத்துத் தகைபெறக் கற்றான்
தமிழ்மொழி வளர்த்தலும் தாயைப் பேணலும்
அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் பொருந்தி இறைவனைப்
போற்றலும் பூசை புரிதலும் அறம்பல
ஆற்றலும் இவைபோல் அளப்பருங் குணங்கள்
அடைக்கல மாகவந் தடையப் பெற்றோன்
சான்றோர் **முத்து சாமி**யென் றழைக்கும்
இரும்பெய ராளன் இயற்றமிழ்ப் பாப்புனை
திருந்திய உரவோன் பொருந்திய அன்பினன்
அன்னோன் இறைவன் அடியிணை எய்தி
மண்ணுல ககன்றே மறைந்தன னாக
அம்மாண் புடையோற் கெம்மா னருளால்
இம்மா நிலத்தில் இயைந்தநற் புதல்வராய்த்
தோன்றியோர் மூவர் தோன்றிற் புகழொடு
தோன்றுக என்ற தொன்மறை மொழியைப்
பெற்ற சிந்தையர் உற்றதம் தந்தை
என்னமா தவம்செய் திவர்களைப் பெற்றான்
என்னும் மொழியை எய்தப் பெற்றோர்
**வைத்திய நாதன்** மையறு **காசி**
**விசுவ நாதன்** விளங்குகோ **தண்ட**
**ராமன்** என்ற நாமம் பெற்றஅம்
மூவரும் தந்தையார் முந்துற அமைத்த
**ஆனந்தக் கூத்த அமல பிரானுக்(கு)**
உலாவென உயர்ந்தோர் உரைபிர பந்தம்
ஒன்றினி தியற்றி நன்றினி தருள்கவென்(று)
இயம்பின ராகஅவ் வினியநற் பணியை
உச்சிமேற் கொண்டே இச்சகத் துள்ளோர்
வியந்து போற்ற விருப்புறப் பாடித்
தானந்த மில்லா **ஆனந்தக் கூத்தன்**

உலாவெனப் புகலும் ஒருபெரு நாமம்
சூட்டி விளம்பி தூய மார்கழி
ஆதிரை நாளினில் அரங்கினி லேற்றினான்
எவனென வினவின் இரும்புவி யீரே
சாற்றுவன் கேளீர் தகைசால் காசிப
கோத்திரத் துதித்தோன் சாத்திரம் பலப்பல
நாத்தழும் பேற நற்றமிழ்க் கவியினாற்
பொலிவுற யாத்தோன் பொன்றிகழ் கொன்றை
மலரணி இறையோன் மன்னிய சங்கரப்
பெயர்பெறத் தோன்றி மயர்வற விளக்கிய
அத்து விதமாம் தத்துவம் தன்னை
இத்தலத் தின்றும் இனிது வளர்க்கும்
கவினுறு காஞ்சி காம கோடி
பீடா திபதிப் பெரியார் அளித்த
கவிராச பட்டம் கருதியே பெற்றவர்
கழலிணை போற்றும் கருத்துடை யாளன்
சாரதா பீடத் தலைவ ராலும்
பெருமதிப் புற்றோன் பெருகும் உழைப்பால்
மாமது ரைத்தமிழ் மன்னுசங் கத்தார்
நடாத்தும் பண்டித நற்றமிழ்த் தேர்வில்
முதன்மையாய்த் தேறி மூதறி புலவர்
மன்னுபே ரவையில் மின்னுபொற் றோடா
ஏற்றோன் எம் ஏ எனும் பெரும்பட்டமும்
வித்துவான் பட்டமும் விழைந்தே பெற்றோன்
பிள்ளைத் தமிழே பேரந் தாதியே
பரணி உலாவே பகர்கலம் பகமே
இந்தப் பலபிர பந்தம் இயற்றிய
அந்த ணாளன் அனுமந்த புராணம்
பதினான் காயிரம் பனுவலி னியற்றியோன்
விழுமிய தமிழ்ப்பா விடாது பாடும்
பொழுதுபோக் கினையே புந்தியிற் கொண்டோன்
இடையரு தருநூல் நடையுணர் கலைஞன்
நன்றறி யுரவோன் என்றன் மாதுலன்
கனக ராஜக் கவின்பெய ராளன்
இறைதிரு வடியிணை இறைஞ்சும்
மறையவன் மதுரை உறைபவன் மன்னோ.

# கஜாரணிய திராவிட கவிமணி வே. முத்துசாமி ஐயர் திருக்குமாரன் பாலகவி மு. கோ. இராமன் இயற்றியவை.

திருமலிந்த கயிலையில்வாழ் பரம்பொருளை யுலகமெலாம்
தெளியும் வண்ணம்
உருமலிந்த படிவமிட்டு மாடமலி திருக்கோயில்
உவப்பாற் செய்த
பொருள்மலிந்த புகழ்பொருந்து கோச்செங்கட் சோழர்பிரான்
புவியின் முன்னர்
அருள்மலிந்த திருக்கோயி லெனவமைக்கும் கயாரணியம்
அறியார் உண்டோ. 1

கும்பமுனி குண்டிகையின் வருபொன்னித் தென்கரைக்கே
குலவுங் கோயில்
செம்பியர்தங் குலத்தலைவன் களிறேறாத் திருப்பணியாச்
செய்த கோயில்
ஐம்பதினொ டிருபதென்ப அவைதம்முள் முதன்மைபெறும்
அழகுக் கோயில்
எம்பெரிய கயாரணியக் கோயிலன்றோ இறையன்பின்
இணையி லீரே. 2

திருவளருங் கயாரணியத் தமையுமெழி லம்பலத்தே
சிவமே காட்டி
உருவருவா யொளிர்சோதி யானந்த தாண்டவஞ்செய்
உவமை யில்லான்
திருவுருவை யெந்தைமுத்து சாமிஐயர் பொன்மலியச்
செய்தே ஞாலம்
கருணைமழை பொழிவுறவே புரிந்திட்டார் ஆதிரையிற்
கவின்செய் தாரே 3

அற்புதனப் பரமனுலா வாதிரைநற் காட்சிதனை
அகத்தே நோக்கிச்
சொற்பொருளின் சுவையினொடு கற்பனையி னயம்பொருந்தச்
சுவைகள் தோன்றச்
சிற்பரனு மானந்தக் கூத்தனுலாச் செழுந்தமிழாற்
சிறப்பச் செய்தான்
விற்பனனெந் தந்தைநண்பன் கனகராஜக் கவிஞ
விபுதர்வேந்தே. 4

வாழி அரங்க நாதபுர மன்ற வாண னுலாத்திருநாள்
வாழி கனக ராஜப்பேர் வள்ளற் கவிஞன் நீடூழி
வாழி அன்னான் அன்போடு வகுத்த வுலா நூல் வளம்பொருந்தி
வாழி வையம் அறம்மலிக மறைகள் வாழி வாழியே. 5

## அரங்கநாதபுரம் வித்வான், ச. மாரிஐயா இயற்றியது.

பூவுல கிதனிற் பொங்கிய சிறப்பின்
பாவலர் புகழ்ந்திடப் பலநலம் மலிந்தே
நீறணி நெற்றியர் நெருங்கி யெங்கும்
ஆறணி சடையனை யகமுறப் பரவும்
சோறு மணக்கும் சோழநா டதனிற்
பேறு சிறந்த பெரும்புகழ்ச் சிலந்தியாம்
செந்தமிழ் தெளிகோச் செங்கட் சோழன்
சிந்தை கனிந்து சிவபிராற் கமைத்த
எழுபதோ டெட்டென இறையருள் அப்பர்
வழுவறு நாவால் வழுத்திய தளிகளுள்
காவிரித் தென்கரை காவிரித் துலவும்
பாவிரி புகழ்பொலி பண்டைக் கோயில்
அரங்க புரம்பொலி ஆனைக் காடெனும்
வரங்கள் தருதிரு மாடக் கோயிலில்
மனமொழி மெய்களால் மாதொரு பாகனை
அனவர தமும்தொழும் அகநெகி ழன்பன்
செய்யுண் மாலைகள் சிறப்பச் செய்து
பையர வணிந்தோன் பதமலர்ப் போற்றினேன்
நறுந்தமிழ் தெளிந்த நாவலன் பாவலன்
உறுந்திருப் பணிகளை யுள்ளி யுருகுவோன்
முத்தமிழ் வளந்தெளி முத்துசா மிப்பெயர்
பத்த சிகாமணி பரிணத சிரோமணி
கனிவொடு மன்பொடும் கண்ணுதற் கூத்தன்
அனிதர வின்ப வானந்த உருவினை
இடமக லாத இறைவி யுடனுற
மடனகல் மனத்து மணிவா சகருடன்
நல்லிசை ஒலிக்க நாவலர் புகழப்
பல்லியங் கறங்கப் பாங்குடன் உலாவர
அமைத்தனன் ஐந்தொழில் அமைதி விளக்கும்
இமைப்பறு முக்கண் இறைவன் அவற்கே

அத்தகு பெரியோன் உத்தமப் புதல்வர்
சத்தினை யறியும் தன்மையர் மூவர்
திருவுலாப் பவந்தம் செய்தனை தருகென
உருவிலான் உருவொடும் உலாவும் உளத்தினன்
செந்தமி ழாழியுட் செயலுற நீந்தி
அந்தமார் கவிதைமுத் தளித்திடு மறிவன்
பன்மொழிப் புலவன் பண்டித வித்வான்
தென்மொழி தெளிந்த தீங்கவி வேந்தன்
புவியினர் உணர்ந்துயப் பொங்கருட் பனுவல்
கவிமலர் தொடுத்துக் கண்ணுதற் கணிவோன்
ஆனந்தக் கூத்தன் அருள்திரு உலாவினைத்
தேனந்து மாலையாத் தெளிந்தவர் ஏற்கச்
சுவையெலாங் குழைத்துச் சொல்லில் ஏற்றியே
நவையெலாங் குறைய நன்கரங் கேற்றினன்
பொன்னம் பலவன் பொன்னரங் கத்தே
சின்னம் பயிலும் சிலம்பொலி போலவே
விளம்பி மார்கழி வளம்பொலி யாதிரை
விளம்பிய பாட்டின் விளக்கம் விளங்க
உளம்புகு பொருளெலாம் வளம்பெற நவின்று
களம்புக விரித்தனன் கனகரா சையனே.

## பேராசிரியர். அ. ஸ்ரீநிவாசராகவன் M. A.
## தலைவர் வ. உ. சி. கல்லூரி, தூத்துக்குடி
## இயற்றியவை

கங்கை சூடும் பெருமானைக்
கருத்தி லிருத்தி நாளெல்லாம்
துங்கத் தமிழின் துறைபடிந்து
தோய்ந்து தோய்ந்து சுவைக்கடலில்
மூங்கிக் கவிதை முத்தெடுத்த
முத்துச் சாமி மறைப்பெரியோன்
பொங்கும் அரங்க நாதபுரம்
பொருந்த நிறுவும் கூத்தனுக்கே. 1

ஆரத் தமிழும் வடமொழியும்
ஆய்ந்து சிறந்த புலமையினன்
காரை நிகர்ப்பப் பொழிபாடற்
கனக ராஜ கவிராஜன்
நீரை யணிந்து நெருப்பேந்தி
நிருத்தம் பயில்பொன் னம்பலவன்
சீரை யரங்கில் ஏற்றுஞ்சீர்
செழுமைத் தமிழ்க்கே சிறப்பன்றோ 2

ஆடும் பெருமான் கூத்தனுலா
அரங்க மேறும் அம்பலத்திற்
கூடும் புலவர் அனைவரையும்
கும்பிட் டேத்தித் தொழுகின்றேன்
ஓடி யெங்கோ உடலிருக்கும்
ஓடா உள்ளம் உலகமெலாம்
ஆடும் பதத்தின் உலாக்காணும்
அரங்கந் தன்னில் அமைந்திடுமே. 3

संस्कृत विशारद, साहित्यरत्न बिरुदाङ्कितेन व्याकरण साहित्य शिरोमणिना
श्रीमता-मुशिरि वासिना अरुणाचल शास्त्रिणा दत्तेयं

## अभिनन्दन पत्रिका ॥

कावेर्या दक्षिणो तीरे चोलराजेन्द्रनिर्मिते ।
रङ्गनाथपुराधीश गजारण्येशमण्डपे ॥ १ ॥

मुत्तुस्वाम्यार्यवर्येण योभक्त्या संप्रतिष्ठितः ।
माणिक्यवाचकस्तुत्यः शिवकाम्यम्बिकायुतः ॥ २ ॥

नटराजश्चिरं भूयाच्छ्रेयसे प्रेयसे नृणाम् ।
तस्य श्री नटराजस्य वीथीभ्रमणवर्णनाम् ॥ ३ ॥

मुत्वार्य सत्सुतानां तु कामना तुष्टमानसः ।
कविः कनकराजाख्यो धीमान्मोदाच्चकारयाम् ॥ ४ ॥

सैषातु श्रेयसे भूयाद्भक्त्या संश्रृण्वतां मुदा ।
आर्द्रोत्सवे नटेशस्य प्रशस्ते लोकशङ्करे ॥ ५ ॥

कृतः कनकराजेन कविना चित्स भेशितुः ।
वीथीयात्राप्रबन्धोयं जीयादाचन्द्रतारकम् ॥ ६ ॥

चिदाकाशनटस्येयं वीथीसञ्चारवर्णना ।
मोदाय भवतान्नित्यमरुणाचलमानिता ॥ ७ ॥



திராவிட கவிமணி,

வே. முத்துசாமி ஐயர், M. A., L. T.,

சிவமயம்

கயாரணியம்

# ஆனந்தக் கூத்தன் உலா

## காப்பு

### வலம்புரி விநாயகன்

புலம்புரியு மெய்யறிவர் போற்றவருள் நல்கும்
வலம்புரிவி நாயகனை வாழ்த்தி—நலம்புரியும்
ஆனேசன் கோயில்வரு மானந்தக் கூத்தனுலா
மானேச மேற வரும். 1

### கயாரணிய நாதன்

கயாரணிய நாதன் கயிலைமலை நாதன்
சயாரணிய நாதன் தமிழ்சேர்—புயாரணியன்
கோவில்புகுந் தாடுதிருக் கூத்தப் பிரானுலா
நாவில்வரு மெய்யருளா னன்கு. 2

### காமாட்சி நாயகி

நாமாட்சி பூண்டுயர்ந்த நால்வர்தமி ழேற்றபிரான்
வாமாட்சி வேண்டு மறைவல்லி—காமாட்சி
சேவடியைப் போற்றிச் சிரத்தேற்றிற் கூத்தனுலாப்
பாவடிவை யெய்தும் பணிந்து. 3

### நால்வர்

தேவாரம் பாடித் திருவாசக மிசைத்தோர்
மாவாரம் ஈசற்கே வைத்தவர்—பாவாரம்
கூத்தற்குச் சூட்டக் கொடுப்பர் அளியேற்கும்
யாத்தற் கமையு மியல். 4

### சிவனடியார்

அரற்கே யடிமை அரற்கே யுரிமை
அரற்கே யுறவென் றமைந்தோர்—அரற்கேயாம்

தொண்டுபுரி சான்றோர் துணைமையாற் கூத்தனுலாத்
தொண்டுசெயு நெஞ்சம் துணிந்து. 5

## தமிழ்த் தொண்டர்

தண்டமிழின் மெய்ப்பணிக்கே தம்மை யளித்தபுகழ்த்
தொண்டர்பதம் போற்றித் துதித்தலான்—அண்டர்பணி
கூத்தன் கயாரணியக் கோயிற்கண் வாழ்பவற்கே
யாத்தவுலா நாவின் எழும். 6

## தமிழாசிரியர்

அடியேன் பெறவே அருந்தமிழை நல்கும்
நெடியோன் கழற்கமல நேயர்—வடிநாத்
திருநா ரணகுரவர் சேவடியைப் போற்ற
வருமாலோ கூத்தனுலா வாக்கு. 7

## ஆக்குவித்தோர்

கூத்தனுலாப் பாடுகென்று கூறி யவற்கதனை
யாத்தணியும் பேற்றையெனக் கீந்தவர்—ஆத்தநண்பின்
தண்டமிழ்தேர் வாக்கிமுத்து சாமியையன் மைந்தரவர்
வண்டமிழ்போ லெய்துகநல் வாழ்வு. 8

## ஆக்கியோன்

திருவருளி னூற்றூந் திருக்காம கோடிக்
குருவரர்தாள் நெஞ்சகத்தே கொண்டு—தருகுவனல்
ஒள்ளிருக்கு நாவான் உயர்கனக ராஜகவி
உள்ளிருக்கும் கூத்த னுலா. 9

## அரங்கேற்றம்

சீர்விளம்பி மார்கழியிற் செய்யதிரு வாதிரையிற்
தேர்விளம்பி யெம்மான் திருமுன்னே—பேர்விளம்பிப்
பொற்ற கயாரணியம் போந்தருளும் கூத்தனுலாப்
பெற்ற தரங்கேறும் பேறு. 10

## அவையடக்கம்

அருள்வாக்கி னெம்பெருமாற் காந்தொடையல் சூட்டும்
பொருள்வாக்கு சான்ரோர் புலமை—தெருள்வாய்ப்புக்
கொள்ளாத நாவினேன் கூத்த னுலாப்பனுவல்
எள்ளாமை சான்ரோர் இயல்பு. 11

## நூற்பயன்

உள்ளம் இறைவன் உருவங்கண் டின்புறவும்
வள்ளல் அகம்புகுந்து வாழவும்—மெள்ள
நினைவார் விழையும் நெறிகாட்டு நோக்காற்
புனைவாம் புதியதமிழ்ப் பூண். 12

## நூல்

திருவிளங்கு காவிரித் தென்கரையில் மேவும்
அருள்விளங்கு மானேச னன்பின்—உருவிளங்கும்

காமாட்சி ஞானகலை கைகாட்டி யாண்டருளும்
வாமாட்சி வேண்டும் மயில்மருவ—நாமாட்சி

யெய்தும் புலவர் இசைத்துப் புகழ்புனைய
வைதும் வழுத்தியும் வாழ்வுபெறும்—உய்தியினுர்

போற்றத் திருப்பணிகள் பொற்ப வமைத்துருக
வேற்றத்தின் மெய்ம்மை யிஃதென்று—சாற்றுநன்போற்

கோன்மை நலம்பொருந்து கோச்செங்கட் சோழர்பிரான்
நான்மை நிலமும் நயந்துருகி—நான்மை

அரும்பேறு மெய்தற் கவாவி யமைத்த
இரும்பேறு வேண்டுவோர் எய்த—வரும்பேறு

நன்மாடக் கோயிலெனு நாமம் புனைதளியிற்
பொன்மாடக் கோயில் புகுந்தருளி—வன்மாயக்

கூட்டின் மயங்காதே கோயிற் கயாரணியம்
காட்டி யருளும் கருணைமயன்—ஏட்டினிலே

வேதமுனி யோத வியன்பா ரதமெழுதும்
போதமுனி தன்வலத்தே போந்திருக்க—நாதமய

மெய்ப்பொருளைத் தேற்றும் வியப்பார் அறுமுகவன்
கைப்பொருளை ஞாலத்தார் காண்பதற்கே—பொய்ப்பொருளை

ஆறா முகத்தா னகற்றிமற் றைம்முகத்தாற்
பேறா மதனைப் பெறுவிக்க—நீறாகும்

செல்வத்தை யேந்தித் திருமலிய வாமத்தே
சொல்வித்தை யெல்லாம் சொலியிருப்ப—மல்வித்தை

வாள்வித்தை வேண்டுகிலேம் வாழ்வுப் பெருவித்தை
கோள்வித்தை யென்றே குறிக்குமன்பர்—ஆள்வித்தும்

எல்லாம் அருளும் இறைவியொரு பாலிருக்க
நல்லார் திசைக்கு நடப்பதற்கும்—வல்லாத

கோள்களொரு பாலிருந்து கும்பிட் டடிமைசெய
நாள்களெலா மன்பருக்கு நன்றாக்கி—ஆள்கழலன்

நாடித் தொழுபவர்தம் நன்னெஞ்சைக் கோயிலெனத்
தேடிப் புகுந்தருளும் சேவடியான்—பாடித்

திருநா வரசர்தரு தேவார மாலை
ஒரு நாளு நீங்கா வுருவன்—திருநாள்

மண நாட்கண் போந்து மறித்து வழக்காடி
எண நாட்டுஞ் சுந்தரர்நெஞ் சேற்றோன்—வணமாய

சொல்லமுத வாசகமும் தூயதிருக் கோவையும்
நல்லமுத வாக்கா னவில்வித்து—வல்லவணம்

ஏட்டி லெழுதி யெழுதினேன் யானென்று
நாட்டியகை யொப்ப நலத்தினான்—பாட்டியலும்

பொற்பி னுருவமோ போதமரி பூரணமோ
அற்பின் முடியோ அருட்கனியோ—வெற்பின்

முடிமே லமர்ந்த முடிபொருளோ செம்மை
வடிவேய் கமலமலர் வாழ்வோ—நெடிதேயாய்

நாகணையிற் கண்வளரும் நற்பொருளோ பொற்பொருளோ
ஆகமமே காட்டும் அரும்பொருளோ—யோகநெறி

ஞானநெறி கண்டுணரும் நல்லோர் மனக்கருத்தோ
மோனநெறி காட்டும் முழுப்பொருளோ—வானநெறி

தேடித் திரியேற்க தேடி யெனையடைக
பாடிப் பராவும் பரிசுணர்க—நாடிப்

பெறற்குரிய பேற்றுட் பெரும்பேறு வேறின்று
உறற்குரிய வென்னை யுறுகென் — றறப்புகலும்

ஆனந்த மூர்த்தியோ ஆண்மையே பெண்மையொடு
தானந்த மெய்துந் தவத்துறையோ—வானந்த

மண்ணாந்த வந்த மயக்கமோ வேணிமேற்
பெண்ணாந்த வந்த பிறங்கொளியோ—பெண்ணாந்த

வாம மறைய வகுத்தருளும் ஆண்மையோ
நாம முருவமிலா நாயகமோ—சோமனொடு

சூரியனைப் பாவகனைத் தோற்றமுறு மம்பகமாய்
வீரியமே காட்ட விளக்குமொன்றோ — ஆரியமும்

பைந்தமிழும் வேறு பலமொழியும் வேண்டளவு
சந்தமுற வோதுதனித் தத்துவமோ—வந்த

அனந்த மறைகளு மாய்ந்தாய்ந்து தேரு
தனந்த மஃதே யனாதி — மனந்தனும்

வாக்கான் அணுகவும் மாட்டாத தோற்றமென
நோக்கான் விளக்கியருள் நுண்மையோ—தீக்கால்

புனல்மண்விண் காயமெனப் போந்த பொருளோ
மினல்போ லொளிரும் வியப்போ—அனலூர்தி

வேதனூர் நான்முகத்தான் வேண்டித் தொழுதுருகும்
ஞாதமோ ஞானமோ ஞாதுருவோ—பாதமே

நாரணனூர் பற்றரிய நல்லொளியோ பாயவரும்
வாரணமே வேங்கையே வாழ்வுபெறப்—பூரணமாத்

தோலுரித்துப் போர்த்துடுத்த தொன்மைத் திருவுருவோ
நூலுரைத்த லாகாத நோன்மையோ—பாலுரைத்த

லொண்ணாத வொன்றோ வுலகமெலாம் தானேயாய்
எண்ணாலளப்பரிய வேற்றமோ — கண்ணால்

அருள்கனியும் அன்புருவோ ஆற்றலிட மேவும்
பொருள்கனியும் சொல்லின் பொருளோ — மருள்கடியும்

தூய்மை மலிந்த சுவைமருந்தோ வெப்பொழுதும்
செய்மை யணிமையிலாச் செம்பொருளோ—வாய்மையே

ஆணையெனக் கொண்ட அரசோ அறிவமைச்சோ
கோணை நிறைந்த குறிப்பொருளோ—வீணை
இசைத்துலக மெல்லாம் இனிமைக்குண் மூழ்க
அசைத்துருகும் வண்மை யமைப்போ—நசைத்திறனாற்
சீகாழிப் பிள்ளை திருவாக் கமுதுண்ணியர்
பாகா யுருகுமனப் பண்பானே—தோகாய்
அமுத முடையாய் அமுத மருள்வாய்
அமுத மயமாம் அவற்கே—அமுதமிது
வள்ளம் நிரம்பி வழியத் தருகென்றே
உள்ளம் கசிந்தே உரைத்தருளும்—வள்ளலோ

ஆறுமுகப் பிள்ளைக்கும் ஆனைமுகப் பிள்ளைக்கும்
சீறுமுகத் தையனுக்கும் செய்வரிய—பேறுதனைப்
பாத மிதயத்துப் பைங்கோயில் வைத்துருகும்
போத முனிவன் புதல்வனாற—நாதமய
வேதமவன் நாவான் வெளிப்படச் செய்தருளும்
காத லுருவமோ கட்டுரைத்தே—யோத
எவர்க்குமெளி தாகா இறைமைப் பெருக்கோ
உவர்க்கு முலகவாழ் வுள்ளே—கவர்க்கு
மனத்தை வசிக்கு மணியோ மருந்தோ
தனத்தை யருளுந் தயாவோ—இனத்தையே

கண்மணிப்பூண் பூட்டிக் களிக்கடலு ளாட்டுவிக்கும்
விண்மணிக்கு மேம்பட்ட மெய்ம்மணியோ—மண்மணக்கும்
சோணாடு செய்தபெருந் தொன்மைத் தவவுருவோ
நாணாளு மன்பர் நயந்துபணி—பூணா
வணங்கிக் கிடக்க வரமருளா நின்ற
குணங்கட் கிடமாம் குறியோ—இணங்கும்
அடியார்க் கெளிய அருட்பிழம்பை யெவ்வாறு
ஓடியாத் திறத்தா னுரைப்பேம்—முடியாதென்று
ஆரணத்தி னுட்பொருளை ஆய்ந்துணர்ந்த மெய்யன்பர்
ஏரணத்தி னெய்துகிலேம் என்றுரைக்கும்—பூரணத்தைச்

சில்வாழ் நாட் பல்பிணிச் சிற்றறிவிற் சிற்றுயிரும்
நல்வாழ்வா னெய்த நயப்பானை—எல்வாழ்வின்

உள்ளுறைய வைத்தானை யோதுவதற் கோத்துளவோ
எள்ளுறையு நீங்காதே எங்கெங்கும்—உள்ளுறையாய்

நின்று னிருந்தான் நிறைந்தா னொளிவிளங்கத்
தன்றுள் வணங்கத் தயாவிளக்கி—நன்றாக

வாழும் வழியும்பின் வாழ்வின் முடிவெய்தத்
தாழும் வழியுநன்கு தந்தருளி—வீழும்

உலகமயல் போக்கும் உறுதுணையாய் நின்றான்
அலகிலறி வானந்த மானுன் – கலகம்

இடுமதங்க டோறும் இலங்கி நிறைந்து
கெடுமதியு மெய்ம்மை கிடைப்ப – வடுவொழித்து

யானே யுலகமென யானே யுயிரென்ன
யானே யிறைவனென வெல்லவர்க்கும்—கோனே

அவனென் றறிய அறிவித் தருளிச்
சிவனென்று நின்றபெருஞ் செம்மல்—தவமென்று

தம்முருவங் காட்டும் சனகா தியருணரச்
சொம்முருவ மோனத்தே சொற்றருளும்—செம்மைபொலி

தேவன் திருவடியிற் சேர்வான் அருத்திபெறும்
நால்வர் தமிழ்மறையை நச்சினேன்—யாவருமே

போற்றிப் பயன்பெறவே பொன்னியின் தென்கரையில்
நூற்றினு மிக்க நுழைகோயி—லேற்றிருந்தான்

தேவாரம் பெற்றுத் திருவாசகம் பொருந்தும்
வாழ்வாகும் கோயில்களுள் வாழ்வுகப்பான்—நாவாரும்

மன்னர் பணிந்து வரம்வேண்ட வாரணங்கள்
நன்னர் வழங்கு நவவனத்தே—தன்னநிலை

வேண்டு மெனவிழைந்து விண்ணோர் பெரும்பேற்றை
யீண்டுளவர் எய்தற் கிசைப்பானாய்—நீண்டபுகழ்

வாய்ந்த சிலந்தியாய் வாழ்பிறப்பி லானைக்கா
வேய்ந்த வலையின் விழுப்பத்தான்—தோய்ந்த

அருட்கடலின் வீழ்ந்த அரசென்று சான்றோர்
பொருட்சுடர வேத்தும் புகழான்—மருட்கடலைக்

கோதென்று தாண்டிநிமிர் கோச்செங்கட் சோழனும்
தீதொன்று மில்லாச் சிவச்செம்மல்—மாதொன்று

வாமனுக்கென் றுங்காங்கு மாடமலி கோயிலென
நாமமுறச் செய்வித்த நற்றளியுள் – நேமமெனுங்

கோயிற் கருகே குணதிசையை நோக்கிவளர்
ஞாயிற் கிடையமையு நற்கோயில்—ஞாயிறு

காலை யெழுந்து கரங்குவித்துப் போற்றிசைக்கும்
சோலை யிடையே சுடர்கின்ற—மேலைக்

பழம்பொருளாய் மெய்ப்பொருளாய்ப் பாடற் பொருளாய்
வழங்கரிய மெய்ம்மை வழக்காய்த்—நழங்கொலிசால்

இன்னியங்கள் என்றும் இயம்பும் அரங்கபுரம்
மன்னியக யாரணிய வள்ளலெம்மான்—தன்னினிய

நற்பணிக்குத் தம்மை நயந்தமெய் யன்பருக்குப்
பொற்பணியுங் கற்பணியும் பூட்டுவான்—கற்பணியும்

ஐம்பொற் பணியும் அமைக்குமனத் தன்பர்தமைச்
செம்பொற் பதத்தாற் சிறைசெய்வான்—நம்பன்

எலாமவனே யென்றுருகு மெண்ணமொன்றே யுள்ளார்க்
கெலாமவனே யாகி யிருப்பான் – நிலாமவுலிச்

செஞ்சடைமேற் கங்கை செறிந்தடங்க மாலிமயத்
தெஞ்சலிலா வேள்வி யிசைந்திருந்தான்—நஞ்சணிந்த

கண்டத்தான் காரைக்காற் காரிகையார் பேயுருவிற்
கண்டத்தா வென்றே கனிந்தழைப்பக்—கண்டத்தான்

அன்னேயோ வென்றே யழைத்தருளு நம்பெருமான்
முன்னேயோ பின்னேயோ முற்றுமோ—என்னேயோ

என்றுசிவ காமி யெதிரொருசான் றுயிருப்ப
நன்றுபெரு நட்டம் நயந்தபிரான்—அன்றுதிருப்

பேரம் பலத்தின்கண் பெண்ணொருத்தி கண்பனிப்ப
வீரம் புலப்படுத்தும் வித்தகன்—ஈரம்

துளிக்கும் இதயத்தே தோன்றிய வண்ணம்
களிக்கும் திருக்கூத்துக் காண—அளிக்கும்

திருவுள முண்டோ சிவமே சிவமே
அருளுவ துண்டோ அமல—உருவுரு

வேய்ந்தே யெமக்கென்றே யாண்டே திருக்கூத்து
வாய்ந்தே விளங்குதியால் வள்ளலென—ஆய்ந்துணர்ந்து

நூலு முறையு நுழையுணர்வான் யாக்குமுனி
நாலு மறையு நவின்றமுனி— சாலும்

பழமை தெளிந்த பதஞ்சலி வேண்டக்
கிழமை பொருந்து கிரியை—தழுவும்

புலிப்பாதன் வேண்டிப் புகழ்ந்திரந்து நிற்பச்
சலிக்காது தாள்வளைத்துத் தானே—ஒலிக்காத

வேதமே கொண்டாட மெய்க்கூத் துவந்தருளும்
போதமே வாழும் புலியூரிற்—சாத

மரணபந்த நீங்கி மனிதரினம் வாழக்
கரணபந்தம் காட்டிக் களிப்பாய்—இரணபந்த

மன்றத்தே கூத்துகந்த வள்ளற் பெருமான்முன்
குன்றத்தே கூத்தாடும் கொள்கைபோல் — நன்றுற்ற

ஆலவாய் வாழ்வெள்ளி யம்பலத்தே கான்மாறி
நூலவாம் வேந்தன்மன நோன்மைவெலச்—சாலவே

ஆடியருள் கூத்தன் அருள்வாத வூரடிகள்
பாடியருள் வாசகத்தே பற்றுளங்கொண்—டோடிவந்தே

உத்தர கோசமங்கை யுட்புகுந்து தாண்டவத்தால்
உத்தரமும் தக்கிணமும் உன்மத்த—சித்தமுறச்

செய்கின்ற செல்வன் திருப்பேரூர் மன்றத்தே
நைகின்ற நெஞ்சர் நனியுருக—மெய்நின்ற

கூத்தாடும் கூத்தன் குனித்த புருவத்தன்
ஏத்தாடும் அப்பரையும் ஈர்த்தருள்வான்—மாத்தலமாம்

ஆலங்காட் டாடியே அன்பரையாட் கொண்டருள்வான்
காலங்காட் டாதருளும் கான்மலரான்—கோலங்காண்

ஆனைக்காட் டுள்ள அழகுத் திருமன்றுள்
தேனைக்காட் டுள்ளத் திருக்கூத்து—மானைக்காட்(டு)

உள்ளத்தான் வந்தருளும் உண்மை வரலாற்றை
அள்ளத்தான் கொள்ளத்தான் ஆற்றலுண்டோ—வெள்ளத்தான்

வேணியான் பாணியான் வேதத்தான் போதத்தான்
காணியான் ஆகக் கருத்திசைந்து—பேணிய

மாணிக்க வாசகனை வாழ்வுப் பெருவிளக்காய்க்
காணிக்கு மேலாகக் கண்டவன்பன்—வாணிக்கு

வாக்கைக் கொடுத்து மனத்தைச் சிவத்துக்கே
ஆக்கி நிறீஇயமெய் யன்புருவன்—நோக்கும் 105

தொடையும் நயம்பொருந்தச் சொற்றொடுக்கும் செய்யுள்
நடையின் இறைக்கணியும் நல்லோன்—புடையின்

இருக்கும் சிவதலங்கள் எல்லாம் இதயம்
உருக்கும் சிவநிசியில் ஓகை—பெருக்கும்

கருத்தோடு சென்றுசென்று கைகுவிக்கும் வாழ்வான்
திருத்தேடு நெஞ்சைத் திருத்தி—உருத்தேடும்

வண்ணம் பொருத்திய மாமறையோன் காஞ்சிவரும்
அண்ணல் குருவரர்தாட் காட்பட்டோன்—பண்ணும்

இசையும் பொருந்தும்விரு தேற்றோன் தமிழ்க்கே
நசையும் கருத்தும் நயந்தோன்—வசையிலாத் 110

தாய்முத்துத் தந்த தமிழ்முத்து சாமியென
வாய்முத்து வாக்கமையும் வண்கவிஞன்—சேயமுதது

மேதகவு வேண்டிய வேங்கட ராமையன்
தாதையெனக் கொண்ட தவத்தனயன்—சூதறியான்

செற்றம் பகைமை சிறிதுமுளத் தேற்றாதான்
குற்றம் பொருந்தாக் குணநிலையம்—வெற்றம்

விழைந்தும் பிறரை விழுமமுறச் செய்யாக்
குழைந்த மனங்கொள் குணவான்—தழைந்த

அரங்கபுர வாழ்விலே ஆயிர நாட் பேறாய்
வரங்கள்பெறத் தன்மரபை வைத்தோன்—கரங்கள் 115

படைத்தபயன் எம்மான் பணிபுரித லென்றே
படைத்தவுயிர்க் கெல்லாம் பகர்வோன்—துடைத்த

கருமத்தா னாகவே காசினியில் வாழ்ந்தான்
தருமத்தா னாகவே தன்னுள்—மருமத்

தெழுந்த கருத்தோ டிறைபதிகள் தோறும்
எழுந்த கவிதை இசைப்பான்—அழுந்திய

உள்ளன்பா னெஞ்ச முருகியே நாக்குழற
வள்ளல்பால் நின்றே மயங்கிநிற்பான்—மெள்ள

வளர்ந்த குடும்பத்தின் மைந்தர் மகளிர்
கிளர்ந்த பெயரர் கிளத்தும்—வளந்தெரிந்தும்

எல்லா மிறைசெயலென் றேமாப் புறவல்லான்
நல்லார் புகழ்க்குரிய நல்லொழுக்கன்—எல்லாரும்

### அம்பலவாணன் திருவருள்

பொன்னம் பலத்துப் பொருளை வணங்குதற்காச்
சின்னம் பொருந்தச் சிவமயமாய்—அன்னம்

அடிபணிவார்க் கீந்தருளும் ஆடவலான் கோயில்
பொடியணியு மேனியொடு புக்கான்—கடிகமழும்

பூமாலை வேய்ந்து புகழுமன்பர் முன்னின்றே
பாமாலை சூட்டிப் பராவினான்—நாமாலை

தந்தருளும் வள்ளலைத் தன்விழியே வாயிலா
வந்தருளும் நெஞ்சமலர் வாழ்வினை—எந்தையே

பொன்னினிய லம்பலத்தே பூம்பதத்தா னாடியருள்
இன்னினிய தெய்வதமே யீடில்லாய்—மன்னினிய

நன்றே நினைந்துபுரி நல்லன்பர் நெஞ்சமெனும்
மன்றே யுறைந்த மறைப்பொருளே—கன்றே

அழைப்ப தறியகிலா ஆவுளதோ ஐய
பிழைப்ப பலவேனும் பெற்ற—தழைப்புளே

நின்னை நினைந்து நினாதுருவே பேணுநெஞ்சம்
என்னை யடைகென் றிசைத்தனையே—அன்னை நீ

அத்தனீ யென்ன அறிந்தே யடைந்துள்ளேன்
மத்தனே னென்று மருலைய—சித்தம்

இனைவார்க் கினைவகற்றி யானுளனே யென்று
வனைவாய் திருவருளின் வாழ்வை—அனைவோர்க்கும்

உற்ற வுறவுள் உயர்ந்த உறவலையோ
பெற்ற பொருளுட் பெரிதலையோ—கற்ற

கலையுட் கருத்தும் கனிவும் தெளிவும்
நிலையுட் பொருத்து நிலையே—வலையுட்

படுவாரை மீட்கப் பதங்குனிக்குந் தேவே
விடுவாரைப் பற்றி விடாதாய்—வடுவாரா

நெஞ்சத்தார் வேண்டுமுனே நின்னையே நீயளித்தி
எஞ்சத்தான் வாழ்வருள்வர் ஏனையோர்—அஞ்செழுத்தைக்

கையானே காட்டியிரு கால்காட்டி யாட்கொள்ளும்
மெய்யானே வேதியனே வித்தகனே—செய்யா

மறைமேல் மறைந்த மறையே மறையா
இறையே இஃதொன் றிரப்பல்—குறையா

திரப்பவர்க் கீயும் இறைவனீ யென்ப
கரப்பவர்முன் சென்று கரையும்—இரப்பாளன்

யானலனே நின்பாலே எய்தியுளே னீந்தருள்க
ஞானமோ பத்தியோ நானறியேன்—மோனமே

பூண்டிருக்கும் யோகறியேன் போற்றுநெறி நன்கறியேன்
ஆண்டிருக்க நீயிசைதி யாயினே—ஈண்டிருக்கும்

நின்னுருவை யெம்மூர் நியமத்தே யாங்காணப்
பொன்னுருவே போலப் பொலிவுற்று—மன்னுறவே

நீயே திருவுள்ளம் நேர்ந்தருள வேண்டுகின்றேன்
நாயேன் கருத்தறிந்தாய் நல்குவாய்—வாயே

மனமே யணுகரிய மாமறையே ஞான
கனமே கலையின் கருத்தே—அனமே

யுரைத்த மறைமொழியின் ஊற்றே யுளத்தைக்
கரைத்த வுருவக் கனிவே—நிரைத்த

இசையா னியன்ற எழுதா வெழுத்தே
அசையா தசைந்த அசையே—பசையாளர்

சீர்பெறவே செய்தருளும் சீரே தெளிந்துணர்வார்
சார்புறவே வாய்த்த தனித்தனையே—பேர்புகல்வார்

அன்பான் அடையும் அடியே தொடுத்திசைத்துத்
துன்பான் இசையாத் தொடையேயோ—வன்பாலே

பாடப் படாதியலும் பாவே யதனினமே
தேடப் படாத செழும்பொருளே—ஆடவல்லாய்

கல்லாக் கலைஞ கலைக்குரவ கண்டுணர்வார்
சொல்லாற் சொலவரிய தூய்மையினாய்—வில்லாளி

எம்மூரி லிவ்வுருவோ டிவ்வணமே போந்தருளித்
தம்மூரிஃ தென்றுநினைச் சார்ந்ததொண்டர்—சொம்மூரப்

போற்ற வெழுந்தருள்க பொன்னம் பலமமையேம்
ஆற்றலிலேம் வெண்பொன் னவைசமைக்கத்—தோற்றமுறும்

செம்பினமை யம்பலமும் செய்யேம் சிலந்தியாம்
செம்பியனே செய்த திருத்தளியுள்—வம்பியலும்

சிற்றம் பலமே சிறியே மமைக்கின்றேம்
வெற்றம் பலமென்று வேண்டாதே—யுற்றங்கு

உவந்தாடுங் கூத்தனாய் ஓங்கார மூர்த்தி
நிவந்தாட வாராய் நினையே—பவந்தாழும்

மாந்தரெலா மாங்குவந்து வாழ்த்த வரந்தருவாய்
சாந்தநெறி மாதவர்க்குச் சார்பாவாய்—போந்தருளும்

நின்னாற் கயாரணிய நின்றளியு ளொன்றுக
மன்னா திருமன்றுள் மன்னுகவோ—பொன்னைய

தேவே நினதருட்கண் செவ்வி தருள்கவென
நாவே மனமே நனியுருகப்—பாவே

புனைந்திரந்த அன்பன்முனம் பொன்மன்றக் கூத்தன்
வனைந்தபுது மன்றம் வரவே—நினைந்தருளி

வையத் தலத்துண்மிகு மாண்புறு கயாரணியம்
உய்யத் துணிவார்க் குறையுளாச்—சையமெனச்

செங்கண் வளவனே செய்த திருப்பணியாய்
அங்கண் விளங்கு மஃதறிவேன்—இங்கண்

அடைவார்க் கருளியவா றுங்கும் பணிவார்க்
குடையா னெனவே யுரிமை—தடையிலா

தாக்க வமைந்தேயவ் வம்பலத்து ளாடல்புரிந்
தாக்க முனக்கே யளிக்கின்றேன்—பாக்கள்

எனக்கே யிசைக்கு மிதயமுளா யென்று
நினக்கே புகழ்வாழ்வு நேர்ந்தேன்—மனக்கோயில்

செய்துவந்தாய் இத்தனை நாள் சித்தமெலா மன்பாக
எய்துகின்ற யென்ப தினிதறிந்தேன்—மெய்தெளிய

நூற்கேள்வி வேண்டுமோ நோன்புதவம் வேண்டுமோ
மேற்கேள்வி யாய வியன்கேள்வி—மாற்கேள்வி

பெற்றாய்நீ யாதலாற் பெற்றனையிப் பேறென்று
நற்றாய் நிகர்ப்ப நவின்றருளிப்—பற்றும்

எனையே மறவாதி யென்றுமே யென்றான்
தனையே இறைஞ்சித் தலையான்—மனமீண்டான்

## குருவரர் திருவருள்

சங்கரனே யென்றுளத்தாற் றுபதர்கள் போற்றுகின்ற
மங்கள மூர்த்தி மறைமூர்த்தி—பொங்கரவப்

பூண்மறைத்த காரணத்தாற் பூரண சிவானந்தப்
பூண்மறைத்த செம்மேனிப் புண்ணியன்—கோண்முறையே

காட்டியருள் நோக்கத்தாற் காலடியிற் றோன்றியதா
நாட்டினறி வாளர்புகல் ஞானமணி—பாட்டினிய

வாக்கின் வடமொழியின் வள்ளல் வழியடியார்
நோக்கின் மனத்தில் நுழையுருவம்—மேக்குயரும்

பாக்கியமி தாமென்றே பண்டைமறை யுட்டுருவி
வாக்கியநான் கோதியருள் வாய்மலரான்—தேக்கிய

பேரின்பம் வேறெங்கோ பேணிப் பெறுவதன்றே
ஆரின்ப மீங்கே யமையுமென்று—தேரின்பம்

தந்தருளு நாவரசு சத்துணர்ந்து சித்துமயம்
வந்தருளு மார்க்கமருள் வாகீசன்—சந்ததமாம்

ஆனந்த ஞானம் அருள்ஞான சம்பந்தன்
வானந்து பாலரு வாயினன்—மோனந்தன்

நோக்கத்துக் காகாமை நோன்பால் விளக்கிநங்கள்
ஆக்கத்துக் காக அவதரித்தான்—மோக்கமெனும்

காணிக்குக் கைகாட்டிக் கால்காட்டி முன்சென்ற
மாணிக்க வாசக மாதவன்—பேணிக்கொள்

மெய்ப்பொருளைத் தேருதே வேதத்தால் வாதிப்பார்
பொய்ப்பொருளைத் தீய்த்த புராந்தகன்—கைப்பொருளைக்

காண்மினென நால்வர்க்குக் காட்டியருள் மெய்க்குரவன்
பேண்மினென மெய்த்தவமே பேசினேன்—கோண்மனியர்

தேற்ற மொருமையென்று சித்தாந்தம் செய்தருளும்
தோற்றம் பொலியுருவச் சுந்தரன்—மாற்ற

மனமிறந்த மெய்ம்மை மனித்தரின மெய்த
வனமிறந்து நாடெலாம் வந்தோன்—முனமிறந்த

நூலெலாம் வாழ்ந்திருக்க நுட்பவுரை சொற்றருளி
மாலெலாம் மாய்த்தருளும் வாக்கமுதன்—ஆலடியில்

மோனமாய் வீற்றிருந்த முற்றறிவின் நற்பிழம்பே
ஞானமா மார்க்கமினி நானிலத்தே—யீனமற

நிற்குமா வந்த நிலையனிவ னென்னவே
கற்குமா வந்த கருணைமுனி—ஒற்கமற

நாட்டு மரபின்வரு ஞான குருவரருள்
பாட்டு முறையும் பயில்புலவர்—கேட்டுருகு

நாவன்மை மிக்கு நலமே யுருவாகித்
தேவன்மை யெல்லாம் திரண்டுவரு—மாவன்மை

ஞானகுரு மூர்த்தி நலம்பொலியும் காஞ்சிவரு
ஞானமடம் வாழும் நயமூர்த்தி—ஞானம்

கொடுக்கும் திருக்காம கோடி மடத்தின்
அடுக்கும் தரும்ம் அமைத்தே—எடுக்கும்

கருத்தெலாம் வாழக் கடம்பூண் டிருக்கும்
விருத்தராம் ஞான விபுதர்—திருத்தகு

சந்திர சேகர இந்த்ர சரஸ்வதி
மந்திர மூர்த்தி மறைமூர்த்தி—தந்திர

சாத்திர மூர்த்தி தவமூர்த்தி வேதமுனி
சூத்திர மூர்த்தி துதிமூர்த்தி—கோத்திரம்

வெள்ளிமய மாதலால் வேண்டாது சோழநாடு
உள்ளிவரு மூர்த்தி ஒருபொழுதும்—எள்ளளவும்

தெய்வப் பணியின்றிச் செல்லவிடா மெய்ம்மூர்த்தி
சைவத்தை வைணவத்தைச் சாத்தத்தை—மெய்வைத்துக்

காத்தருளு மூர்த்தி கருணைப் பெருமூர்த்தி
சேர்த்தருளும் பாதத் திருமூர்த்தி—கோத்த

அருள்மூர்த்தி தன்முன் படைந்துகை கூப்பித்
தெருள்மூர்த்தி நாயேம் சிவமாம்—பொருள்வாழும் 195

ஆனைக்கா டாகும் அருள்விளங்கு நற்றலத்தைத்
தேனைக்காட் டாநின்ற தேமலரை—மானையிடம்

ஏந்தும் பிராற்கே யியன்ற சிவனுலகை
வேந்தன் இயற்று வியன்பதியை—மாந்தர்

மனத்தை வயமாக்கி வாழ்வருளும் வள்ளல்
இனத்தை யழைக்கும் இருப்பைக்—கனக்க

மருதம் வளர வழங்கும் தலத்தைக்
கருதும் நலங்கள் கவினத்—திருவும்

கலையும் விளங்குபணி காட்டும் கருத்தால்
அலையும் மனத்தை அடக்கும்—நிலையம் 200

புகுந்தடியேம் நின்றேம் பொருந்துதிரு வாக்கால்
வகுந்துவகுத் தாட்கொள்க வள்ளால்—மிகுந்த

பொருளாற்ற லின்றேனும் புண்ணியனுக் குள்ள
அருளாற்றல் காண்பே மதனல்—மருளாற்றல்

போக்கித் திருப்பணிகள் பூணும் கருத்துள்ளேம்
நோக்கித் திருக்குறிப்பின் நுண்மையை—வாக்கினுற்

சொற்றருள வேண்டுமென்று சூழநின்ற வன்பர்தமை
முற்றறிவ ராய முனிமரபின்—சுற்றமெனத்

தேர்ந்த குரவர் திருவருட்கண் சாத்தியே
ஆர்ந்த திருப்பணிக்கே ஆக்கம்வரச்—சார்ந்த 205

உளமுளீ ராதல் உவப்பான் இறைவன்
வளமுளீர் நீர்வாழ் மருதம்—களநிறைய

நல்கும் திருவானே நம்பன் திருப்பணியைப்
புல்கும் பெருமை பொருந்தினீர்—வெல்கவென

எம்மானே முன்னின் றியற்றி யருளுவான்
அம்மான் நினைப்பினஃ தாகாதே—அம்மா

இருப்பவ னேனும் எலாமவன்மெய்க் கூத்தே
பொருப்பவன் கொண்ட பொருவில்—விருப்புவெறுப்

பில்லா னெனினும் இறைபணியாட் பட்டார்க்கு
நல்லா னவனென்றல் நான்மறையின்—சொல்லாகும்

ஊரகத்தார் உள்ளமெலாம் உள்ளுறையாய் மேவுமவன்
தாரகத்தால் நன்கே நடத்துமினே—பேரகத்தே

தன்னை நிறுவிய தண்ணளியின் கோலத்தை
முன்னை வினைநலத்தான் முப்பொழுதும்—அன்னையினும்

மிக்கோ னெனக்கருதும் மேம்பா டுறுதிரென்று
புக்கோர் மனமுருகப் போதித்தார்—தக்கோர்

வணங்கிப் புகழ்ந்து வழுத்தும் குரவர்
அணங்கு மிறையும் அழகாய்—இணங்கும்

திருக்கோயில் புக்குச் சிரத்தான் இறைஞ்சி
எருக்கேயு மெம்மானை யேத்தி—உருக்கமா

## திருப்பணிச் சிறப்பு

நின்றது கண்ட நிறையரங்க நாதபுர
நன்றுற வாழ்வுபெறு நல்லோர்கள்—ஒன்றத்

திருப்பணி செய்யும் சிரத்தை யெழவே
உருப்பணி பூணும் ஒருவன்—அருட்பணிக்கு

ஞான குருவருளால் நாம்பேறு பெற்றுள்ளோம்
தான தவநலங்கள் தாமோங்க—மானக்

கயாரணிய நாதன் கருணை புரிவான்
சயாரணிய மாமித் தலமே—மயாரணியம்

வென்ற குருவரனுர் மெய்மொழியின் வண்மையான்
நின்ற பணிகள் நிரப்புவேம்—என்றமைந்தார்

நாராயணன் பெயரை நாவினிக்க வுள்ளுருகப்
பாராயணம் புரிவோர் பண்புபெறச்—சீராய

வாக்கினுற் சொற்றதிரு மங்கைமன்னன் மெய்யன்பின்
தேக்கினுற் செய்ய சிவபெருமாற் —காக்கியே

ஆனேயே யேறற் கருமையாய் மெய்யன்பர்
கோனேயே காணக் குறுகுவான்— மேனேமகள்

சேவடியை யேத்துவான் செங்கண் வளவர்பிரான்
மாவடிவைக் காட்டும் வளத்தளிகள்— தேவடிவம்

தாங்கும் எழுபதுண்மை சாற்றினர் சோணுட்டில்
ஓங்கு மவையென்றல் உண்மையே—ஈங்குறுநம்

வள்ளல்தளி செங்கண் வளவன் திருப்பணியே
கள்ளமறு நம்பணியும் கண்ணுதலோன்—கொள்ளவரும்

காலமிது நன்றேயாம் காமாட்சி நாதனுக்குச்
சீலமுள சான்ருேர் திருப்பணிகள்— கோலலாம்

என்று முடிபுரைத்தார் ஈடில் கயாரணியம்
குன்று பொரவே குலவியது— நன்றுகாண்

சுற்றுத் திருமதிலேத் தோற்றமுற நன்கமைத்து
மற்றுத் திருத்தத்தை வாழ்வித்து - வெற்றுத்

தரையெலா நந்தவனம் தாரு யெழும்ப
வரையிலாப் பாதபங்கள் வைத்தார்—கரையிலா

ஆக்க மருளும் அரற்கும் இறைவிக்கும்
பூக்கள் மலியப் புரிந்தனர்— நோக்கநிறை

சொல்வன்மை மிக்குயர்ந்த சுப்ரமணி யப்பனவன்
செல்வம் பொழியும் திருமகட்கு—மல்குதிருக்

கோயிலமைத் தன்பின் குழுவினவர் பாராட்டும்
வாயினிய நல்வாழ்த்தும் வாய்ப்புற்ருன்—நேயமணி

தக்கோன் நடேசன் சகோதரரும் தானுமாய்
மிக்கோர் வணங்கும் விழுப்பமுள— அக்கோள்கள்

ஒன்பதும் செய்வித் தொருமண்டப மமைத்தான்
அன்பதும் செய்யா அருமையுண்டோ—பொன்கலந்த

ஐம்பொன் சிலைகள் அறுமுகற்கும் தேவியர்க்கும்
நம்பு மரங்கசாமி நன்கமைத்தான்—தன்புலமை
எல்லாம் இறைவனுக்கே யேற்பித் தவனருளால்
நல்லான் எனவாழ்ந்த நாவலவன்—எல்லாம்
அவனருளென் றெண்ணும் அறிஞர் தலைவன்
சிவனருளே தேர்ந்தமனச் செல்வன்—புவனம்
தனுகரணம் ஈந்து தனைத்தேடிக் காணும்
அனுகரணம் வைத்த அமைப்பை—உனுமனத்தான்
ஆடல்வல்ல பெம்மானை அன்பாற் கயாரணியம்
நாடல்வல்ல நல்லோர் நணிப்பணியத்—தேடல்வல்ல

செல்வத்தாற் செய்யும் திருப்பணியான் அன்பென்னும்
செல்வத்தான் வாழும் சிறப்புறவே - கல்விப்
பொருளு மதனாற் பொருந்தும் பயனும்
அருளும் அறிவின் அவதி—தெருளும்
உருவம் அனைத்தும் ஒருங்கே பொருந்தும்
ஒருவன் உலகை யுடையான்—மருளும்
மனத்தும் புகுந்தங்கு வாழ்வுகக்கும் வள்ளல்
இனத்தி னிகந்துறையு மீசன்—நினைத்துருகும்
அன்பர்க் கெளியனாய் அண்டங்கட் கப்பாலாய்
வன்பர்க் கரியனாம் வல்லாளன்—இன்பத்

திருக்கூத்தா லைந்தொழிலும் தேற்றும் பெருமான்
இருக்கூற்று மெய்ம்மை யிசைப்பான்—கருக்கூத்துள்
உள்ளம் சுருங்க உடல்சுருங்க உள்ளிருக்கும்
வெள்ளம் சுருங்க விழுந்தந்தோ—பள்ளமெழ
மற்றுந் தொடர்ப்பட்டு மாழாந் தழியாதே
பற்றுந் தொடர்பாகும் பாதமுளான்—முற்றும்
அறிந்தே யுலகாளும் ஆற்றல் விளக்கிச்
செறிந்தே யுயிருளுறை தேவன்—அறிந்தேமென்
றோதுவார் காணா தொளிப்பான் அறியேமென்
றோதுவார் உள்ளத் தொளிர்விளக்கம்—போதுகளால்

முப்பொழுதுந் தன்னை முறையே வழிபடுவார்
எப்பொழுதும் ஏங்கா திருக்கவருள்—திப்பியன்

கூத்தாடு பாதத்தான் கொண்டதிருக் கோலத்தை
ஏத்தாடு நாவோ டிதயத்தே—சேர்த்தாடும்

தோற்றம் பொலியச் சுடர்விளங்க வாக்குகென
மாற்ற மனமிறந்த வள்ளலுரு—வாற்றலினல்

ஆக்கும் கலைபயின்ற அன்பன் சுவாமிமலை
தேக்கும் திருப்பணிச் செல்வமுளான்—நோக்கும்

இதயமு மொன்ருய் இறைபணியே செய்ய
உதயமுதல் மாலைவரை உள்ளப்—பதமுறும்

மாணவகர் தேற வழிகாட்டும் பேறுற்ருன்
தாணுவன்பன் சீராம சாமியென்பான்—ஆணு

அமைந்தபெருஞ் சிற்பி அருமைத் தபதி
சமைந்தது நன்றென்று தானே—அமைந்தமனம்

பூண்ட திருத்தொண்டர் பொன்மன்றின் ஐந்தொழிலும்
ஆண்ட அரசை அமைக்கவென்றும்—நீண்டவிழி

கொண்ட சிவகாமி கோலவுரு வாக்குகென்றும்
தொண்டர்திரு வாதவூர்த் தூயர்சிற்பம்—கண்டமையச்

செய்கவென்றும் செப்பித் திருப்பணிக்கு நாள்குறித்தார்
மெய்கவினச் சிற்பமியல் விஞ்சையிலே—கைகவிந்த

நல்லா னிறைபணிக்கு நம்மையா ளாக்கினன்
வல்லா னெனக்கருதும் வண்மையாற்—சொல்லால்

அளப்பரிய ஆடவல்லா னைந்தக் கோலம்
வளப்பெரிய செல்வி வடிவம்—உளப்பெரிய

வாதவூ ராளி வடிவமிவை மூன்று நன்றே
போதமுறச் செய்தளிக்கப் போந்தபினர்—காதம்வரை

தோன்றுதிருக் கோயிலின்கண் தோற்றப் பொலிவுபெற
ஊன்றுநாள் தேர்ந்துணர்ந் தோதவல—சான்றவரை

அம்பலவன் நங்கோயிற் காதரவா லேறவவன்
செம்பதும பாதத் திருநடனம்—இம்பருளார்

நன்மையெலா மெய்தவமை நாளொன் றுரைமினென
வன்மைதரு சோதிடநூல் மாமறையின்—தொன்மைதெளி
நூலினோர் நன்காய்ந்து நுண்மையுறச் சிந்தித்தே
கோலினர் நன்னாள் குறிப்பித்தார்—சாலுமந்நாள்

துன்முகி கார்த்திகை தூயவிரு பத்தொன்றும்
நன்மைபொலி நாளா நவில்வரே—சின்மயனைத்

தேவியொடு மண்பனொடு தேரேற்றி யூரழைத்துக்
காவியொடு கோலம் கவின்விளங்க—மேவியமை

நன்மனைவாழ் மக்களெலாம் நம்பெருமான் வந்தருள்வன்
என்மராய்க் கைகோத் திறைஞ்சுநராய்க்—கன்மமொடு

ஞானம் நணுகரிய நாயகனைப் பத்தியினாற்
கானந் துணையாகக் காணுநர்போற்—பான

அமுதினு மேதக்க ஆரமுதாம் பாடல்
அமுதினை யோதி யரனே—அமுதனே

வந்தருள்க எம்மூர் வளம்பொலிந்து வாழ்வுபெறத்
தந்தருள்க நின்விழியின் தண்ணருளை—எந்தையெனப்

போற்றியே கோயில் புகுதுவித்துப் பூசனையும்
ஆற்றியே வேதமுண ரந்தணர்தாம்—நாற்றிசைக்கும்

எம்மான் திருவாக் கிசையினொலி யெட்டவே
தம்மால் இயன்றளவு சாற்றவே—செம்மாந்த

செல்வரு நாத்திகருந் தெய்வத் திறமுணரக்
கல்விநல மிக்க கவிஞர்பலர்—சொல்வழியே

நுண்மைப் பொருள்சேர நூறுநா றுங்கவிதை
வண்மைப் பெருமானை வாழ்த்தியுரைத்—தண்மையொடு

சேய்மையிலாத் தேவே திருவரங்க நாதபுரம்
வாய்மை யரனுலக மாண்புறவே—தாய்மை

விளக்கு மிறைவியொடு மெய்யன்ப ரோடு
துளக்கற வாழ்கெனவே சொல்ல—அளக்கும்

அளவைகளுக் கப்பாலாய் ஆகமங்கள் தேறி
அளவிட லாற்றுமை யல்லாந்—துளவாறே

சொல்லச் சுருதியும் சொற்கடந்த தூய்மையினைப்
புல்லத் துணியாமை போதிக்க—மெல்லவே
நாக சுரம்குழலே நந்துகொம்பு சின்னமவை
ஆக முறவேந்தும் அன்பினுர்—வேகம்
இலாதே இசையை இறைசெவிக்க ணேற்ற
வலாரி முதலோரும் வானத்—துலாவியே
சோணுட்டுச் சிற்றூரிற் சொன்னச் சபையரசன்
வாணுட்ட மோடு வருவதுவே—கோணுட்டும்
வேதியரு மேனேரும் வேண்டித் தொழுவதுவே
பாதியுரு மாதினுக்கே பங்கிட்ட—சோதியிவன்

எம்மை மதியாதோ வீங்கு மனம்பொருந்திச்
செம்மை யுருவம் சிறப்பவே—இம்மை
நலமெல்லாம் இவ்வூர் நயந்ததிரு மக்கள்
குலமெல்லாம் கொள்ளக் கொடுத்தான்—தலமெல்லாம்
ஈடாமோ வின்னதற்கென் றேத்தி மலர்பொழிந்து
ஆடாமோ நட்டமென ஆடியே—பீடார
வந்து புகுந்த வரதன் பரவைமனைச்
சந்து புகுந்த தமிழ்வள்ளல்—பந்து
பிடித்த கரத்தின் பிடியோ டெழுந்து
நடித்த திருக்கோலம் நாட்டி—அடித்தொண்டர்

நெஞ்சுருக ஆறுமுறை நேயத் திருமுழுக்கும்
நஞ்சுமறை கண்டன் நயப்பாணுய்—அஞ்சுமுகம்
அஞ்செழுத்தை யோதி யடைவாரை நோக்கியவர்
நெஞ்சகத்த வெல்லா நிறைவித்தே—தஞ்சமெனச்
சித்திரை யோணத்தும் சீரானி யுத்தரத்தும்
அத்தர மார்கழியி ணுதிரையும்—பத்தகணம்
ஆதரிக்கு மாசியொடு மாவணிபு ரட்டாதி
நாதரிக்கும் பன்னுன்கு நற்றிதியும்—தீதரிக்கும்
நீராட்டம் கொண்டு நிறையருளின் மாமழையைப்
பாராட்டம் கண்டு பயில்பெருமான்—போராட்டம்

காணும் பொறிபுலனைக் கைப்படுத்தித் தன்கழலைப்
பேணும் பணிசெய்த பெற்றியினர்—காணுறவே

தன்கொடியி லேறுந் தவம்பொருந்து மேறென்ன
வன்புபொலி யோரிரண்டு வாலெருது—முன்புபுரி

புண்ணியத்தின் பேறெனவே பொன்மலையாம் தேரீர்க்கும்
கண்ணியத்தை யெய்திக் களிப்பூர—நண்ணியதால்

மார்கழி யாதிரை நாள் மண்டலத்தார் கண்டுருகத்
தேர்வழி போதும் திருவுளத்தான்—ஓர்வழியே
மாடத்தா னோங்குதிரு மாளிகையி னின்றிறங்கி
ஆடத்தா னேந்து மடிமலரான்—பாடத்தான்

நாவசைக்கு மெய்யன்பர் நல்லுள்ள மின்பூரக்
காவசைக்கு மாங்கிளையிற் கண்சாத்தி—யாவருக்கும்

பேரின்பந் தந்தேன் பெறுமினோ வென்பான்போற்
பாரின்பம் ஒன்றே பயின்றவரும்—சேரின்பம்

ஈதோ கலைக்கோயில் ஈதோ வருள்வெள்ளம்
ஈதோ சிவானந்தம் ஈதோவென்—றுதரவான்

உள்ள முருகி யுரைத்துரைத்துக் கூத்தாடும்
வள்ளல் வருகின்றான் வாரீரோ—கள்ள

மயல்போக்கி நம்மை மயக்கி யருளி
அயல்சேர்க்கும் தாளான் அழகன்—உயல்பூக்கும்

கண்ணினான் கையினான் காலினான் பேரினான்
நண்ணினான் காணீர் நமரங்காள்—பெண்ணினான்

பிள்ளையான் போன்றே பெருவிளையாட் டாடுமெழிற்
கொள்ளையான் போதந்தான் கூடுதிரோ—செள்ளையே

தாயே யெனவழைத்துத் தையன்மார் பின்பணுக
வாயே மனமே மதிப்பரிய—தாயே நம்

தந்தையே யான தனித் தத்துவன்கா ணெய்துகின்றான்
சந்தையே யோதிச் சதுமறைதேர்—அந்தணரும்

செந்நின்ற சோதி திருச்செவியி லேறவே
மெய்ந்நின்ற வோத்து விளம்புகின்றார்—கைந்நின்ற

காட்சியிது காணக் கருத்திலரு முன்னீரோ
மாட்சியிது தேறா மனத்தினிரோ—ஆட்சிபுரி

மன்னன் வருகின்றான் வாசகராம் பேரமைச்சர்
தென்னன் பணிபூண்ட தீங்கொழியப்—பொன்னன்

இவற்கே யமைச்சா யியங்குவர் போன்றே
தவற்கே தனையளித்த தையல்—சுவற்கே

அழகுதரு பூமாலை அண்டினார் தேடிப்
பழகுதிருப் பூம்பதமும் பார்த்தே—குழகன்

அருகே வருகின்றார் அன்புருக வாரீர்
உருகீர் உளமே உவப்பீர்—பருகீரிவ்

ஆனந்தத் தேனையென அன்புருவ ரோதிவர
வானந்த மண்ணந்த வந்தானைத்—தேனந்து

மாமலர்போல் வாண்முகத்து மாதரார் நோக்கிநின்று
காமமயமான கருத்தானே—தாமம்வரப்

பற்பலவா யாங்காங்குப் பட்ட நிலைகளினிச்
சொற்பலவா யோதத் துணிகுவாம்—அற்புதமே

குழாங்கள்

ஆனந்தத் தேனே அமுதப் பசுங்குழம்பே
தானந்த மில்லாத் தனிக்கூத்தே—கானந்தன்

வாழ்வாகக் கொண்டருளி வானகத்தார் கண்பனிப்பத்
தாழ்பாதம் காட்டும் தவமுடியே—காழ்பாவும்

வெவ்வினையின் வேர்பறிய மெய்த்தவமே பூண்டவர்தம்
செவ்வினையு ளெல்லாம் செறிதுணையே—ஔவியமோ

பற்றோ சினமோ பகையோ வெறுப்புணர்வோ
சுற்றோ உறவோ துணையேயோ—எற்றோ

இவையொன்று மில்லாதா யென்பார் அறிவர்
நவையொன்று கூத்தோ நயந்தாய்—சிவையென்ற

தேவிக்குக் கங்கைக்குச் சித்தக் களிப்புதவி
ஆவிக்கு மேம்பட் டமர்கின்றாய்—பாவிக்கும்

நல்லார்க் குறுதுணையே நல்லார்யா மல்லேமோ
அல்லார்க் குறுபகையே ஆதியென்பார்—எல்லார்

திரிபுரங்கள் செற்றழித்துச் சித்தத்தே தோன்றும்
அரிமகனைக் கண்கொண் டழித்தாய்—புரிபுரங்கள்

பூணும் சிறியேமைப் பொன்னம் பலம்வணங்க
நாணும் திறத்தேமை நல்கிலையே—பேணும்

மனமுடையே மென்பதனை வள்ளல் மறந்தாய்
இனமுடையே மென்பதனை யேலாய்—வனமிடையே

வாழ்வாய் மலைமேலும் வாழ்வாய் புனற்கரையும்
வாழ்வாய் எமையோ மறுப்பாயே—யாழ்பாடும்

கையினாய் நான்குமறை காணாக் கழலினாய்
மெய்யினாய் எம்மை விலக்குதியோ—பொய்யிலா

தெங்கு மிருப்பாய்நீ யாவும் அறிவாய்நீ
பொங்கும் அருளின் பொருள்நீயே—மங்குற்

குழலுடையேம் யாமென்று கொண்டனையோ செற்றம்
மழலையுளேம் வீணை மதிப்போம்—தழலுலாம்

கையினாய் கண்ணினாய் காலா னிருளழுத்தும்
ஐயனே யெம்மை யறிகிலையோ—மெய்யன்

அறியாப் பொருளுளவோ அண்டத்தி னுள்ளே
செறியாப் பொருளுளவோ செப்பாய்—மறிமான்

இடத்தேந்தி நின்னை இகவா வொருத்தி
இடத்தே யிருப்ப எழுந்தாய்—மடத்தே

அழுந்தேல் மயக்கம் அடையேல் பிறப்புள்
விழுந்தே யுழலேல் விழுமத்—தெழுந்தே

மறியும் திரையின் வருமிறப்பான் மாழ்கேல்
பிறியுந் தொடரும் பிணக்குள்—மறியேல்

கனிவு தெளியக் கருத்து ளுருக
முனிவு தவிர முடுகி—நனிமுயன்றே

என்னை யடைவா யெனவுரைத்த நாவினாய்
உன்னை யடைவா னொருப்பட்டேம்—பின்னைப்

பிறிதொன்றை நாடாப் பெருநிலையை நல்கும்
குறிகொண்ட வின்பக் கொழுந்தே—நெறிகண்ட

எம்மை யகற்றல் இறையே நின்க்கெளிதன்று
இம்மை நினைமனத்தி லெண்ணியே—அம்மையே

அப்பா வெனவழைக்கு மன்பர் குழுவைமுந்த
இப்பால் விரைகுவோம் ஏழையேம்—அப்பால்

அகல்க வெனநந்தி ஆணையிட மாட்டான்
இகல்க வெனவேலன் ஏவான்—பகல்காண்

இதுவென் றெவரு பியம்பத் துணியார்
மதுவொன் றினிய மலரைப்—புதுவண்டர்

சூழ்வது போன்றும் சுடரொளிமேல் வந்துவிட்டில்
வீழ்வது போலவும் வீழ்வுறுவேம்—தாழ்வேம்

பணிவேம் இரப்பேம் பரிசில்பெற வேட்பேம்
அணிவேம் நினதுருவை அன்பால்—மணிவேய்

களத்தா லுலகவுயிர் காத்தருளும் வண்ணம்
வளத்தா யெமதருகே வந்தாய்—உளத்தான்

உனக்கே உரிமை உலகினோர்க் கில்லேம்
மனக்கே பிறநாட்டம் வாரா—வெனக்கேட்டும்

கேளா தவன்போற் கிளர்ந்தாடித் தேர்நடத்தல்
ஆளா மெமக்குமுனே யாகுமோ—வாளா

திருந்தாய் அலேயோ எமைமறந்தாய் கொல்லோ
பொருந்தார் இவரென்று போதித்—திருந்தார்

அறிவு சிறந்த அமைச்சர் எவரே
நெறியு மவர்க்குளதோ நெஞ்சின்—குறிநீயே

கோண்மையு நீயே கொடுப்பாய் நினையெமக்கே
ஆண்மை யுருவே யழகுருவே—கேண்மை

வளர்க்கும் கலையுருவே வண்மை யுருவே
அளக்கும் அளவைகளுக் கப்பாற்—கிளக்கும்

பொருள்நீயே யாயிற் பொருண்மை பொருந்தா
மருள்நீயே யென்னின் வளைத்தேம்—உருளவொட்டேம்

தார்பிடித்து நின்னைத் தளைப்பே மெமதகத்தே
தேர்பிடித்து நிற்பேம் தெருவூடே—போர்பயிற்றும்

பூவாளி மாப்படையாய்ப் பூப்படைகள் தாங்கிநிற்பேம்
ஆவாழி வாழி அருமறைகள்—மூவாத்

தமிழ்வாழி யென்றிசைக்கும் சான்ரோர்முன் நின்னைத்
தமிழ்வாணி சொல்லித் தளைப்பேம்—அமிழ்துகுக்கும்

வெண்மதியை யேற்கின்ருய் வேணியின்மேல் வாமத்தே
பெண்மகளை நாணமின்றிப் பேணுகின்ருய்—நுண்மதியை

ஆயினீ யெம்மையு மாண்டருள வேண்டுமன்ருே
வாயினீ சொல்லாய் மவுனியோ—தீயினையே

யேந்தி யுரைத்தாலும் ஏலோம் உனதுரையைக்
காந்தி மிகுமுருவக் காரிகையை—ஆய்ந்தமறை

சுந்தரனுர் அன்னைதந்தை சொற்றவணம் கைப்பிடிக்கக்
கந்துகமேல் வந்த கவின்கண்டும்—அந்தணர்முன்

வல்வழக்கைப் பேசி வழிமறித்த புண்ணியநீ
நல்வழக்கை யென்று நயவாயோ—புல்வழக்கைப்

பேசாத நம்பியுனைப் பித்தனென்று வைதமொழி
கூசாது கேட்ட குணவானீ—தேசாரும்

பேர்பரவை யாகும் பெரும்பரவை மங்கைக்கே
சீர்பரவை யாய திறத்தாரை—ஊர்பரவத்

தக்கமண வாளனெனத் தந்தைதா யில்லாய்நீ
மிக்க புதுமை விளைத்திட்டாய்—எக்கடையும்

பொன்வேட்டு நின்னைப் புகழ்ந்த புனிதரைநீ
மன்வேட்ட தோழரென மாட்டினுய்—என்வேட்டுச்

சங்கிலியை மெய்யொழுக்கின் சான்ரோர் திருத்தோளிற்
பங்குறக் கட்டிவிட்டாய் பண்பிலாய்—அங்கவரை

இன்பமுற விட்டாயோ எக்கா ரணத்தானே
துன்பம்விளை சூழ்ச்சியினைச் சூழ்ந்தனையே—அன்பரவர்

கண்பறிக்க வேண்டியோ காட்டாதன காட்டிப்
பெண்பிறிக்க வெண்ணியோ பேதித்தாய்—நண்பரென

நம்பிபெயர் பேசநிற்கு நாணமுண்டோ வில்லையோ
நம்புநரை நட்டாற்றில் நண்ககன்ருய்—வெம்பொருமல்

காந்தி யுரைப்போம் கதறினேம் என்றுகொளேல்
மாந்தி யடியேம் மனமருண்டு—நீந்தியின்பப்
பேராழி மூழ்கிப் பிறப்பிறப்பின் தொந்தமறத்
தேராழி சற்றே தெருவழகை—யோரா
நிறுத்தி யருளுகவோ நெஞ்சுகவர் தேவ
மறுத்தியெனின் தாரை மறிப்பேம்—ஒறுத்து
விலக்க லெளிதன்றே மெல்லியலே மெம்மை
அலக்கண் அகற்றி அருளும்—வலக்கண்
இடக்கண் எமைநோக்க எம்மா னுதற்கண்
அடக்கி யருளுக அன்பே—தொடக்கும்
திருத்தோ ளணியும் திருக்கோவை யீக
வருத்தோ நினையணுகி மன்னே—கருத்தோ
டதனையெமக் கீந்தருள்க அங்ஙன மின்றேல்
மதனை யெமக்குமுனே மாய்க்க—கதனை
அவன்மேல் விளக்கநினக் காற்றலுண்டோ வின்றோ
தவன்மேவ மாட்டேம் தளர்வேம்—சிவன்மேல்
உயிரு முணர்வும் உளமும் பதித்தேம்
பயிரு மகளிரையும் பாரேம்—செயிரும்
பழியும் குறையும் படைப்பே மெனவே
மொழியும் பிறர்மொழியை முன்னாய்—இழியும்
குணத்தா னெனவே குறைகூற விட்டால்
வணத்தா னமையும் வனப்பான்—மணத்தாம்
தொடையலா னெம்மைத் தொடர்புறுத்த வந்த
விடையினாய் நின்மேல் விழித்தே—நடையிலா
ஓவியம்போற் சிற்பம்போல் ஒப்பிறந்த மெய்ப்புலவர்
காவியம்போல் நிற்பேம் கடையிலே—ஆவியும்
உள்ளுயிரு நீயென் றுணர்ந்தே மெனுங்குழாம்
வள்ளியரின் மிக்கமன்ற வாணனை—எள்ளுவதும்
ஏத்துவது மாட்டா தியங்கவும் கில்லாதே
பூத்தகொடி போலப் பொலிந்துநிற்ப—ஏத்தரிய

இன்பக் கலைக்கூத்தன் ஏகன் அநேகனெனும்
அன்பக் கலைக்கூத்தன் ஆனந்தன்—வன்பினாற்

கல்லெறிந்தார் தம்மைக் கனிந்தருளாற் காத்தருள்வான்
சொல்லிறந்த தூய்மைத் துணிபொருளோன்—வல்லிறந்த

பூண்முகையார் நெஞ்சப் பொருமல் அறியான்போல்
நாண்முகையாம் கோவைபல நன்கசைய—வாண்மிகையாம்

வேண்மிகையாம் என்றே மிளிர்நகையால் முப்புரத்தை
மாண்மயலா நிற்க வளைத்தெரித்தோன்—மாண்மியமார்

பொற்றோடு வேதம் பொழிய வருகின்றான்
கற்றோர் மனமகலாக் காட்சியான்—உற்றோர்

எனத்தொண்டர் தம்மை இணங்கி மகிழ்வான்
தனத்தொண்டர் நெஞ்சம் தரியான்—வனத்தின்கண்

வேழம் இருந்த வியன்பதியின் மாந்தர்மனம்
ஆழம் அறிய அணுகினான்—ஏழையொரு

வாதை யறியா மலரரும்பு தன்பிறப்பின்
காதை யறியாக் கருத்தினாள்—பேதை

## பேதை

அரசின் திருக்கோல மாய்ந்துணர லாகாள்
முரசின் முழக்க முறையே—விரசும்

களிற்றின் பிளிற்றொலியும் காளை யிரண்டின்
வெளிற்றின் முழுமேனி மின்ன—அளற்றிடுதாள்

தூய்தாக்கிப் பூணிட்ட தோற்றமும் தேறினாள்
தாய்தூக்கி நிற்கும் தனகரங்கள்—வாய்தாக்க

அன்னே திருத்தேர் அழகென்னே மற்றதன்மேல்
மன்னே யெழுந்தருளி வந்ததென்னே—தன்னேர்

இலாத அழகன் இணையிலாச் செல்வன்
கலாத கலையின் கலைஞன்—வலாத

சிறியேன் உளத்தும் திருநடஞ்செய் தேவன்
அறியேன் அவன்பெருமை அம்மா—குறியேன்

இனியன் இவனென்றே என்னுள்ளம் கூறும்
தனியன் இலைபோலும் தக்கான்—நனிபெரியன்

என்னால் அணுகற் கெளியனோ இல்லையோ
நின்னால் இயன்றளவு நீபுகலாய் — பொன்னாடை

போர்த்துமலர் மாலை புனைந்துலவப் போந்துளான்
ஆர்த்துமென வென்னெஞ் சலருமே — பார்த்தளவில்

உள்ளம் களிதுள்ளும் ஓடி யணைப்பதற்கே
வெள்ளம் கரைபுரளும் விண்ணதிபோற் — பள்ளம்

புகவே விரையும் புனல்போன்றே நெஞ்சுள்
மிகவே பரவசம் மேவும் — தகவே

முனிவர் வணங்கி மொழியும் பனுவல்
இனிது செவிகொள்ளும் எம்மான் — பனிமதியம்

போலும் குடைக்கீழ்ப் பொலிவும் திருவுமாய்
நூலும் திருமார்பும் நூழிலிடும் — வேலுமாய்

என்னை விழித்தே யினிதழைக்கும் தோற்றத்தோடு
அன்னை வருகின்றான் ஆய்ந்தனையோ — தன்னை

விளையாடுந் தோழனாய் வேண்டும் அளியேன்
வளையாடும் கைபற்ற வாரான் — தளையாடும்

வண்ணமும் வேறிரு மாதர்க் குரிமையாம்
எண்ணமே யென்பா லிழியாதே — விண்ணவரும்

மண்ணவரும் போற்ற வளர்தேர் மிசைவந்தான்
திண்ணமிவ னென்னைச் சிறுமியென — வெண்ணினனேல்

என்னிற் சிறிய னிவனென்பேன் மற்றிவன்றான்
உன்னிற் பெரியனென வோதுமேல் — தன்னிற்

சிறியரொடு மாடத் தெரியாக் கலையாற்
குறியனென யானே குறிப்பேன் — நறியமலர்

மாலையும் பூண்டு வருகின்றான் முத்தலை
வேலையிவ னேந்து மிடுக்கென்னே — சாலையிலே

கூத்தாடிக் கூட்டத்தை கூட்டிய கூத்தாடி
ஆத்தாடி யென்னை யணுகானோ — பார்த்தாடி

யானு மிவனோ டெதிராட வெண்ணுகின்றேன்
மானு மழுவும் மருட்டுமே — தானும்

இறங்கிவரா னென்னையிவ னேற்றவும் மாட்டான்
மறங்கிளரு நெஞ்சுடைய மன்னோ — அறங்கவினும்

வேழக்காட் டுட்புகுந்தும் வேணுவனம் வேண்டானோ
தாழைக்காட் டுட்புகவும் தானெழுமோ — வாழத்

தெரிகிலனோ தன்கை சிறியேனுக் கீதல்
உரிதலவே யென்ன வுனியோ — பரிவுடைய

வேறொருபெண் மேல்நாட்டம் மேவுதலால் மேற்செல்லும்
ஏறொருபால் ஈர்க்கினிவ னென்செய்யும் — நீறொழுகு

மேனியினா னென்னை விழைவித்துப் பிச்சாக்கி
மானியென வென்னை மதியாதே — தானினையும்

திக்கையே நோக்கும் செயலென்னே யென்னேயென்று
அக்கையே நோக்கும் அருமருந்தைத் — தக்கபண்பின்

தாயர் தழுவித் தனக்குநிக ரில்லாத
சேயன் அணியன் திருவடியை — வாயறிய

வாழ்த்தித் தமிழான் வழுத்துகென வோதியும்
தாழ்த்திப் பணிகவெனச் சாற்றியும் — வீழ்த்தியும்

ஒன்றும் அறியாதே உள்ள மிழந்தவளாய்
நின்றும் தனைமறந்தாள் நேரிழை — சென்ற

திருக்கூத்தன் அப்பாற் சிறிது நடந்தே
தெருக்கூத்தன் போலவே சென்றான் — திருக்கூர்

## பெதும்பை

பெதும்பை யொருத்தி பிடிக்கன்று போன்றே
பொதும்ப ரிடையே புகுந்தாள் — வெதும்பும்

வெயிலிலே வந்த விளக்கத்தைக் கண்டாள்
அயலிலே நிற்கும் அணங்கை — மயலினால்

நோக்கினாள் நோக்கி நுவலத் தொடங்கினாள்
வாக்கினால் மென்மை மழலைமொழி — போக்கினான்

அக்காவோ வீதென் னரும்பெருங் காட்சிதரும்
மிக்கானோ நாட்டிய வித்தகனோ — புக்கான்

நமரிடையே யீங்கு நடமாடி வந்தான்
இமமடந்தை வாமத் திருந்தாள் — சமதமங்கள்

சான்றோரைக் காக்கவோ தண்டமிழைக் கேட்கவோ
மான்றோன்று கையினனாய் வந்துள்ளான் — தான்றோன்றி

யாகுமிவன் பெண்டிர் அடக்கமட மச்சமொடு
சேகுமிகு நாணமும் சேணாறவே — போகமருள்

மூர்த்தியே யாக முடுகி நடக்கின்றான்
சீர்த்தியே மிக்கான் செயல்மிக்கான் — ஆர்த்தியால்

வேண்டுவார் வேண்டுவன மேவுவிக்கும் ஆற்றலுளான்
பூண்டுளான் பூமாலை பொன்மாலை — நீண்டமால்

நான்முகனோ டேத்த நடன மிடுகின்றான்
மேன்முகனோ டாறுமுக மேவுமிவன் — யான்மகிழ 435

என்னையிடப் பால்விழியா லேனோ கடைக்கணியான்
தன்னை யிருவிழியுஞ் சாத்தியே — அன்னைமார்

சொல்லுஞ்சொற் கேளாதே துள்ளி விழுந்தளியேன்
புல்லுங் கருத்தானே போதந்து — கல்லும்

கரையவே பேசிக் கரங்குவித்து நிற்பேன்
விரையவே போகும் மிடுக்கோ — டரையிலே

கொல்புலித்தோல் போர்த்த கொடுங்களிற்றின் தோலெல்லாம்
நல்வலிக்கோர் காட்டென்று நாட்டுநன்போல் — மல்கும்

எனையொப்பார் தம்மைவிழி யேறிட்டும் பாரான்
தனையொப்பார் இல்லாத் தலைவன் — வினையொப்பான் 440

வந்தவரைச் சேர்க்கும் மலர்த்தாள் மறைத்தந்தோ
நொந்தவரைச் சற்றேனு நோக்காதே — கந்தமலர்

மாலையிடு தோள்பத்தும் வானோங்கித் திக்கெட்ட
வேலையொரு கையிலே வேண்டிக்கொண் — டாலைக்

கரும்புபோற் பொல்லாக் கலக்க மடையும்
விரும்புவார் நோக்கும் விழையா — திரும்புபோல்

நெஞ்சுமுளா னாகவே நேயமிலான் போலவே
வஞ்சமுளான் போன்று மறுகுளே — நஞ்சணிந்த

கண்ட மறைத்துக் கதிர்மறைத்துத் தீமறைத்துப்
பண்ட மறைத்துப் படர்கின்றான் — அண்டர் 445

வணங்கி வரம்வேண்டும் வள்ளலே யாயின்
இணங்கி வழிபடுதற் கேற்ற — குணங்கொள்

அடியாருக் கேற்ற அரணமே யாயின்
அடியேமுக் காகானோ ஐயன் — கொடியானோ

முத்தலைவே லேந்தியே முக்கண் ணொளிவிளங்க
இத்தலையின் வந்த இவன்பெருமை — எத்தனையோ

பேணி யுருகிப் பிதற்றுவே னுள்ளத்தே
நாணி யருகே நடந்துளேன் — காணி

அருள்கவென வேண்டுகிலேன் ஆண்டவனே மாலை
அருள்கவென வேண்டுகின்றேன் ஐயன் — அருள்கிலனோ

பெண்மைப் பிறப்பின் பெருமை யறியானோ
வெண்மைச் சிறுமதியை மேவினனோ — நுண்மைக்

கலைநலத்தைக் காட்டுங் கழலினனே யாயின்
கலைநலத்தை வேட்கும் கருத்தேன் — நிலைநலத்திற்

சிந்தனை செய்யானோ தேனூறு பாடலொடும்
வந்தனை செய்தல் மதியானோ — அந்தணனோ

மன்னவனோ வாணிகனோ வானோக்கும் வேளாண்மை
முன்னவனோ ஐந்தாம் முதுகுடியோ—என்னவனோ

சாதிகெட்ட பேர்வழியோ தந்தைதா யற்றவனோ
நாதிகெட்ட மிண்டனோ நானறியேன் — பாதிகெட்ட

மேனியா னாகியே வெட்கமின்றி வீதிவந்தான்
யானிலா வெல்லா மிவற்குறவோ—பானிலா

வேணியிலே வைத்தாலும் விஞ்சையருங் கைதூக்கப்
பாணியிலே வீணை படைத் தாலும் — நாணியெனப்

பாம்பேற்றிப் பொன்மலையைப் பண்டே வளைத்தாலும்
வேம்பேற்றி நெஞ்சின் விடமேற்றி — யாம்போற்றி

வேண்டுநல மீயாதே மேல்நடக்க வெண்ணுகின்றான்
யாண்டுமினி யேகவொட்டே னென்றுநின்றே—பூண்டுமகிழ்

மாலை தருகவைய மாலை மயக்குமுன்னே
காலையருள்க வெனக் கைகூப்பி — நூலை

அறிகலைஞர் சொற்பொருளா லாய்ந்துணர்த லாகான்
நெறியிடையே நின்றாள் நிமிர்ந்தே—பிறிகிளைஞர்
கொம்பே குயிலே குலக்கொடியே கோமளமே
வம்பே வளர்ந்த மலர்ச்செடியே—அம்பே
பொருவிழியாள் முப்புரத்தைப் போக்குவான் போன்றாய்
அருள்விழியா னாண்டவன் அன்பு—தெருள்வழியே
சேராது நிற்கும் செருக்கென்னே பெண்ணரசே
ஓராது செய்த ஒருபிழையைத்—தேராது
செய்தா யெனப்பொறுக்கும் தேவனைக் கூத்தனை
வைதாய் தகுமோ மலர்மகளே—கைதாராய்
மெல்ல வருகவென்றார் வேதப் பொருள்காட்டி
நல்ல நெறியே நடத்தினார்—வல்லி
ஒருத்திக்கே யென்றும் உரிமையா யுள்ளான்
அருத்திக்க வேண்டா அணங்கே—கருத்துளே
தோன்று நினைவனைத்தும் சொல்லாதே தானறியும்
மான்று மயங்கி மயலாதே—சான்ற
திருத்தொண்டர் போற்றும் திருக்கூத் துகந்தான்
கருத்தொன்ற நின்னையும் கண்ணுற்—றெருத்தண்கால்
தன்மேற் படுமுன்னே தானேயு நோக்கியுளான்
மன்மேற் குறைகூறும் வாழ்வுண்டோ—என்மேற்கை
வைத்து நடந்து வருவாய் எனவுரைத்த
முத்து நகைச்செவிலி முன்செல்லப்—பத்து
விரலும் நிலங்கிளைக்க மெல்ல நடந்தாள்
கரனும் பிசைந்தாள் கருத்தும்—உரனும்
இழந்தகத்தே செல்லும் இதயமின்றி நின்றாள்
உழந்தவளை யிப்பா லொதுக்கிக்—குழந்தைமதி
யேந்துசடைக் கூத்தன் இரதமெலப் போக்கியே
மாந்தர்நிறை மற்றோர் மறுகுவரத்—தேந்தண்
மலர்தொடுத்துத் தேவாரம் வாயினிக்கப் பாடிப்
புலர்பொழுதின் முன்னே புராரி—மலரடியைப்

போற்றுங் கருத்தானே புத்தமுதம் போலினிக்கும்
மாற்ற மழலை வழங்குமயில்—ஏற்ற

இளமை செழுமை எழிலினோ டொன்றி
வளமை பொருந்த வளர்ந்த—அளவை

கடந்த அழகின் கனிக்கொம்பு அனம்போல்
நடந்த சிறுபதத்து நங்கை—கிடந்த

பொருளொன்று நோக்காதே பொன்பொருளை நேரும்
மருளொன்று நெஞ்சத்து மங்கை—அருளொன்று

### மங்கை

கூத்தனை யன்றிக் குனியேன் தலையெவர்க்கும்
ஆத்தனை யன்றி அகமுறச்—சேர்த்தணைய

யாரையு நோக்கேன் இதயமலர்த் தேனுருவாய்
நாரையு மின்பையும் நண்பையும்—ஏரையும்

தன்னுளே கண்டுருகத் தானே யியக்குவான்
என்னுளே யென்று மிலங்குவான்—பொன்னுளே

நல்லொளியாய்ப் பூவுள் நறுமணமாய் வீணையுளே
நல்லிசையாய்ச் சங்கினிலே நாதமாய்—நல்ல

கவிஞனது நாவிற் கவிதையாய்ச் சொல்லுள்
புவிமகிழ வாய்த்த பொருளாய்—அவிபயிலும்

தீயினுளே வெம்மையாய்த் தீர்த்தத்துள் நீர்மையாய்
வாயினுளே யின்பு மழலையாய்—ஆயுமறிவு

உள்ளே விளக்கமுறும் உள்ளறிவாய் உண்மையாய்
எள்ளே புகுந்துறையும் எண்ணெயாய்—வெள்ளை நிற

ஆன்பாலுள் வெண்ணெயாய் ஆனந்த வூற்றுமாய்
தேன்பாலின் மிக்கினிமை தேக்குமவன்—வான்பாயும்

கங்கையை வேணிக் கரந்துள்ளான் வாமத்தோர்
மங்கையை யாங்காண வைத்துள்ளான்—சங்கை

அறத்தேறும் மெய்யறிவர் ஆய்ந்தறியப் பன்னாள்
உறத்தேறும் உள்ளத் துறைவான்—திறத்தேர்

தெருவில்வரக் காணாமுன்னே சித்தங் குளிர்ந்தேன்
வருவனெனச் சொற்றார் மகளிர்—வருவனேல்

என்னுரிமை யீந்தப்பால் ஏகுகவோ வென்றிசைப்பன்
தன்னுரிமை யானென்று தான்மதியா—தின்னுருவை

யான்காணக் காட்டாதே யேகுந் திறமுளனே
மான்காணத் தந்தகர வாமத்தான்—கோன்காணய்

வானவர்க்கும் கின்னரர்க்கும் வாழுமிசைக் கந்தருவர்
ஆனவர்க்கும் ஏனையர்க்கும் ஆணை தரும்—மானவன்

மஞ்ஞையாய் மீனும் மகளிர் மணம்புணர்ந்தான்
அஞ்ஞைமீர் யானு மவர்போன்றே—ஞஞ்ஞை

வருமளவு நோற்பேன் வரங்கிடப்பேன் எய்தும்
கருமமுளேன் நீயிரே காண்டிர்—தருமம்

தவிரவிவ னென்னைத் தழுவா தகறல்
அவிரு மதிமுகத்தீர் ஆமோ—கவிரமலர்

போலச் சிவந்து பொலியு மிதழ்சுவைக்க
நீலக் களத்தோடு நில்லானே—ஞாலம்

நகைக்கமுன்பு தாருக நல்வனத்தே சென்று
பகைக்க வறிகில்லாப் பண்பால்—மிகைத்தொழிலே

பெண்ணினத்தின் முன்புபுரி பித்தனிவன் றனன்றே
வண்ணமலர் மாலையொடு வந்துள்ளான்—விண்ணம்

வியக்கும் உருவழகன் வேதங்கள் காண
மயக்கும் செயலழகன் மாயை—துயக்கும்

கலையின் அழகன் கணக்கிறந்த செல்வன்
சிலையின் அழகன் சிறியேன்—அலையினிடை

அல்லாடும் வங்கம்போல் அண்ணலவன் மேனியையே
சொல்லாடே னேக்கித் துயருகையில்—வல்லான்யான்

யாரு மயங்க இயற்றுவேன் மாயமெலாம்
நீரும் நெருப்பும் நிறைவானுங்—பாரும்

அனிலனு மாணைக் கடங்கி நடக்கும்
புனித வுருவம் பொறுப்பேன்—அனிதர

ஆனந்த நல்கும் அதிகாரி என்கின்றான்
தானந்த மில்லாத சத்தனென்றே—ஈனந்தன்

உள்ளத் திருப்ப தொளித்தே யுரைக்கின்ருன்
கள்ளத் தொழிலே கடைப்பிடித்தான்—வள்ளலெனை

யாரிவனை யோதினரோ வென்போ லெதிர்வரூஉம்
நாரியர்க்குத் தன்னையே நல்குகிலான்—தூரியனே

அண்ணியனென் ருேதி அனவரத மேத்துகின்ற
திண்ணியர்தம் நெஞ்சம் செறிந்துள்ளான்—பெண்ணியல்பை

ஒருமுணர் வில்லானே வுள்ளானே யானறியேன்
சீருமுணர் வுள்ளாரைச் சாராதே—யாருணர்வைச்

சோதிக்கத் தன்னிரதம் தூண்டி நடத்துகின்ருன்
வாதிக்கத் தக்க வழக்குளனே—பேதிக்க

எண்ணியோ விங்ஙனே யானிருக்கும் திக்கையும்
நண்ணியே நோக்கான் நடக்கின்ருன்—புண்ணியமோ

பாவமோ தேருப் பரிசுடையான் போலுமிவன்
ஏவமோ பாரான் இழிபறியான்—ஆவம்

சுமந்து சிலையும் சுமந்துவரும் வேளின்
அமைந்த உருவெடுத்தா னுயின்—குமைந்த

உளத்தோடு பெண்டிரினம் ஓடித் தொடர்ந்தும்
வளைத்தோடு தேர்மேல் வருமோ—கிளத்தோம்

எமது மனமென்றே இவனினைந்தான் போலும்
மமதை வளர்ந்த மனத்தான்—சமதை

எவர்க்கு முதவா திறைவிக் கிடந்தந்
தவட்கே யுரியவ னுனன்—தவத்தான்

அடைந்தா ளவளு மவற்குரிமை பூண்டாள்
இடைந்தா ளெனும்பழியை யெய்தேன்—முடைந்தவிலைச்

சாலை யமைத்துத் தவம்புரிந்தோ வெங்கனலுங்
காலை வெயிலும் கணியாதே—வேலையிடை

நின்றுயிரின் போக்கை நிறுத்தியோ வானேக்கி
மன்றுளிவ னுடுதல்போல் மாறு செய்தோ—என்றிவனை

யெய்தலா மென்றே யிருப்பேன் எனையகன்று
கைதையே பூணுது கைத்தவன்—வைதாரை

வாழ்விப்பேன் என்றே வறிதுரைத்துச் செல்வானேல்
தாழ்விப்பேன் இன்னேன் தருக்கெல்லாம்—ஆழ்விப்பேன்

என்னுளத்தி லேற்றுவிப்பேன் எங்குமினிப் போகலொட்டேன்
தன்னுளத்தில் யானும் சதிராடி—மின்னுவப்பத்

துள்ளிக் குதித்தவனைத் தோன்றும் துணையாக்கிப்
பள்ளிக் கழைத்துப் பணிவிப்பேன்—வெள்ளிப்

பருவதத்தை வேண்டிப் படர்ந்தா னெனினும்
சருவசத்த னுகுந் தனது—கருவசத்தைப்

போக்கவல மந்திரத்தைப் போற்றி யுருவேற்றித்
தேக்கவல வின்பச் செழும்பயிரை—மாக்கமல

மங்கையே பூசிக்க வந்ததிரு வாரூரான்
செங்கையே நீட்டியென் செல்வமே—மங்கையே

வாரா யெனவென்னை மார்போ டணைத்துருகிப்
பேரா யிரம்பிறரே பேசினும்—சோராத

ஆராத வின்பப்பே ராழியிடை யானவனோ
டேரா யழுந்தி யிருக்கவே—வாரானேல்

இப்பெண் பிறப்பானே யானடைந்த வாழ்வென்னே
முப்பெண் மணத்தல் முறையின்றே—அப்பன்

இருவர்க் கிடமுடிதந் தேமாப்புத் தோன்றின்
அருகன் அடியேற்கும் ஆகும்—அருகர்

பவுத்தரை மாய்த்த பழவினைபோ மாறே
சிவத்து ளிசைந்த சிவைக்கே—அவத்தை

கடந்தவொரு தோழியாய்க் காலத்தை வென்றே
நடந்தவொரு பாங்கியாய் நன்கு—மடந்தப

வாழ்வே னிவனை மருவா தொழியேனென்றி
யாழ்போன் மொழியா ளியம்பவே—பாழ்போம்

இளமை முதுமையிதோ எய்தற் கனுகும்
வளமை யிருந்தென்ன வாழ்வு—கிளரவே

பாவம் இராகம் பதங்காட்டு தாளத்தான்
ஓவம் எடுப்பரிய ஊற்றத்தான்—தேவர்

துதிக்கவே வாழ்வருளித் தோலா மொழியாய்
விதிக்கவே வேதம் விளம்பி — மதிக்கவரு

சூளா மணியாகித் தொல்காப் பியமாகித்
தோளா மணியாகித் தோன்றுமவன் — வேளாம்

சிறுபையற் குள்ள செருக்கெலா மாயப்
பெறுமையற் பிள்ளையேன் பெட்பை — உறுமையன்

ஆகியே யென்பால் அருட்கண் விழிப்பானேற்
பாகிலே தேன்பாய் பரிசேபோல் — வாகிலே

தோடோய்ந்து மாலைத் தொடையேந்து மார்போடும்
காடோங்கு பண்டைக் கயாரணிய — மாடோங்கும்

செல்வப் பெருமானே தேவர் பெருமானே
சொல்லிற் புகுந்து சுருதிதரும் — கல்விப்

பெருமானே நின்னைப் பெறுத சிறுமை
வருமானே யாகயான் வாழேன் — ஒருமானை

ஏந்தி யிடக்கை யெழில்காட்டல் சாலுமோ
ஏந்தி யெனையும் எடுத்தருளிக் — காந்தி

வலக்கரத்து மானுக வைத்தல் தகாதோ
வலக்கரத்து மூவிலைவேல் வைத்தாய் — தலைத்தலைக்கே

ஈரிலைவே லேந்தி யிருப்பே னெனையுநின்
ஈரிலைவே லென்றே யியம்பலாம் — சூரிய

வேலின்மேல் வில்லும் விழுப்பமுற வைத்துளேன்
நூலின்மேல் ஓரிரண்டு நோன்மலைகள் — பாலின்மேற்

றூங்கி நினையெதிர்க்கும் தன்மை விளக்கவலேன்
வாங்கி வளைவில்லில் வாளிதொடுத் — தேங்கிய

பேரின்பக் கூத்தரசே பேசரிய பேற்றுருவே
பாரின்ப நாடாப் பரிசினேன் — சீரின்பம்

நின்பணியே யென்று நினைத்தே சமர்தொடுத்தேன்
என்பணியோ பாம்பணியோ வேதேனும் — துன்பறவே

பூணுவேன் தீச்சுடலை புக்குநின்றே டாடவும்
நாணுவே னல்லேன் நயக்கின்றேன் — தாணுவே

ஏந்தியிரு கையா னிரப்பாருக் கில்லையென்றல்
சாந்திநிறை மெய்ம்மனத்துச் சான்றோரின் — நாந்தியுரை

பூணுநினக் கென்றும் பொருந்தாமை நன்கறிதி
நாணுநிலை நிற்கும் நணுகுமோ — பேணுமனத்

தங்கணைக்கே யின்பம் அளியாத ஆண்மகனைப்
பங்கமுற்றா னென்றுலகு பன்னுமே — சங்கரன்

சம்பு சதாசிவன் தாணு புராந்தகன்
நம்பு மடியவர்க்கு நல்லோனென் — றிம்பர்

உரைத்தமொழி பொய்யா யொழிய விடுதல்
நிரைத்த துதிபொருந்து நேயத் — துரைத்தன்மை

பூண்ட நினக்குப் பொருந்துமோ ஞாலமெலாம்
ஆண்ட அரசுநீ யல்லையோ — வேண்டவரும்

என்னை யகலே லெனக்கோர் கரந்தந்து
நின்னை யெனக்குள் நிறைவாக்கிப் — பின்னைக்

கழிவிரக்கம் தோன்றாத காரியமே செய்க
இழிவிரத்தல் என்றறிந்தும் ஏசும் — பழிபரக்கும்

உண்மை யுணர்ந்தும் உனக்கே யுரிமையெனத்
திண்மை யுறநிற்பேன் செல்லற்க — வண்மை

உடையாய்நீ யென்ப துலகறியச் செய்க
நடையாய் நடத்தாய் நட்வேல் — விடையாய்

விடை தருக வென்றே விழுமம் விளக்கி
நடைதளர நின்றவெழில் நங்கை — இடைதளர்தல்

கண்டு சிலதியரும் காதல்தெளி பாங்கியரும்
கண்டுமொழித் தோழியருங் கைப்பற்றிக் — கொண்டு

மகளிர் திலகமே மானே மயிலே
மிகவும் கலைதெளிந்த மின்னே — பகலும்

இரவும் தனதுபெயர் ஏத்தித் தவமே
விரவும் இதயத்தே மேவும் — புரவலன்

தம்மை மறந்து தமது செயலொழிந்தே
இம்மை மறந்த விதயத்தார் — செம்மைச்

சிறப்பை யடையத் திருவருளே காட்டும்
சிறப்பை யுடையபெருந் தேவன்—மறப்பரும்

காட்சி யெனவென்றும் கருது மடியவர்க்கே
மாட்சியருள் கஞ்ச மலர்ப்பதத்தான்—பூட்சி

படைத்தளித்துப் போக்கியே பார்க்கு முலகின்
இடைத்தனித்த மாதவத்தோர் எண்ணம்—கிடைத்தவே

என்ன இருக்கும் இறைவன் அருட்கூத்தன்
மன்னன் பெருமை மனத்தறியாய்—அன்ன

நடையால் அவனை நணுகி யிதழித்
தொடையாய் எனவே தொழுதாய்—இடையறவே 570

நாட்டியத்தைக் காண நயந்தே யருகிருக்கும்
நாட்டியத்தைத் தேர்ந்த நலச்செல்வி—பாட்டியல்தேர்

அம்பகத்தாள் காமாட்சி அன்னை சிவகாமி
வம்பகத்தார் தாங்குகின்ற மார்பகத்தான்—அம்பகத்தாற்

காமனையே காய்ந்த கடவுள் நினதுளத்துக்
காமனையே நோக்கக் கடவனோ—மாமனையே

தன்னை வணங்குவித்த தாளுடையான் பெண்ணரசே
நின்னை மணப்பதுண்டோ நேரிழாய்—அன்னமனை

யேகுதும்யா மென்றே யினிதழைத்துச் செல்லவே
வேகுமனத் தோடுசென்றாள் மெல்லியலே—சேகுபெறும் 575

அன்பினெறி கண்டோர் அமலனையே வாழ்த்திமனத்
தின்பநெறி பேசியே யேகினர்—இன்பம்

மடந்தை

இணங்கு முளத்தாள் எழிலிரதி தானும்
வணங்கும் வனப்பார் மடந்தை—குணங்கள்

அரும்பாகிப் போதாய் அலராய் அலர்ந்த
கரும்பாகித் தேனும் கவினுள்—விரும்பாரும்

வேட்பாரும் தேடும் விழுப்பொருளின் மெய்யுருவம்
கேட்பாரை யேத்தும் கிளிமொழியாள்—கோட்பாடு

கூற்றுன் விளக்குநரைக் கொண்டாடும் நெஞ்சத்தாள்
நீற்றுன் விளக்கமுறும் நெற்றியினுள்—ஏற்றுற் 580

கொடியேற்று கோமான் குணங்கள் செயல்கள்
படியேற்று கோயிலெனும் பான்மையாள்—அடியார்க்கு

எளியனாய்த் தூதனாய் ஏவலனாய் முந்தை
அளியினால் வந்த அவனை—ஒளியினால்

ஓர்ந்துணரு மாமுனிவர் ஓதியருள் நுண்கருத்தைத்
தேர்ந்துணரு மாறுசெலும் சித்தத்தாள்—வார்ந்தபனை

ஓலையித ழேற்றிவைத்த உண்மைநூல் எத்தனையோ
ஓலையித ழேற்றிவைத்த ஊற்றத்தாள்—சோலைமயில்

ஆட்டத்தைக் கண்டும் அதுதனது சாயலினால்
வாட்டத்தைக் கொண்ட வகையறியாள்—பாட்டின்பம்

மாமரத்தி னின்று மதுப்போற் சிதறுகுயில்
காமரத்தைக் கேட்டுக் கனிந்துருகி—நாமதற்குக்

கானக் கலைசிறிது காட்டுவா மென்றுமெல
வானக் கலைபொழியும் வாயினாள்—மானத்தால்

தன்மத்தாற் றானத்தாற் சாந்தத்தாற் சௌமியத்தாற்
கன்மத்தாற் சிந்தனையாற் கட்டுரையால்—உன்மத்தர்

போலவே யெம்பெருமான் போந்தவழி நோக்குதலாற்
சாலவே மிக்க தகைபொருந்தும்—மேலையவர்

வாழ்க்கை வரலாறு வாயினிப்ப நெஞ்சுருகக்
காழ்க்கொ ளிருவினையின் கட்டொழிய—ஊழ்க்கும்வலி

இல்லா தொழிய விருசெவியு ளேற்றுவதே
எல்லார் பெருங்கலையென் றெண்ணுவதாற்—கல்லாதார்

நெஞ்சு முருக நிகழ்ந்த அருட்செயல்கள்
அஞ்சு மொருங்க அடைத்தலால்—அஞ்சுமுகத்

தப்பனையோ ரஞ்செழுத்தால் அல்லும் பகலும்நினைத்
தொப்பனையே செய்ய வுளங்கொளலால்—எப்பொழுதும்

வாழ்க்கை சிவமயமாய் வாழ்வுறுநற் பேறுபெற்றார்
யாழ்க்கை யருந்தொண்டர் எங்கெங்கும்—யாழ்க்கை

அரனுருவே கண்டுருகு மானாயர் மாறர்
புரவரியை யுள்ளுருகிப் போற்றும்—வரமார்

திருநாளைப் போவார் திருநீல கண்டர்
பொருநாளைக் காணுத பூசல் — வருநாளைக்

கண்ணுதற்கே யாக்குதிருக் கண்ணப்பர் ஏயர்கோன்
உண்ணுதற்கே வாழ்மனையில் ஒன்றுமிலா — தெண்ணியே

பொற்ருலி தந்தசெல்வி புண்ணியப்பே றெய்தவே
வற்ருத குங்கிலியம் வாங்கியவர் — செற்ருன்

அரியவுயிர் கொள்ளவே ஆகமம்போற் காட்டிக்
கரியமனம் கொண்டு கடுக — உரியமனத்

தத்தா அவர் நமரே தக்கவா றன்னவர்க்கே
ஒத்தா முதவி உஞற்றுகவோ — பத்தர்

குணமிதுவே யென்றுசொலிக் கூற்றுவனை வென்ற
வணமிகு மெய்ப்பொருள் வள்ளல் — கணமெனினும்

எம்மான் பணியின்றி யிவ்வுலகில் வாழ்கிலார்
செம்மாந் திறைவனையே சேர்ந்தவர் — தம்மாண்பு

கேட்டுவக்கும் வாழ்வைக் கிளர்செவிகட் காக்கியவர்
பாட்டுவக்கும் வாக்குப் படைத்தவள் — நாட்டுமக்கள்

யாவருமே தொண்டர் இயல்பை அறிந்தன்பின்
மேவலையே வேண்டும் விருப்பினுள் — தாவறும்

ஈசன் திருநாமம் யாருரைப்பக் கேட்டாலும்
பாசம் பறந்ததெனும் பான்மையாள் — வாசமிகும்

பூக்களைக் கோவை பொருந்தத் தொடுத்தெடுத்தே
வாக்கு மனம்கடந்த வள்ளலுக்கே — ஆக்குபணி

என்பணியென் றென்று மிசைக்கு மியற்கையாள்
அன்பணியும் வாக்கி னரசர்பிரான் — என்பணியும்

தம்மானுக் கிட்ட தமிழ்மாலைப் பாடல்களை
எம்மானுக் கென்றும் இசைப்பவள் — அம்மா

அமுதம் அமுதம் அமுதமென்றே யாழின்
அமுதம் பொருத்தி அமைத்தே — குமுதமலர்

வாயினுற் பாடி மகிழ்வாள் சிவகதைகள்
வாயினுற் பேசி மனநிறைவாள் — தாயினுற்

பெற்ற கலைவளத்தைப் பேணிவளர்த் துள்ளுருகிக்
கற்றகலை நாட்டியமும் காட்டுவாள்—முற்றறிவின்

பேரூற்றை யன்பின் பிழம்பை யருட்கடலை
நீரூற்றை வேணி நிலைநிறுத்தும்—வேரூற்றை

எண்ணி யுளத்துவிளக் கேற்றியவ னோக்கியே
பண்ணி னிசைக்கவிதை பாடியே—புண்ணியம்

பூத்துப் பொலிந்த பொலங்கொடிபோல் மின்னுவாள்
கூத்துப் புனைந்தபிரான் கோலத்தை—ஏத்துவதே

தக்க தெனநினைந்து தன்வாயின் மென்மொழியால்
மிக்க புகழை விளம்புகின்றாள்—அக்கணியும்

தேவனே முக்கணனே தேவாதி தேவனே
மூவரே யாய முழுமுதலே—மூவர்

தமிழ்மறையைக் கேட்பான் தமிழ்நாடு புக்காய்
அமிழ்துருவம் பூண்ட அமலா—கமழ்மலர்கள்

எத்தனையோ உண்டே எருக்கேன் விரும்புவாய்
மத்தமலர் வேண்டி வனைவதேன்—பத்தர்கணம்

வைதாலும் நெஞ்சுருக வாழ்த்தென்றே கொள்ளுதியால்
எய்தானே பூவால் எழிலுருவன்—வெய்தாய

கல்லா லெறிந்தார் கருத்துருகும் சாக்கியனார்
நல்லார் வழிபாடே நன்குகொண்டாய்—பொல்லா

மதனை விழியால் வதைத்தனை யென்ப
அதனை அறியேன் அளியேன்—கதனால்

எமையே படையாக்கொண் டெம்மையே தாக்கும்
அமைவே னவற்கே யளித்தாய்—சமைய

அசோக மவற்கம்பா யாக்கினாய் நீயே
அசோக மெமக்கிலையோ ஐய—சசோகராய்

யாமிருக்க நீசெய்தல் எவ்வா றறமாகும்
தோமிருக்க மாரன் தொடர்கின்றான்—மாமரத்தின்

கோடரத்தில் வாழும் குயிலும் கிளியுமவன்
ஆடலுக்கே யேற்றதுணை யாயினவே—நாடுபுனல்

அம்பருத் தூணியாய் அன்னாற் கமைத்தருள்வாய்
நம்பினார்க் கன்றோ நடுக்கம்வரும்—எம்பிரான்

என்னே நினதுசெயல் என்னே நினதருளும்
என்னே பகைவற் கிரங்குவதே—நின்னேயம்

பூத்து வளர்கொடிகள் புண்ணியனே வாடுவதே
கூத்து விரும்பியருள் கோமானே—ஆத்தனே

கல்லாக் கலையினேம் காணாத காட்சியேம்
சொல்லால் நினதுருவம் சொல்லறியேம்—பொல்லாத

மாயையாற் கன்மத்தான் வன்மைமிகு மாணவத்தாற்
சாயைபோல் நின்னையாம் சாராதே—பாய

உலகவாழ் வுள்ளே யுழன்றுசுழல் கின்றேம்
அலகில் அருளுருவத் தைய—கலகம்

இடும்பகைஞர் எம்முள் இருக்கின்றா ரென்றே
கொடும்பகையை யுட்பகையைக் கொன்றோர்—நெடும்பகலும்

அல்லும் உரைக்கும் அருண்மொழிகள் கேட்டுள்ளேம்
கல்லும் உருகும் கனிவுருவே—வெல்லும்

நிலையிலே யெம்மை நிறுத்தியருள் செய்தி
மலையிலே தோன்று மருந்தே—சிலையிலே

சிற்பி வடிக்கும் சிறப்பனைத்தும் தாங்கியருள்
சிற்ப வுருவமையுந் தெய்வமே—அற்புத

ஓவியநூல் வல்லான் உளத்தான் மிகக்கருதித்
தீவிய தூரிகையாற் றீட்டுகின்ற—ஓவியமே

எம்மான் நினதுருவை யேற்றுங் கிழியுளதோ
அம்மா நினைநிகர்ப்பார் ஆருளரே—செம்மாந்து

காவியம் யாக்கும் கவிஞர்மனம் தோன்றியெழும்
ஓவியம் எல்லாம் உனதுருவே—மாவியன்

வேத்தியல் தேர்ந்த வியன்கூத்த மக்கள்பொதுக்
கூத்தியல் தேர்ந்தபெருங் கூத்தாடி—யாத்தியலும்

பாட்டின் பொருளாய்ப் பயிலும் பரம்பொருளே
ஏட்டின் எழுதற் கியலாதாய்—நாட்டின்

அரசுக் குரியார் அனைவரும் போற்ற
அரசுக் கரசாகும் அண்ணல்—முரசம்

முழங்க வருகின்றாய் மோதமிகும் வீதி
தழங்கு மியங்களொடு தானே—வழங்க

இடஞ்சாலு மென்றே எமையு மதித்து
நடஞ்சாலும் கூத்தா னடந்தாய்—படஞ்சாலும்

பாம்பை மறைக்கவென்றே பன்மலரின் மாலையணிந்
தேம்ப லுறவே எழுந்தருள்வாய்—சாம்பசிவ

ஆலாலம் கண்டத் தழுத்திப் புறப்பட்டாய்
மேலாய கண்மணியை மேலிட்டாய்—பாலாழி

வந்த திருமகளும் வாணியும் போற்றுமகள்
தந்த திருக்கோவை தாங்கினாய்—அந்தணர்

மாமறைநன் கோதிவர மார்கழி யாதிரைநாள்
காமசனகன் கஞ்சன் கைகூப்ப—நாமவுரு

ஆயிரங்கொ ணம்பியே ஆனந்த தாண்டவத்தின்
பாயிரம் காட்டப் படர்ந்தனையே—தாயின்

எமக்கருள வெண்ணியோ வீண்டினையா லென்றாள்
இமக்கிரியின் செல்விகழ லேத்தி—அமைக்கும்

இவனை வணங்காதே யில்லத் திருத்தல்
சிவனை யிகழ்ந்த செயலாம்—புவனை

சிவகாமி காமாட்சி தேரில்வரு கின்றாள்
சிவகாம நம்மினத்தைச் சேரத்—தவவாழ்வு

சார வணைகுவாம் தக்கபொழு தீதென்றே
யீர மனத்தோ டெழுந்துவந்தாள்—வீரம்

விளக்குதிரி சூலத்தான் வேதமொழி மூலம்
கிளக்கும் சிறுபறையோன் கேண்மை—அளக்கும்

திருவிழியோன் அன்பர் சிவசிவவென் றேதும்
தெருவழியே யானேற்றுத் தேர்மேல்—வருபொழுது

கண்டாள் வளைத்தகழல் கண்டாள் எடுத்தகரம்
கண்டாள் மலருமுகம் கண்களான்—விண்டாள்

உலக வுணர்வை யுயிரியக்க மெல்லாம்
விலக வவன்திருமுன் வீழ்ந்தாள் — கலகலெனப்

பேசிப் பெருமான்பேர் பேணித் தொழவந்தாள்
கூசிக் குணங்கெட்டுக் குப்புற்ருள்—ஏசிப்

பிறர்பேசும் பேச்சும் பெருத செவியாள்
உறமேவும் நெஞ்சத் துணர்வை — அறவாணன்

தாளுக்கே யாக்கித் தனக்கென் றெதுவுமின்றி
வாளுக்கே தோலாத வாள்விழிகள் — தோளுக்கே

மார்புக்கே நீரருவி வாக்க வொடுங்குமுயிர்
சார்புக்கே தேடியடை தன்மைபோல் — தார்புக்க

எம்மான் திருமேனி யேறிட்டு நோக்கினுள்
நம்மான் திருமாலை நல்காளே—வெம்மாயக்

கூத்தனிவன் பெண்டிர் குணங்கெடுக்கும் வாழ்வினுன்
ஆத்தனென வோதல் அபத்தமோ — சோத்தம்

விழைவுறுவ னென்ப வியக்கின்ரு னென்ப
இழைவுறுவ னன்பரோ டென்ப—குழைவுறும்

நாவுக் கரசர்சிவ ஞானத்தின் சம்பந்தர்
நாவற் கரசுதரு நன்மறையை—நாவிற்

புகன்றே பணிந்தே புகழ்ந்தே வருவேன்
அகன்றே யிவன்போத லாமோ—அகன்றேயத்

தென்னை மணவீர் திவனேக லெங்ஙனே
தன்னை யறியாத தன்மையனே—முன்னை

இரந்தவர்க் கெல்லாம் இவனருளுங் காதை
கரந்தவர்சொல் பொய்க்கதையின் கட்டோ—சுரந்தமுதம்

நல்கும் விழியாளோர் நாயகியை வாமத்தே
புல்கும் திருக்கூத்தன் போகுமோ—அல்கும்

வினையினர்க் கன்றே விழைவருளு மென்னின்
வினையெலாம் விட்டேன் விழுந்தேன் — நினைவினுல்

வேறென்று நாடேன் விடேனிவனை யென்னமுன்னின்
றேறென்று செல்லா திடைதடுத்தாள் — நீறென்று

மேனியே நோக்கி விழுந்தெழுந்தாள் கைகூப்பி
வானிலே மண்ணிலே மற்றிடத்தே—ஊனிலே

ஆவி யகத்தே அமர்ந்தாய் நீ யென்கின்ருர்
ஆவி யருளுதி ஐயாவோ—காவி

கமலம் வகுளம் கவினத் தொடுத்த
விமல மலர்க்கோவை வேண்டி—அமல

வழிமறித்தே னுன்னை வழங்கியே செல்க
பழிபடைத்தே னுக்கிப் படரேல்—விழிபடைத்தாய்

என்னையு மென்னுள்ளத் தேரு விளங்குகின்ற
உன்னையு நோக்கா ஒருமொழி—சொன்னபின்பு 674

போகலாம் என்றே புலம்பும் திருமகளின்
வாகெலாம் நோக்கி மகிழ்ந்திருந்த—சீர்குலாம்

தோழியர் பல்லோர் துணிந்து நெருங்கிவத்தார்
வாழியர் தாயே வருதியால்—ஏழிசையின்

உம்பர்பிரான் மெய்ப்புகழே யோதி யுவந்துள்ளாய்
நம்பனிவன் கூத்தாடி நாடோடி—உம்பரையும்

இம்பரையு மேமாற்றி யேதேதோ செய்கின்ருன்
நம்புவது பெண்ணே நமக்கழகோ—சம்புவிவன்

மாலை யுரிமை வரித்த மறைப்பிள்ளை
வேலை யுரியதந்தை மேல்வீசும்—சீலம் 680

உணர்வாயே நின்றன் உளத்தெழுந்த நாட்டம்
தணவாயே நம்மையே சார்வாய்—அணவரிய

மெய்விளக்க மீதன்ருே விட்டிலென நீவிழுந்தால்
மெய்விளக்கம் போயொழியு மெல்லியால்—கைவிளக்கம்

ஒன்றே யுடையாய் ஒருகோடி ஞாயிருெடு
சென்றே பலகோடி திங்களும்—நன்றே

இவனெளியி னெல்லையுறல் என்றுமிலை கண்டாய்
தவனெளியின் மாண்டோர் தமக்கே—இவனெளியன்

நின்னை யிவன்மணக்க நேருநா ளீதன்றே
பின்னை யொருநாள் பிறக்கலாம்—அன்னை 685

சிவபுரா ணங்கற்றுத் தேவாரந் தேர்ந்து
பவபுரா ணங்கழியப் பாராய்—நவநவமாம்

இன்பமிவன் நாமம் இசைப்பதிலே யுண்டென்பாய்
அன்புருவன் மெய்யருளை யாதரித்து—முன்பெலாம்

பூண்ட திருப்பணியே பூணலாம் போதருவாய்
ஈண்ட மனைபுகுத வென்றுரைத்தார்—நீண்டதொரு

மூச்சு வெளிப்படவே மூக்கட் புராதனன்றன்
பேச்சு மனத்துட் பிடிபடவே—ஏச்சு

மறந்து தனைமறந்து மாளிகையை நோக்கிப்
பிறந்து தோடர்புடையார் பின்னே—நிறந்திருக

மெல்லவே சென்றுள் வினைகெட்ட பின்னன்றே
புல்லலா மென்று பொருமியே—நல்ல

## அரிவை

அழகுருவ மாகும் அரிவை யொருத்தி
விழவுமலி மூதூரின் மேன்மை—கெழுமியதோர்

மாடமலி பொன்மனையின் மாமகளே போலிருந்தாள்
பாடவம்வாய் பெண்டிர் பலர்பணிய—நாடகமும்

நாட்டியமும் சிற்பமும் நன்கமையு மோவியமும்
பாட்டியலும் காவியமும் பார்த்திருந்தாள்—ஆட்டியலும்

பொன்மன்றக் கூத்தன் புராணம் பலகேட்டாள்
நன்மன்றம் தன்மனையா நாட்டினுள்—தன்முன்பு

பாவலரும் சிற்பியரும் பாணரும் ஓவியரும்
நாவலரும் நண்ணி நயம்புகலக்—காவலரும்

கற்பகம்போற் றனே கலைஞர்க்குப் பொன்னளக்கும்
அற்பகம்கொள் நாடகமு மாடினுள்—வெற்பகம்வாழ்

செம்புருவ வள்ளல் திருவிளையாட் டாயிரமும்
அம்புருவம் விற்போ லசையவே—அம்புருவின்

நீள்விழிகள் உள்ளன்பி னீரரும்பக் கேட்டிருந்தாள்
வாள்கதைவில் சங்காழி வைத்தமால்—தாள்பரவும்

அன்பனைக் காத்தற் கவுணவர சாயிருந்த
வன்பனை யீடழிக்க வந்தநாள்—வன்பெரிய

தூணிற் பிறந்து சுடரு நகப்படைகொண்டு
ஆணிற் பெரிய அவுணனை—ஏணிற்

கொலைபுரிந்து மேலும் கொடுஞ்சினமே காட்டும்
நிலைதெரிந்த தாணு நிமலன்—அலைதிரிந்த

தாரணியைக் காக்கச் சரபமாய் வந்துதுழாய்த்
தாரணியு மம்மால் தருக்கொழித்த—சீரணியும்

காதை செவியுற்றுக் கண்ணுதலே மேன்மையுளான்
தீதை யழிக்கும் திறமுள்ளான்—மாதை

இடப்பாற் பொருத்தி இறைமை விளக்கி
நடப்பாற் கருத்தமையு நம்பன்—வடப்பால்

இருந்து மறைப்பொருளை யீரிருவர்க் கோதப்
பொருந்து குருவுருவப் பொற்பன்—விருந்துவந்து

சோமாசி மாறர் தொடங்குமழல் வேள்விக்கண்
ஆமாறு வேட மணிந்துவந்தோன்—நாமாதி

ஒன்று முருதான் உறுவனென வெண்ணுவார்க்
கன்று விழைந்தவுரு வாதரிப்பான்—நன்றுநினை

நல்லார் மனத்தே நணுகுந் துணையாவான்
அல்லார் கருத்தும் அறிகிற்பான்—பொல்லாங்கு

உணரா விசயனுக்கே ஒப்பிலருள் காட்ட
இணரா மலர்பலவும் ஏந்தித்—தணவாத

தேவியொடு நாய்தொடரத் தீக்கானிற் பன்றியின்து
ஆவிபரு காசுகத்தோ டாங்கணைவோன்—மேவிச்

செருப்பாற் றிருமேனி தீண்டியகண் ணப்பர்
விருப்பா னுருகும் விமலன்—நெருப்பா

எழுந்தவுருக் காட்டி யிருவர் செருக்கும்
அழுந்தவருள் காட்டும்விழி யண்ணல்—விழுந்து

பணிந்த பரஞ்சோதி பாலகனை யுண்ணத்
துணிந்த திருவுளத்துத் தொல்லோன்—திணிந்த

இருளுலக வாழ்வி னிடைப்படுத்த வேண்டா
தருளுலகம் சேர்க்கு மவாவாற்—பொருளியல்தேர்

சீகாழிச் செல்வர் திருமண நல் லூர்க்கண்ணே
பாகா யுருகிவரு பற்பலரோ—டாகா
வெனவிமையோர் எண்ண வெழுஞ்சோதி காட்டி
அனைவரையும் உட்கொண்ட அன்பன்—வினைவகையின்
வேறிருவர் பெண்டிரை வேட்பதே தக்கதென்று
நீறிடுபொன் மேனி நிறைதொண்டர்—சீறியெழும்
வாதியாய் நிற்க மணமனைக்கு முன்வந்தே
ஆதியா மாவணத்தா லன்னவர்—நீதியால்
தொண்டு புரியடிமைத் தொந்த முடையரெனப்
பண்டு வழக்கிட்டுப் பாரறியக்—கொண்டருள்வோன்
ஒற்றிநகர் தன்னுள் உருகுமனச் சங்கிலிக்கும்
பற்றிமணம் செய்வித்துப் பண்புநிறை—நற்றிருவாம்
ஆரூர்ப் பரவை யகம்புகுந்த நம்பிபிரான்
ஆரூர் நடக்க அவாவிய நாள்—சீரூரும்
ஒற்றிக்கண் சூளுரைத்த உண்மை யுலகறியப்
பற்றிக்கண் கொண்டருளும் பான்மையோன்—மற்றிவர்க்கே
பொன்னை யுதவிப் புரிதோ ழமைதந்து
தன்னையுதவி யருள் தம்மானை—என்னையிவன்
தூதுரைக்க வேகுகென்று தோகை யொருத்திமனை
தீதுரைக்கு மாந்தர் சிறுமைசொல—வாதுரைத்த
பாவவினை பற்றுதே பண்ணவனைப் போக்கினன்
ஆவவிவ னென்முன் னணைவானேல்—யாவ
தியலுமென வோரேன் எனுங்கலிக் காமர்
வயிறுபுகுஞ் சூலையொடு வாட—இயலிசையின்
தூய சுவைதெளியும் தொண்டர்க் கடியவரை
ஆய பணிபுரிய ஆணையிட்டே—வாயிலிடை
அன்னார் வருமுன்னே ஆருயிரை மாய்ப்பதற்கே
தன்னுந் தகமேந்து தன்மைதெரிந்—தன்னே
இவனுயிருக் கென்னுயிரை யேற்றதுணை யாக்கிச்
சிவனுலகம் யானுமினிச் சேர்வேன்—சிவனருளீ

தென்றுடைவா ளேந்தும் இயைபுகண்ட வக்கணமே
கன்றுதுயர் கண்டுருகு காரான்போற்—சென்று

தொழும்பர் இருவரும் தொல்லைப் பகைதீர்ந்
தெழும்ப வருளும் இறைவன்—உழும்பழனத்

திட்டவிதை நெல்லை யெடுத்துவந்து கூரையல
கிட்டுநெருப் பாக்கி இனிதட்டு—மட்டுமிதம்

இல்லாச் சுவைசால் இலைக்கறியும் வட்டித்த
நல்லார்க் கருள்விளக்கு நம்பெருமான்—சொல்லால்

மொழிவரிய மந்திரத்தை மூவா யிரமாய்
மொழியுமன்பர் வாக்கினின்ற மூர்த்தி—கழிகருணை

காட்ட வியற்பகையார் காதலியை நாட்டவர்முன்
கேட்ட வரியசெயற் கேதாரன்—பாட்டறியும்

எம்மான் திருப்பணியே என்றும் புரிந்ததனாற்
செம்மாந் திருந்த திருத்தொண்டர்—அம்மான்

வழிபாடே பூண்ட மனப்பண்பர் ஏனோர்
இழிபாடே யில்லா இனத்தர்—அழிபாடு

இலாநிலை யெய்தநினை வென்றே வருங்காண்
சொலாதசொலை யோதித் துணிந்து—கலாதகலை

சிந்தையாற் றேர்ந்து சிறக்குநிலை யென்றுவரும்
சந்தையாற் கெட்ட சழக்கரைப்போல்—மந்தைவாழ்

மாடுபோல் வாழு மயக்கமென்று நீங்குமோ
ஆடுகோன் மெய்யருளுக் காளாகி—நீடுவாழ்வு

எய்துநிலை யெந்தநா ளெம்மினத்துக் குண்டாமோ
செய்தமொழி பாடிச் செயாமொழியின்—மெய்தெளிந்து

வாழ வகுத்தருளும் வள்ளற் பெருமான்றாள்
தாழ வெமக்கும்வினை சாலுமோ—ஏழடுக்கு

மாமனையின் வாழ்ந்தாலென் மாணிக்கம் வச்சிரமே
காமனையா னெய்திக் களித்தாலென்—காமனையே

நெற்றிவிழி யாலெரித்த நீற்றொளியான் நெஞ்சகத்தே
உற்றொளிரும் வாழ்வறியார் உச்சநிலை—எற்றெனவே

வாய்நிறையப் பேசி மகிழ்ந்திருந்தாள் தேர்வருகை
தாய்பகரக் கேட்டாள் தவமிருந்த—தூய்மையினால்
வாயிற்கண் வந்துநின்றாள் வண்கயிலை போற்றேன்றும்
கோயிற்கண் சென்றுகை கும்பிடாள்—வேயிற்கு
முன்னே வருங்கால் முனம்வாரா தென்செய்வாள்
அன்னே அரசே அடைந்தானென்—மன்னே
அடைந்தான் அமலன் அடைந்தான் தலைவன்
அடைந்தான் கயாரணியத் தண்ணல்—அடைந்தான்
எடுத்ததா ளீசன் எனைநோக்கி வந்தான்
மடித்ததா ளொன்றோடு வந்தான்—குடித்தருளும்
நஞ்சணிந்த கண்டத்தான் நான்காண வந்துற்றான்
நெஞ்சணிந்த கோலத்தான் நேர்வந்தான்—மஞ்சணிந்த
வானத்தே தேவகணம் வாழ்த்தி மலர்பொழிய
ஞானத்தே மிக்கார் நயப்புரைக்க—யானத்தான்
பாத மருளும் பரிவானே வந்தானென்
சாதம் கெடுக்கவே தான்வந்தான்—சீதமதி
ஞாயிறங்கி கண்மூன்றா நண்ணுபெரு மான்வந்தான்
வேயிலங்கு வெண்முத்தான் மேயினான்—மீயுயர்ந்த
ஆரூரிற் புற்றுருவாம் அண்ணல் வருகின்றான்
நீரூறும் ஆனைக்கா நீர்வந்தான்—பேரூறும்
அண்ணா மலையாம் அனலின் பிரான்வந்தான்
கண்ணாரும் காளத்திக் காற்றுருவன்—நண்ணினான்
பொன்மன்றிற் கூத்தாடும் போக்குவர வில்லாத
தன்மங்கொள் வானத்தான் தான்வந்தான்—நன்மன்றம்
ஆரும் தளிதோறும் ஆடும் பிரானணைந்தான்
சீரும் சிறப்பும் திருவருளும்—பேரும்
பொருந்துமணி வாசகர்க்குப் போதமுப தேசித்
தருந்துமமு தீந்தருளும் ஐயன்—திருந்துசிவ
யோகவுரு நாயகியோ டோங்கார மேயுருவாய்
ஏகவுரு வாகும் இறைவந்தான்—பாகமியல்

காவியம் போன்றே கயாரணியத் தாடரங்கன்
ஓவியம் போன்றே உறவந்தான்—ஆவியும்
ஐம்பொறியும் நெஞ்சும் அடிக்கண் கிடத்தினர்க்குச்
செம்பதுமை சேவகம் செய்விக்கும்—உம்பர்பிரான்
வந்தான் திருவீதி மாதரீர் போற்றுதும்யாம்
பைந்தார் தருவனே பார்ப்பமென—வந்தாள்
அவனுருவ நோக்கி யவன்மயமே யாகி
நவனுருவ மெய்தியே நாணம்—தவலுறவே
தேர்முன் விழுந்தாள் தெருவென் றறியாதே
கார்முன் மறைந்த கதிர்மதிபோற்—சோர்குழலில்
தன்னன் முகமறையத் தன்னை மறந்தொழிந்தாள்
மன்னன் முகமலர்ச்சி வாய்த்ததோ—என்னவோ
யாரறிவர் அன்னாள் இருந்தநிலை யெம்மண்ணல்
ஊரறியான் பேரறியான் ஒன்றறியான்—சீரறியான்
தன்னையே யெண்ணித் தளர்ந்த மகளையிப்பால்
என்னையே என்னையென ஏனையோர்—மன்னையே
ஓதி யுளமுருகி யொன்றுமுண ராதிருக்கப்
பாதி மதியணிந்த பண்ணவன்—வீதியிலே
பாடுவார் ஆடுவார் பார்வைக்கு நேரிலக்காய்
ஆடுவான் ஆக அகல்கின்றான்—ஏடுலாம்
கல்விகலை வாழ்வுநெறி கற்றபல தோழியரும்
செல்விமனச் சோர்வு தெரிந்தணைந்தார்—வல்விலெனச்
செங்கரும்பை யேற்ற திருவாளன் செய்கையோ
அங்கவன்றன் அம்புமழை ஆற்றலோ—மங்கைநலார்
போர்ப்படையாய் மற்றவன்பின் போந்த திருக்கூத்தோ
தேர்ப்பரியாய்க் கிள்ளை செலுமழகோ—சீர்ப்பருவம்
தோழனாய் வந்த துணைமையோ யாதொன்றும்
யாழினான் கூத்தன் இறைமதியான்—ஆழியிடை
எல்லையிலா ஆழத் திலங்கு மமைதியென
வில்லெனவே வந்தமலை மேருமுடி—சொல்லும்

அரிய அமைதியென ஆரா வமுதாம்
பெரிய நடமன்னன் பேர்ந்தான்—கரியகளத்

தெம்பெருமான் எப்பொருட்கும் எப்பற்றும் இல்லாதே
உம்பரெலாம் போற்ற உலாவருவான்—நம்பனவன்

பற்றுள்ளம் உள்ளானேற் பாவாய் பரவசத்தாய்
முற்றுள்ளம் சோர்ந்து மொழிமறந்தாய்—கற்றுள்ள

எல்லா மறந்தாய் எதிர்வந்த கூத்தாடி
நில்லா தெழுந்தருளு நீர்மைகண்டும்—நல்லாய்

மயங்கி யுணர்விழந்து மண்மேல் விழுந்தாய்
இயங்கி யகலுமிவன் எல்லா—உயங்கேல்

எனவுரைக்க நாவிலனே ஏந்திழாய் நீயே
மனமுரைக்க வந்தும் மறுகில்—இனமுரைக்கும்

ஏச்சுரையும் சார இகழ்ந்தே நடக்கின்றான்
பேச்சுரையும் இல்லையோ பிச்சனுக்கே—தாய்ச்சிமுன்

நெஞ்சம் தளர்கின்றாய் நெற்றி விழியுளன்காண்
நஞ்சம் களத்துளமை நாதன்காண்—வஞ்சம்

அறியாத நின்னை யகலத் துணிந்தே
குறியாத கூத்தன் குறித்தான்—நெறியோராய்

சூதோ பிறவிதொடர் துன்பவினைச் சூழ்ச்சியோ
யாதோ வறியே மெனவிசைத்தே—மாதே

சிவசரிதம் கேட்டும் தெளிவுற்றா யன்றே
தவசரிதர் வாழ்வும் தவமும்—சுவசரிதை

உள்ளே புகுமா றுயர்வாழ்வு வாழ்ந்தனையே
வெள்ளேறு வேண்டும் விமலன்பாற்—கொள்ளையன்பு

கொண்டனையே காதற் குறிப்போ மொழிபகராய்
மண்டனையே நோக்கி மறிகின்றாய்—பெண்டனையே

வேண்டாத பித்தனை விட்டு மனைநோக்கி
ஆண்டானை நெஞ்சத் தகம்வைத்தே—தூண்டா

விளக்கே வழிபடலாம் வீட்டின்பம் காண்போம்
துளக்கே யிலாத சுடர்காண்—அளக்கரிய

மாற்ற மனங்கடந்த வாழ்வுகாண் பேரின்பம்
ஆற்ற வருளும்பா லாழிகாண்—நாற்ற

இதழி விழையுமெனின் எம்பெருமான் நின்வாய்
இதழின் வயமாமென் றெண்ணேல்—கதழுமண

மத்தமலர் சூடுமெனின் மந்தமதி நின்மனத்துப்
பித்தமகல் தோழமையும் பேணுமோ—சுத்தமய

சித்தத்தை மீறித் திரியும் செயலானே
அத்தத்தை வேண்டி யழுவாயோ—அத்தம்

அவனே யொளியவனே அன்பு மவனே
அவனே யெலாமென் றறியாய்—அவனே 795

படைத்தும் அளித்தும் படைத்தவுயி ரெல்லாம்
துடைத்தும் மயக்கியும் சோர்வு—துடைத்தே

அருளியு மாட்கொள்ளும் ஆட்டத்தைக் காட்டத்
தெருவழி வந்தான் தெளிவாய்—ஒருவரையும்

வேண்டான் வெறுனே விருப்பு வெறுப் பின்மையால்
ஈண்டான் அவணிருப்பான் எங்குமுளான்—தீண்டான்

கழல்பணிக நம்மனைக்கே காரிகையே காமச்
சுழல்தவிரப் போதியெனச் சொற்றூர்—தழல்விழுந்த

பூப்போன்றே வாடிப் பொருமிக் கரைந்துருகி
ஏப்போன்றே நீள்விழியை ஏவியே—காப்பானே 800

காவானே வென்றே கரைந்து கழல்வைத்து
நாவானே நாமம் நவின்றுசென்ருள்—பாவாழும்

**தெரிவை**

காமக் கலையின் கணக்கனைத்தும் கண்டுணர்ந்து
சேமத் திருந்த தெரிவை நல்லாள்—வாமத்

திறைவியோ டீசன் இருந்ததல மெல்லாம்
குறைவறவே சென்றுவந்த கொம்பர்—மறைமுழங்கும்

வேதியரைக் கண்டால் விழுந்து வணங்குபவள்
வாதியரை யென்றும் வணங்காதாள்—பாதிமதி

சூடும் பரனே துறவியரென் றெண்ணுவாள்
ஆடும் பரனுருவை ஆதரித்தாள்—நாடும் 805

நகரும் பணியும் நடனகலை கற்றே
புகழும் பெருமையும் பூண்டாள்—மிகவுயர்ந்த
தில்லைக்கண் காளி திருக்கூத்து வாதுபுரிந்
தெல்லைக்கண் நிற்கும் இயல்தெரிந்து—சொல்லைக்கொண்
டெம்மானை யெய்தலா தேங்கும் சுருதியைப்போல்
நம்மானை நாட்டியத்தா னானெதிர்த்தல்—அம்மா
இயலுமோ வென்றே யிரங்கி யிருந்தாள்
உயலுமோ வேண்டும் உளத்தாள்—மயலுலாம்
காமக்கள் ளாட்டயர்ந்து காலமெலாம் போக்கியபின்
ஏமப் பொருளைநினைந் தேங்குநர்போல்—சாமத்தாற்
பாடப் படுவானைப் பாடலாற் பற்றவெண்ணி
வேடப் பொலிவு மிகப்பொருந்தி—ஆடற்
குருவரனை யாழிசைத்துக் கூத்தாட்டு வானை
மருவலரி தென்றுணர்ந்தும் வண்மை—யுருவுடையான்
ஏற்பா னெனையும் இருவரை யேற்றதுபோல்
நூற்பா லறிவரிய நோன்மையான்—மாற்கோர்
திகிரி யருளுபிரான் தேவதே வேசன்
சிகரி முடியிருந்த செல்வன்—பகலும்
இரவு மடிச்சியேன் ஏங்குவது கண்டும்
கரவு கருதிக் கருணை—விரவிலனே

எவ்வண்ணம் எம்மான் எனக்கே இனியனாய்
செவ்வண்ணம் ஒன்றவே செய்குவேன்—அவ்வண்ணம்
என்பால் இலையே எனதுவணம் நெஞ்சநிலை
மன்பால் இலையே மறைமேலான்—அன்பான்
உருகுவார் உள்ளே ஒளிப்பான் ஒளிர்வான்
பருகுபே ரின்பம் படைப்பான்—தருகுவான்
வேண்டிய வேண்டிய மேன்மையெலா மென்பரே
தேண்டிய பாவையெனைச் சேரானோ—ஈண்டிய
மெய்யன்பர் கண்டுருக வீதிவாய் வந்தானாம்
பொய்யன்பர் காணவும் போதருமாம்—ஐயன்பால்

யானும் குறுகும் இசைவு பெறுவேனே
தானும் எனதுளத்தே தாண்டவங்கொள்—கோனாய்
விளங்குறுமோ வென்று மிகநினைந்து நெஞ்சக்
களங்க மகற்றும் கடவுள்—களங்கமுளான்
என்றெண்ணி ஞானியரை யீடிலா யோகியரை
நன்றெண்ணி மெய்த்துறவு நாடுநரைச்—சென்றண்மி
யாதுரைத்தீர் ஐயன்மீர் எம்பெருமான் செய்கையெலாம்
வாதுரைத்துக் கேட்கும் வகையினவோ—தீதரைத்த
நெஞ்சகத்தே கண்டு நினைந்துருகும் தன்மையவோ
அஞ்செழுத்தே யோதி அடைவனவோ—வஞ்சமற்றீர்
சொல்லுமொழி யேற்கத் துணிந்தடைத்தேன் கூத்தனையே
புல்லுநெறி யாய்ந்து புகலுதிரால்—வெல்லுவதே
வேண்டும் விவாதம் விளைப்பவரை விட்டொழிந்தேன்
நீண்டு நிமிர்ந்தழலாய் நின்றானை—ஆண்டவனை
நேரியலா னெஞ்சுள் நிறுத்தினேன் போகவிடேன்
ஆரியமோ பைந்தமிழோ ஆய்ந்துணராப்—பேரியலான்
ஞாலம்வாழ் மாந்தர் நல்வாழ் வுறநினைந்தே
மூலமா முன்னூல் மொழிந்தனனும்—சாலவே
அந்நூற் பொருள்துருவி யாய்ந்துணர்ந்தே சான்றோர்கள்
செந்நூற் றிறம்பலவும் செய்தனராம்—அந்நூலுள்
நன்னூற் பொருடெளியும் ஞானியருள் மேம்பட்ட
தொன்னூற் குறுமுனிபோற் றோன்றியே—பன்னூற்
பொருட்கேள்வி பெற்றே பொருளருகு சாரும்
அருட்கேள்வி ஞானத் தரசாய்—மருட்கேள்வி
இல்லாத் துறவரசர் என்றுநுமை யாதரித்தேன்
சொல்லாற் றுணிபுணர்த்திச் சொல்லுவீர்—எல்லார்
மனைக்கும் வருதிரென வாயா னழைத்தே
நினைக்கும் விருந்து நிரப்பி—அனைக்கும்
எனக்கும் மனத்தே எழுமையம் போக்கிக்
கனக்கும் பொருள்விளங்கக் காட்டி—மனக்கமையும்

மார்க்க மருடிரென வாயார வேண்டினுள்
பார்க்க ணுளவே பலதலங்கள்—யார்க்கும்

எளியனும் எம்பெருமான் ஏற்ற தலத்துள்
ஒளியினுல் மிக்க துரைப்பீர்—அளியினுல்

எம்பெருமான் மேதகவை யானுணரக் கூறுவீர்
உம்பர்பிரான் போன்றே யுளீரென்ருள்—வம்பின்

வழக்குக் கிழக்கும் மடவரலை நோக்கிக்
கிழக்குக் குடக்குக் கிளர்தெற்—குழக்கும்

வடக்கும் புகுந்து மறைப்பொருளை நோக்கி
நடக்கும் துறவு நடையேம்—அடக்கும்

பொறியினே முள்ளத்தே போந்து நிரம்பும்
குறியினேம் கொள்கையேம் கோணில்—நெறியினேம்

எங்கும் இருப்பானை யாவும் அறிவானைப்
பொங்கும் திருவருளின் பொன்விளக்கை—இங்கும்

வணங்கிப் பராவி வழுத்தவே வந்தேம்
இணங்கித் தொழும்பர் இசைக்கும்—மணங்கெழும்

ஆத்தன் திருக்கூத்தின் ஆனந்தக் காட்சியையும்
பார்த்தன் புருகிப் பணிந்திட்டேம்—நீர்த்தன்று

எனினும் நினதுவினு வேற்கும் விடைதான்
முனைவன் அருளால் மொழிவேம்—புனிதன்

உறையுந் தலமெல்லாம் ஒப்பென்றே கோடல்
நிறையும் அறிவென்று நேயம்—குறைவின்

மனத்தினர் கூறும் வழக்குளது; மேலும்
தனத்தினுன் மிக்கோரைச் சான்ருேர்—இனத்திலே

சேர்த்தல் கருதும் திறம்போற் சிவமிருக்கும்
தீர்த்த தலங்களுட் செம்மையாற்—பார்த்தவன்பர்

தொன்மையான் மிக்கவற்றைத் தூய்மையின வென்பதூஉம்
வன்மையான் மிக்கவற்றை வாழ்த்துவதூஉம்—இன்மையால்

தேடுவா ரின்றிச் சிவமே தனித்திருக்கும்
பாடுவா ரில்லாப் பதிகளையே—நாடு

மதியாத் தலங்களென்று வாய்கூசா தோதி
விதியாச் சிறுமை விளம்பிக்—கதியா

நரகவாழ் வெய்த நயப்பதூஉம் செய்யார்
உரகமே பூணும் ஒருவன்—சரமசரம்

எல்லாம் நலம்பெறவே எங்கும் எழுந்தருள்வன்
வல்லான் அவனை வணங்குநெறி—செல்லார்

அவனுருவ மெய்யார் அவனருளை யெய்தார்
அவனருகு செல்லவும் ஆகார்—அவனுறையும்

கோயிலுளே தாழ்வுயர்வு கூறுவது பாவமே
ஆயினுமே யொன்றுரைப்ப லாயிழாய்—தூயதிருப்

பொன்னம் பலமுகந்தான் பூங்கோயி லாரூரும்
சின்னம் பலவிசைக்கச் சேர்ந்துளான்—அன்னம்

பயில்மருத வாலவாய் பண்டே புகுந்தான்
வெயிலுகந்த பிள்ளை விளங்கும்—எயில்சூழ்

பெருந்துறையுள் வாழ்ந்தான் பிறப்பொழிய வென்றே
வருந்துதவ மாதவர் வாழ்த்துப்—பொருந்துதிரு

ஆவடு தண்டுறையு மாதரித்தான் கச்சியிலே
மாவடி நின்று வயங்கினான்—சேவடியை

ஆதரிப்பார் நெஞ்சுருக ஆனைக்கா மேவினான்
பாதரிப்பான் நெல்லைப் பதிவாழ்ந்தான்—நாதரிக்கும்

வேதமே போற்றிசைப்ப மேதக்க தேவைநகர்ப்
போதமே யாகப் பொருந்தினான்—நாதனவன்

காசியிலே வாழ்கின்றான் கல்லிமயக் கேதார
மாசிறலம் வேண்டி மருவினான்—தேசு

சிறந்த பசுபதியாய்த் தேவரே போற்றச்
சிறந்த இமதலத்தும் சேர்ந்தான்—மறந்தமறை

காட்டும் பொருளாய்க் கயிலைவரை மேவினான்
நாட்டும் கயாரணிய நண்ணினான்—ஓட்டும்

குறையினார் நெஞ்சிற் குடிகொண் டிருப்பான்
நிறையினார் நெஞ்ச நிலைப்பான்—பொறைமலியும்

நெஞ்சுடைய தாயே நினைவுருக்கும் வள்ளலவன்
அஞ்சுமுக மஞ்செழுத்தா னுய்ந்துணரின்—விஞ்சு நலம்

ஈயா திருக்கும் இருப்பவனுக் கில்லையே
வாயான் மனத்தான் வழுத்துநர்க்குத்—தூயான்

அருகன் அணியன் அரசன் அமைச்சன்
மருகன் குரவன் மதலை—பெருகும்

அருளின் பெருக்காய் அகத்திலே தோன்றும்
பொருளின் பெருக்கன் புலவன்—மருளினர்க்கே

சேயான் அறியான் தெரியான் அரியானும்
பேயான் அணுகான் பிரிவானும்—வாயாத

வாழ்வாம் இருளாம் மயக்காகும் தாக்கவரும்
போழ்வாம் இழிவாம் புலைமையாம்—ஆழ்வாம்

அவனை அறிதல் அடைதல் எளிதன்
றவனை யருமறையும் ஆய்ந்தாய்ந்—துவமையால்

ஓதிற்றே யன்றி உரைக்கத் துணியவிலை
சாதித்தே பேசும் சதுரரில்லை—வாதித்தே

இன்னன் இவனென் றிசைக்கத் துணிபவரும்
மன்னன் கழலாணை மண்ணிலிலை—பொன்னம்

பலத்தான் பெருந்துறையான் பத்தருக் கன்பன்
நலத்தான் திறமறிவேன் நானே—தலத்தான்

தலமில்லான் வாழ்வில்லான் தந்தைதா யில்லான்
குலமில்லான் யாவருக்குங் கோமான்—நலமில்லான்

அல்லன் வணங்கார் அகத்தும் நிலவுகின்றான்
நல்லன் எனவறிவர் நாட்டியுளார்—நல்லார்

அணியார் அவன்றன் அருளுருவை நன்றே
துணியார் உரைக்கத் துணிந்தேன்—மணியானும்

பொன்னனும் செய்தமைத்த பொற்புமலி நற்பணியைக்
கன்னன் மதிப்பிட்ட காரியம்போற்—பொன்னேயோ

ஆயிரத்தெட் டண்ட மமைத்துள்ள நம்பெருமான்
ஆயிரத்தெட் டாலயங்கள் ஆள்கின்றான்—மாயிரு

ஞாலத்தே யின்னும் நலமனத்தோர் செய்விக்கும்
கோலத்தே யாங்காங்குக் கோயில்கொள்வான்—சீலத்தே

நின்று நிலைத்த நினைவினர் உள்ளத்தே
நன்று நிலைத்து நடமிடுவான்—குன்றுசிலை

கொண்ட சிவத்தையவன் கோலங்கொள் ஊர்கடொறும்
கண்ட நலத்தோர் கலியுகத்தில்—எண்டவ

இல்லை யெனவே யிசைக்கத் துணிகின்றேன்
சொல்லை யிறந்த துணிபுக்கும்—எல்லையுண்டோ

எந்தத் தலத்தே யிருப்பவனை மிக்கானென்
றெந்தத் திறத்தா னிசைப்பதே—மந்த

மதிகட்கும் ஞானியர்க்கும் வாழ்வருளும் வள்ளல்
துதிகொட்கும் நற்றலங்க டோறும்—கதிபெட்கும்

மக்களுக்கு வாழ்வை வழங்கவே வீற்றிருப்பன்
தக்கவர்க்குத் தன்னையே தந்துவப்பன்—புக்கதலம்

யாதேனும் ஒன்றுள் இதயத்தை யூன்றுதலே
தீதேதும் இல்லாச் செயலென்றே—மாதேயாம்

ஓதத் துணிந்தேம் உனக்கெங்கு நெஞ்சுருகும்
வேதத் துணிபங்கு மேவுமே—சாத

மரணமெனுந் தொந்த மறைய வவனைக்
கரணமொரு மூன்றுனுங் காண்போர்—சரணமவன்

என்றமெய்ம்மை நன்குணர்வார் எத்தலத்தும் எப்பொழுதும்
நின்றமெய்ம்மை யொன்றென்று நெஞ்சார—நன்றறிவர்

சோத்தம் உரைப்பர் தொழுது பணிபுரிவர்
ஆத்தன் அவனென் றறிவரே—சீர்த்த

திருக்கா விரிநதியின் தென்கரையி லீண்டை
இருக்கா தியமறைகள் ஏத்த—உருக்காண்

கயாரணிய நாதனையும் கண்கள்களி கூர
வயாரணிய மாகு மனத்தாற்—சயாரணியம்

வாழும் பரம்பொருளாம் வள்ளலென்று தேர்ந்துணர்ந்து
போழும் வினையராப் போதுவரே—வீழும்

மனத்தளியை யன்றோ மகிழ்கின்றான் தேவன்
தனத்தளியைச் செல்வந் தழைக்கும்—இனத்தளியை

வேண்டுவா னென்றே விளம்பல் பழுதன்றே
ஈண்டுளான் யாண்டிலான் எம்பெருமான்—நீண்டபுகழ்ச்

சேரமான் போற்றத் திருவா ரஞ்சைக்களத்தில்
ஈரமாய் முன்வந்தான் என்பரே—சாரமாய்

மாமறைகள் தேடும் மறைக்காட்டை நீங்குமோ
மாமயிலை தன்னை மறக்குமோ—ஏமமுறும்

ஒற்றியூர் பேரூர் உவவா தகலுமோ
வெற்றியூர் வேறே விழையுமோ—பற்றிலான்

ஆதலால் எங்கும் அமர்ந்தும் அமரானும்
காதலால் நாமவனைக் காணலாம்—மாதராய்

நெஞ்சை நிறுத்தி நினைத்தி யெனவுரைத்தார்
அஞ்சை யடக்கு மருந்துறவோர்—பஞ்சை

அடியிலே தோய்த்தே அகம்படித் தொண்டின்
வடிவிலே நின்ற மகளிர்—நொடியிலே

கூத்துடையா னம்பாற் குறுகுகின்றான் என்றளவில்
ஏத்துடையாள் மெல்ல எழுந்திருந்தாள்—கோத்திருகை

சென்னிமே லேற்றிச் சிவனடியார் மெய்த்துறவின்
சென்னிமே னின்ற சிவத்துருவைப்—பன்னி

விடைகொடுத்த பின்புதிரு வீதியுற வந்தாள்
நடைகொடுத்த பாங்கியர்பின் னாகு—விடைபிடித்த

கோலப் பதாகையான் கொல்புலித்தோ லாடையான்
காலற் கிறுதிதருங் காலுடையான்—நீலக்

கடன்மே லெழுந்த கதிரவன்போற் றேர்மேல்
நடன்மே னயந்தே நணுக—உடன்மேல்

உயிர்மே லவனை யுறுவித்த பாவை
அயிர்மேல் வரலாகும் ஆற்றை—மயிர்மேவும்

வேணிமே லேற்று விளையாடுந் தேவன்முகம்
நாணியே நோக்கி நலங்கெட்டாள்—ஆணிலே

நின்னைப்போ லுண்டோ நிலத்தே யிளமகளிர்
என்னைப்போ லுண்டோ எனவிசைத்தாள்—தன்னை

எனக்கே யிவனருள்க யானிவற்கே யாக
மனக்கே பிறிதொன்று வையேன்—இனக்கே

இனியான் இனியேன் இனங்கடந்த வாழ்வை
உனியாள் எனவே யுறுவேன்—தனியே

இருந்துதவ நோற்ற இமயமகள் போன்றே
திருந்துதவ நோற்பான் செலுவேன்—மருந்தோடு

மந்திரமும் ஆண்டபெரு வள்ளல்திரு நாமமே
தந்திரமும் அன்னோன் தவப்பணியே—இந்திரனே

வந்தழைப்பி னென்னே மனித்தர் அழைப்பினென்னே
சிந்தைபிறர் பக்கந் திருமாதே—பந்தம்

அவற்குளதே லென்பாலஃ தாகுக வின்றேல்
உவர்க்கு முலகவாழ் வோய்க—சிவற்கே

உரிய நிவேதனத்தை ஊர்நாய் தொடுமோ
அரிய திருக்கோவை ஆர்வேன்—பெரியன்

திருவா சகமும் செவிமடுப்பேன் சித்தம்
ஒருவா திருக்கும் உறவை—மருவா

மகிழ்வேன் வணங்குவேன் வாழ்த்துவேன் வாழ்த்திப்
புகழ்வேன் பொருந்துதற்கே போவேன்—இகழ்வாரை

நோகேன் அவர்க்கெனது நோக்கும் விளங்குவதோர்
சேர்கேன் எனக்குரிய தேவனை—ஆர்கேன்

திருநாளிஃ தென்று திருவா திரைநாள்
வருமான் வழியை மறிப்பேன்—உருவானான்

ஆனந்தக் கூத்தினில்மூ வாயிரவர் போற்றவரும்
ஆனந்தத் தேனை யணுகுவேன்—ஆனந்தம்

சேர்வேன் எனவுரைத்தாள் தேர்முன் குறுகினாள்
வேர்வீழ் மரம்போன்று வீழ்ந்திட்டாள்—பார்மேல்

உணர்விழந்து மாய்ந்த உருப்போற் கிடந்தாள்
மணமிழந்த மாலையென வாடிக்—குணமிழந்து

பேச்சிழந்து நின்ற பிடியைத் தனிவிட்டான்
மூச்சிழந்த மூர்த்தி முடுகினன்—ஏச்சிதுவென்

றெண்ணியே பாங்கிய ரேந்தி யெடுத்தவளை
மண்ணிலே வீழா வண நடத்தி—விண்ணிவரும்

மேகம் படியும் வியன்மா ளிகை யகத்தே
சோகம் குறையத் தொடர்ந்தனரா—ஆகநிலை

நோக்கியே பொற்கட்டில் நொய்யமென் பஞ்சணையில்
ஆக்கியே பக்கல் அமர்ந்திருந்தார்—தேக்கிய

## பேரிளம்பெண்

பேரிளம்பெண் வாழும் பெருவீதி போய்ப்புக்கான்
பாரிடங்கள் சூழ்ந்து பணிபுரிய—யாரிடமும்

வேட்கைவெறுப் பில்லாதான் வேதமொடு தேவாரம்
கேட்கநடஞ் செய்துவப்போன் கிள்ளைமொழி—நாட்கமலம்

வாழு மகளிர் வணங்குமிரு தாண்மலராள்
ஆழு முளனே டருகமர—ஏழுலகும்

தேடிப் பெறலரிய செல்வ மிதுவேயென்
றோடித் திரியு முளமடக்கி—நாடித்

திருவா சகமும் திருக்கோவைத் தேனும்
ஒருவா சகமாய் உரைத்தே—கருவாய்

அழுத்தாதே யாண்டருளு மண்ணலே கையில்
எழுத்தாணி யேந்தி யெழுதப்—பழுத்ததவத்

தில்லைவா ழந்தணர்தாம் சேரத் திரண்டுவந்தே
எல்லையிலா மாதவத்தீர் இப்பாட்டுட்—சொல்லி

அமைத்தபொருள் யாதோவென் றுதரத்தாற் கேட்க
இமைத்த லிலாதே யெதிரே—சமைத்திடுபொன்

அம்பலமே காட்டி யதனுள் விளக்கமுறும்
அம்பரமே பாட்டி னரும்பொருளென்—றிம்பருளார்

செய்த தவச்சிறப்பின் செல்வம் திரண்டதென
உய்தி யுரைத்தருளும் உத்தமர்—மெய்தெளியும்

மாணிக்க வாசகனர் வாக்குமன மெய்தரிய
ஆணிப்பொன் மன்றேன் அரங்கபுரக்—காணிக்கு

வந்தசெயற் சான்றுரைக்க வந்தவர்போ லோர்மருங்கு
சந்தைமறை கேட்டுத் தளிர்த்துவரச்—சந்தமொடு

பண்ணமையும் தேவாரம் பாடல்வல வோதுவார்
மண்ணடையும் பேரமுதை வாக்கிவர—விண்ணடைவார்

அன்றிசைத்த பொன்வண்ணத் தந்தாதி ஞானவுலா
நன்றிசைத்த பாவை நறும்பனுவல்—நின்றிசைத்த

பல்லாண்டு கோத்தும்பி பண்பார் திருச்சாழல்
செல்லாண்ட சேந்தன் திருவிசைப்பா—சொல்லாண்டு

பண்டமையு மெய்யருளின் பாடல்களின் சாயல்வரக்
கண்டமையும் செய்யுள் கனிவுளத்தூற்—கொண்டருளும் 945

எம்பிரான் சேவடிக்கே யேற்றுமுத்து சாமியையன்
தம்பிரான் தோழரெனத் தான்வரவே—நம்பிரான்

பொல்லாத பிள்ளையார் போந்தெடுத்துத் தந்தருளும்
இல்லாத வோர்பொருளு மில்லாத—சொல்லானே

தன்னையே காட்டும் தமிழ்மறைக்குத் தன்செவியை
முன்னையே நீட்டி முடுகுகையிற்—பின்னைபிரான்

ஆசுகமாய் எய்த அரும்பொன் மலைவில்லாய்
வாசுகியே நாணாய் வகுத்தருளித்—தேசுதரு

தேரேறிச் சென்று திரிபுரத்தைப் பண்டெரித்தோன்
தேரேறி வந்த சிறப்பதனைப்—பாரீரோ 950

மக்களே யாதுசெய்தீர் வம்மினோ வம்மினெனப்
புக்க துறவரசர் போதிக்க—மிக்கது

வீணையோ கூத்தேயோ வேடத் திருப்பொலிவோ
ஆணையோ அம்மா அறியோம்யாம்—கோணையுடைத்

தூதி யறுதி யளவைகட் கப்பாலான்
சோதி திறமறிந்து சொல்லுவதே—நீதிநெறி

நூலறிவின் மேம்பட்டு நுண்பொருளைத் தேர்த்துணர்ந்து
வாலறிவன் பாத மலர்முடியின்—மேலுறவே

நோலாதோர் வாழ்வென்னே நோன்பென்னே மாண்பென்னே
தோலாதே வெற்றிதரு சொல்லென்னே—மேலாய 955

குஞ்சித பாதத்தைக் கும்பிட்டே வாழ்துமென
அஞ்செழுத்தை யோதி அடைதுமென—நஞ்சணிவோன்

கண்மணியை நீற்றைக் கவினுப் புனைதுமென
விண்மணியே சான்ரு விளம்புவார்—கண்மணியாம்

ஆண்டியே யாகும் அரசே வருகின்ருன்
காண்டிரா லென்றே கரங்குவிப்பார்—ஈண்டிய

அன்பினர்முன் சென்ருள் அணுகினுள் கூத்தனை
இன்புணர்வு நெஞ்சத் தெழுந்துறவே—நன்புடைய

எட்டெட்டென் ருேதும் இனிய கலைமுழுதும்
மட்டிட்டுத் தேறும் மகளிர்வரக்—கட்டங்கன்

வந்தே நெருங்கினுன் மாதரீர் நெஞ்சுருகி
நைந்தே யவற்குரிய நாயகியாம்—இந்தாம்

முகத்தாள் பணிபூண்டு முன்னே நடப்பேன்
அகத்தான் அவனை அடைவேன்—மிகத்தான்

குடிமை யிழந்தே குறையுறுவ னேனும்
அடிமை யிவனுக்கே யாவேன்—மிடிமைவினை

வந்தாலும் போகேன் வணங்கியே வாழ்வுறுவேன்
நொந்தாலும் பெண்டிர் நுமையணுகேன்—வந்தான்

நடத்தான் தெருவிடை நங்கண் குளிர
இடத்தா மிறைவியொடு மென்ருள்—கெடத்தான்

மறந்தாள் மனையை மறந்தாள் நிலத்தை
மறந்தாள் பிறப்பை மறிந்தாள்—இறந்தாளோ

பெண்ணரசி யென்றுகவல் பெண்டிர்பலர் சூழநின்றே
அண்ணல்திரு முன்னின் றவசமுற்ருய்—மண்ணவரும்

வானவரும் கண்டு மயங்கக் கலைகாட்டி
ஞானகுரு வாகும் நலங்காட்டித்—தானதன்மம்

ஓங்கு கயாரணியம் உள்ள மனித்தர்மனம்
தேங்கு சிவத்தின் திறங்காட்டி—யாங்கும்

ஒளியே விளங்க உயிரே தளிர்ப்ப
அளியே அலம்ப அருளே—வெளியாக

நன்மை சிறப்ப நலவர் சிறப்பெய்த
இன்மை யொழிய எழில்வளர—வன்மையிலார்

வல்லவரே யாக வலியா ரெளியார்க்கு
நல்லவரே யாக நயம்பயின்ற—சொல்லவரே

பொன்பொழியும் வாழ்வு பொருந்தப் புலமைநெறி
அன்பொழுகு மெய்ம்மை அளித்துதவ—இன்பொழுகும்

ஆடவரும் பெண்டிரும் ஆனந்த தாண்டவன்போற்
பாடவமே தோன்றப் பலகலையும்—நாடவரும்

வாழ்விலே யோங்க வழிகாட்டு மாமறையை
யாழ்வலான் தானே யிசைக்கின்றான்—சூழ்விலாய்

பெண்ணினமே நின்னைப் பெரிதிழிக்க வாய்வந்த
கண்ணியமே யின்றிக் கழறினையே—விண்ணோ

வணங்க வருமேனும் வாயில்வந்தா லன்றிக்
குணங்கள் இலாதாற் குறுகேன்—இணங்குவார்

தம்முள் ஒருத்தியாய்ச் சாரே னெனவுரைத்தாய்
எம்முன் இறையை யிழித்துரைத்தாய்—செம்மை

உருவத்தோ ருள்ளத் தொளித்த சிவத்தை
அருவத்தோ னென்றாய் அவனே—பருவத்தால்

மிக்கேனை நாடாது மெல்லியபூம் பிஞ்சாகும்
இக்கே நிகர்க்கும் இளமழலை—உக்கசிறு

பேதை பெதும்பை பிடிக்கப் புறப்பட்டான்
காதை வளரமங்கை காதல்கற்றான்—தூதை

மடந்தைக் கிசைக்கவரு மானமிலாப் பித்தன்
திடந்தா ழரிவை தெரிவை—இடந்தேடிச்

சென்றான் திரிந்தான் திருவீதி கூத்திடுவான்
நன்றாய் நமையுமவன் நண்ணுகவோ—என்றாயே

நின்னையிவன் வேட்டு நினதுமனை நேடிவரும்
என்ன வுரைத்தனையே யேந்திழாய்—பொன்னமலை

வில்லான் திருமுன்னே விற்கரும்பன் கைக்கணையால்
எல்லா மிழந்தனையே யென்செய்தி—எல்லா

மதுவேட்டு வண்டர் வருவதுண்டு தேனும்
அதுவேட்கை யேறி அறிவு—புதுமையினால்
மாய்ந்தழிய வண்டின்முன் வந்த கதையுண்டோ
ஆய்ந்தறிதி தேனும் அமலனவன்—தோய்ந்தவண்டாம்
நின்னையுற நேருவனோ நீமயங்கி வீழ்ந்தனையோ
அன்னையவன் மாழ்குற் றழிந்தனனோ—முன்னைச்
சுரும்புமலர் வாளியினைச் சுட்டெரித்தான் யாரே
அரும்புநகை கொண்டே அவுணர்—புரம்புகைத்து
நீருக்குந் தேவன் நினைவேண்டி யெய்துமோ
வேருக்கும் வேள்விபுரி மேதகவால்—ஆருக்கும்
வேணிப் பெருமான் விழுப்ப முணராதாய்
மாணிக்கம் ஈரும் வயிரமவன்—பாணிக்கு
வாய்ந்த வலிமை மதியாயே தாருவனம்
ஏய்ந்த முனிவர் இழிந்தகதை—ஆய்ந்திலையே
அன்னார் மகளிர் அவன்முன்னே சீரழிந்த
இன்னா வரலாறு மெய்யாயே—பொன்னனை
மேனியான் போன்றே விளங்குகின்றா னாலும்
வானினான் கண்டாய் மதிகெட்டாய்—பானிலாப்
பாதம் பணிந்தவனைப் பற்றியதாற் பெற்றபேறு
ஏதம் உறுமிதயத தெண்ணுதியே—போதமய
உட்பொருளாய் நின்றே உலகை யியக்குமவன்
பெட்பிழந்த பெண்பாலைப் பெட்குமோ—கட்கினியன்
உள்ளத்துக் கூத்துவந்தான் உன்னிற் செவிக்கினியன்
பள்ளத்துப் பாய்புனல்போற் பண்புடையார்—கொள்ளக்
கொடுக்கும் திருவருளான் கும்பிட்டு வாழ்வார்க்
கடுக்கும் நலமெல்லாம் அன்னே—கெடுக்கும்
பொறியுணர்வு மாய்த்துப் புராரி புராரி
அறிவுருவ வள்ளலென்றே அண்டிக்—குறிபெறவே
நோற்பாய் அதுவேநன் னோன்பென்று நெஞ்சகத்தே
ஏற்பாய் எனவே இயம்பினார்—மேற்பாயும்

கோபுரம் கொண்டதன கோயிற் கயராணிய
மாபுரம் காண வருங்கூத்தன்—சோபுரத்து
வாணன் கலைபயின்ற வல்லான் கரச்செயலை
நாணன் தொடரவரு நல்லன்பர் – பேணும்
திருப்பணிபோ லேற்றுத் திருவருளே யோங்க
இருப்பணுகு மெண்ண மெழலும்—கருப்பமுறு
மெய்ப்பொருளின் பாட்டிசையும் வேதத் தெழுமிசையும்
பொய்ப்பொருளை நீத்த புலத்தலைவர் – மெய்ப்பணிவும்
ஞாலம் சிறப்படைய நன்மக்கள் நெஞ்சுருகக்
காலங் கடந்த கலைவிளக்கிக்—கோலம் 1005

அறிவ ரறிந்தடங்கி ஆனந்த மெய்த
மறியு மழுவும் வயங்கப்—பிறிவில்
இறைவி மகிழ இனியதிருத் தொண்டர்
நிறையு மனமு நிரம்பத்—துறைதோறும்
நீரினால் மிக்கபொன்னி நீடும் கயாரணிய
ஊரினான் போந்தா னுலா. 1008

## வாழ்த்து

நிலாமுடியன் அம்பலத்து நின்றதிருக் கூத்தன்
உலாமகிழும் வள்ளல் உளத்தே – நிலாவுறும்பேறு
எய்திய அன்பரினம் எப்பேறும் மிக்குறவே
மெய்திகழ வாழி மிளிர்ந்து.

# இந்நூலாசிரியர் இயற்றிய வேறு நூல்கள்

## அச்சானவை

1. மறைந்த மாநகர் } நாடகச் செய்யுள்
2. சிவாஜி விஜயம்
3. தம்ம பதம் பாலி மொழி பெயர்ப்பு
4. தமிழ்ப் புலவர் வரலாறு 1
5. ,, 2
6. ,, 3
7. பாண்டிய மன்னர் 1
8. ,, 2
9. சோழ மன்னர் 1
10. ,, 2
11. ,, 3
12. விஜயநகர வீழ்ச்சி
13. கட்டுரைத் தொகுதி
14. கட்டுரை இலக்கணம்
15. கலைமகள் துதி செய்யுள்
16. பெரியநாயகி பிள்ளைத்தமிழ் ,,
17. கம்பநாடர் பிள்ளைத்தமிழ் ,,
18. திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் உரை

## அச்சாகாதவை

| | | | |
|---|---|---|---|
| உரைநடை | இராமாயணத் திரிவேணி | 1,000 | பக்கம் |
| செய்யுள் | சங்கர விஜயம் | 2,400 | செய்யுள் |
| | சுந்தரர்புராணம் | 2,000 | ,, |
| | தேவி திருவாயிரம் | 1,008 | ,, |

| | |
|---|---|
| திருவள்ளுவர் பிள்ளைத்தமிழ் | 108 |
| சடகோபர் பிள்ளைத்தமிழ் | 108 |
| சங்கரர் பிள்ளைத்தமிழ் | 108 |
| கண்ணபிரான் பிள்ளைத்தமிழ் | 108 |
| இலங்கைப்பரணி | 2,400 தாழிசை |
| சூரசங்கராப்பரணி | 2,400 ,, |
| ஆஞ்சனேய புராணம் | 14,000 செய்யுள் |
| சமரச சித்தாந்த போதினி | 108 |
| பிரபந்தத் திரட்டு | 3,000 |
| புவனேசுவரி அந்தாதி | 108 |
| கண்ணகி வழக்குரை நாடகச்செய்யுள் | |
| உபநிடதம் | 12,000 அடிகள் |

## பிழைதிருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 8 | 10 | மேலைக் | மேலைப் |
| 8 | 12 | நயங்கொலிசால் | தழங்கொலிசால் |
| 17 | 6 | அம்மா | சும்மா |
| 25 | 23 | வருமிறப்பான் | வருபிறப்பான் |
| 34 | 5 | பொருவிழியாள் | பொருவிழியான் |
| 41 | 9 | நடையால் | நடையாய் |
| 49 | 10 | தோடர்புடையார் | தொடர்புடையார் |
| 56 | 10 | றறியாய் | றறிவாய் |
| 57 | 2 | மெருமையும் | பெருமையும் |
| 69 | 19 | பெற்றபேறு | பெற்றபே(று) |
| 69 | 20 | உறுமிதயத | உறுமிதயத் |